தொகுதி 6, இதழ் 20

ஏப்ரல் 16–30, 2026

இலவச விநியோகத்திற்காக

# நியூ இந்தியா சமாச்சார்













## நக்சல் இல்லாத புதிய இந்தியா

**2026, மார்ச் 31 :** நக்சல் இல்லாத இந்தியா என்ற கனவு நனவாகியுள்ளது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் வலிமையான அரசியல் உறுதியும், வளர்ச்சியை மையமாகக் கொண்ட தொலைநோக்குப் பார்வையும் நாடு முழுவதும் அமைதியையும் நம்பிக்கையையும் வளர்த்துள்ளன.

மின்–பதிப்புக்கு



பிரதமர் நரேந்திர மோடியின் வேண்டுகோள்

# உடல் நலத்தில் கவனம் செலுத்துங்கள்; சர்க்கரை மற்றும் எண்ணெய் பயன்பாட்டைக் குறையுங்கள்

ஒவ்வொரு மாதமும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து 'மனதின் குரல்' நிகழ்ச்சிக்காக ஏராளமான செய்திகள் வருகின்றன. தொலைதூரப் பகுதிகளில் வாழும் மக்கள் கூட எவ்வளவு ஆர்வத்துடன் இந்த நிகழ்ச்சியைக் கேட்கிறார்கள் என்பதை இது காட்டுகிறது. பொதுமக்களிடமிருந்து வரும் ஆலோசனைகள், இது வெறும் நிகழ்ச்சி மட்டுமல்ல, உரையாடலுக்கான ஒரு பொதுவான தளம் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. மக்களின் எண்ணங்களும் அனுபவங்களும் இந்த நிகழ்ச்சியை இன்னும் சிறப்பாக மாற்றும் முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கின்றன. மார்ச் 29 அன்று ஒலிபரப்பப்பட்ட நிகழ்ச்சியில், பிரதமர் நரேந்திர மோடி உடல் நலத்தில் கவனம் செலுத்துதல், சர்க்கரை மற்றும் எண்ணெய் பயன்பாட்டைக் குறைத்தல் உள்ளிட்ட பல முக்கிய தலைப்புகளில் பேசினார். அதன் முக்கியத் தொகுப்பு இதோ...

- **வளைகுடா நாடுகளுக்கு நன்றி:** தற்போது நமது அண்டை நாடுகளில் கடுமையான மோதல் நிகழ்ந்து வருகிறது. நம் நாடு முழுவதும் உள்ள லட்சக்கணக்கான குடும்பங்களின் உறவினர்கள் அந்த நாடுகளில் வசித்து வருகின்றனர். அங்கு வசிக்கும் ஒரு கோடிக்கும் அதிகமான இந்தியர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கி வரும் வளைகுடா நாடுகளுக்கு நான் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
- **வதந்திகள் குறித்து எச்சரிக்கை:** வதந்திகளைக் கண்டு ஏமாறாமல், விழிப்புணர்வுடன் இருக்குமாறு நாட்டு மக்கள் அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன். அரசு அவ்வப்போது வழங்கும் தகவல்களை மட்டுமே நம்புங்கள், அதன் அடிப்படையில் மட்டுமே செயல்படுங்கள்.
- **நாட்டின் வலிமை:** எப்போதும் போல, நாட்டின் 140 கோடி மக்களின் வலிமையால் கடந்த கால நெருக்கடிகளை நாம் எவ்வாறு வென்றோமோ, அதேபோல இந்த முறையும் இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து நாம் அனைவரும் இணைந்து வெற்றிகரமாக மீண்டு வருவோம் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்.
- **நீர் சேகரிப்பு இயக்கம்:** கடந்த 11 ஆண்டுகளில், 'நீர் சேகரிப்பு இயக்கம்' பொதுமக்களிடையே குறிப்பிடத்தக்க விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. இந்த இயக்கத்தின் கீழ், நாடு முழுவதும் சுமார் 50 லட்சம் செயற்கை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- **அமிர்த நீர்நிலைகள்:** அமிர்த நீர்நிலைகள் இயக்கத்தின் கீழ், சுமார் 70,000 'அமிர்த நீர்நிலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. பருவமழை தொடங்குவதற்கு முன்னதாகவே இந்த நீர்நிலைகளைத் தூய்மைப்படுத்தி பராமரிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.
- **கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம்:** 'ஞான பாரதம்' ஆய்வு நமது மகத்தான கலாச்சாரம் மற்றும் செழுமையான பாரம்பரியத்துடன் இயல்பாகவே இணைந்துள்ளது. நாடு முழுவதும் தற்போது பாதுகாக்கப்பட்டு வரும் ஓலைச்சுவடிகள் பற்றிய தகவல்களைத் தொகுப்பதே இதன் நோக்கமாகும். இதில் 'ஞான பாரதம்' செயலி ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. இந்த ஆய்வில் பங்கேற்க 'ஞான பாரதம்' செயலி ஓர் ஊடகமாக விளங்குகிறது.
- **மை பாரத்:** தேசத்தைக் கட்டமைக்கும் பொறுப்பை நிறைவேற்றுவதில் 'எனது பாரதம்' அமைப்பு முக்கியப் பங்காற்றி வருகிறது. இந்த அமைப்பு நாட்டின் இளைஞர்களைப் பல்வேறு ஆக்கபூர்வமான செயல்பாடுகளில் தீவிரமாக ஈடுபடுத்தி வருகிறது.
- **விளையாடுபவர் தழைத்தோங்குவார்:** "விளையாடுபவர் தழைத்தோங்குவார்" என்று நான் அடிக்கடி சொல்வதுண்டு. முன்பு பிரபலமாக இல்லாத விளையாட்டுகளைக் கூட நம் நாட்டு இளைஞர்கள் இப்போது ஆர்வத்துடன் ஏற்றுக்கொள்வதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.
- **நோயற்ற வாழ்வு:** ஒவ்வொருவரும் தங்கள் உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டும். உங்கள் சர்க்கரைப் பயன்பாட்டைக் குறைத்துக் கொள்ளுங்கள். சமையல் எண்ணெய் பயன்பாட்டையும் நாம் 10 சதவீதம் குறைக்க வேண்டும். இத்தகைய சிறிய முயற்சிகளின் மூலம், உடல் பருமன் மற்றும் வாழ்வியல் முறை சார்ந்த நோய்களில் இருந்து நீங்கள் விடுபட முடியும்.
- **கடல் வீரர்கள்:** நமது மீனவ சகோதரர்களும் சகோதரிகளும் வெறும் கடல் வீரர்கள் மட்டுமல்ல; அவர்கள் 'தற்சார்பு இந்தியா'வின் வலுவான அடித்தளமாகவும் விளங்குகின்றனர். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் மீனவர்களுக்கு விரிவான ஆதரவு கிடைக்கிறது. மீன்வளம் மற்றும் கடல்பாசி வளர்ப்பு துறைகளில் தற்போது புதிய கண்டுபிடிப்புகள் உருவாகி வருகின்றன. நமது மீனவ சகோதரர்களும் சகோதரிகளும் தற்சார்பு மிக்கவர்களாக மாறி வருகின்றனர்.
- **லட்சக்கணக்கான மரங்கள்:** ' தாயின் பெயரில் ஒரு மரக்கன்று' இயக்கத்தின் போது பொதுமக்கள் பங்கேற்கும் உணர்வு தெளிவாகத் தெரிகிறது. இந்த முன்முயற்சியின் கீழ், நாடு முழுவதும் லட்சக்கணக்கான மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.
- **சூரியசக்தித் தகடுகள்:** தற்போது குடியிருப்பு வீடுகளின் மேற்கூரைகளில் சூரியசக்தித் தகடுகள் பெருமளவில் பொருத்தப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, ஒரு சில வீடுகளில் மட்டுமே தென்பட்ட இவை மிகவும் அரிய காட்சிகளாக இருந்தன. இருப்பினும், இன்று 'பிரதமரின் சூரியசக்தி வீடு: இலவச மின்சாரத் திட்டம்' ஏற்படுத்திய தாக்கம் நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் வெளிப்படத் தொடங்கியுள்ளது.

'மனதின் குரல்' நிகழ்ச்சியைக் கேட்க இந்தக் க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

# NEW INDIA SAMACHAR

VOLUME 6, ISSUE 20 | APRIL 16-30, 2026

**EDITOR IN CHIEF**
DHIRENDRA OJHA
Principal Director General,
Press Information Bureau,
New Delhi

**CHIEF CONSULTING EDITOR**
SANTOSH KUMAR

**SENIOR ASST. CONSULTING EDITOR**
PAWAN KUMAR

**ASST. CONSULTING EDITORS**
AKHILESH KUMAR
CHANDAN KUMAR CHOUDHARY

**LANGUAGE EDITORS**
SUMIT KUMAR (ENGLISH)
RAJNEESH MISHRA (ENGLISH)
NADEEM AHMED (URDU)

**SENIOR DESIGNER**
PHOOL CHAND TIWARI

**DESIGNERS**
ABHAY GUPTA
SATYAM SINGH






**CLICK TO READ NEW INDIA SAMACHAR AVAILABLE IN 13 LANGUAGES**
https://newindiasamachar.pib.gov.in/news.aspx
TO READ THE NEW INDIA SAMACHAR ARCHIVE EDITIONS CLICK
https://newindiasamachar.pib.gov.in.archive.aspx

**Follow @NISPIBIndia on Twitter for regular updates on 'New India Samachar'**

# உள் பக்கங்களில்...




**அட்டைப்பக்கக் கட்டுரை**

தேசிய பாதுகாப்பைப் பொறுத்தவரை, கடந்த 12 ஆண்டுகளில் நக்சலிசம் மற்றும் மாவோயிச வன்முறைக்கு எதிரான தனது போரில் இந்தியா ஒரு தீர்க்கமான கட்டத்தை வெற்றிகரமாகக் கடந்து வந்துள்ளது. சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் 'சிவப்பு வழித்தடம்' என்று அழைக்கப்பட்ட பகுதிகள், தற்போது வளர்ச்சியின் மையங்களாகவும் 'பசுமை வளர்ச்சி' வழித்தடங்களாகவும் மாற்றமடைந்துள்ளன. பல தசாப்த கால இந்த அச்சுறுத்தலை ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முறையாக வேரறுத்ததன் மூலம், 2026 மார்ச் 31க்குள் 'நக்சலற்ற இந்தியா' என்ற இலக்கு ஒரு வரலாற்று சாதனையாக உருவெடுத்துள்ளது... |12-24

**நொய்டா சர்வதேச விமான நிலையம்**




உத்தரப் பிரதேசத்தின் ஜேவாரில் உள்ள நொய்டா சர்வதேச விமான நிலையத்தின் முதல் கட்டத்தைப் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார் | 30-31

**உலகளாவிய நெருக்கடி குறித்து பிரதமர் மோடி:**

## பொதுநலமே முதன்மையானது



நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பிரதமர் மோடி உரை: 'புதிய இந்தியா' இன்னல்களை வாய்ப்புகளாக மாற்றும் திறன் கொண்டது எனக் குறிப்பிட்டார் | 37-39


**செய்திச் சுருக்கங்கள்** | 4-5

**ஆளுமை: தாதாசாகேப் பால்கே**
இந்திய சினிமாவில் தற்சார்பு நிலையை உருவாக்கிய தொலைநோக்கு சிந்தனையாளர் | 16

**அரசுப் பணியாளர்கள்: வளர்ச்சியடைந்த இந்தியாவின் சிற்பிகள்**
18-வது குடிமைப்பணி தினம், ஏப்ரல் 21 | 7-11

**தேசியக் கொள்கை: புதிய இந்தியாவுக்கான அரசியல் அடித்தளம்**
டிவி9 உச்சிமாநாடு 2026-ல் பிரதமர் மோடி உரை | 25-27

**திருத்தப்பட்ட உடான் திட்டமும் இந்தியத் தொழில்துறை வளர்ச்சியும்:**
மத்திய அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் | 28-29

**கல்வி: வாய்ப்புகளை உருவாக்க ஒரு முக்கிய கருவி**
அட்சய பாத்திரம் நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு உணவு வழங்கினார் | 32-33

**அதிகாரம் பெற்ற கிராமங்கள், அதிகாரம் பெற்ற ஊராட்சிகள்: நீடித்த வளர்ச்சிக்கான வலுவான அடித்தளம்**
பஞ்சாயத்து ராஜ் தினம் மற்றும் ஸ்வாமித்வா திட்டத்தின் 6 ஆண்டுகள் | 34-36

**மேற்கு ஆசிய நெருக்கடியைக் கூட்டாக எதிர்கொள்ளும் 'டீம் இந்தியா'**
போர் நெருக்கடி குறித்து முதலமைச்சர்களுடன் பிரதமர் மோடி ஆலோசனை | 40-41

**விளையாட்டுப் புரட்சிக்கான வலுவான வரைபடம்**
முன்னோடித் திட்டமான 'கேலோ இந்தியா' முன்முயற்சியின் ஒரு தசாப்தம் | 42-45

**உலகப் பாரம்பரியத்தில் பொதிந்துள்ள தேசத்தின் சாராம்சம்**
உலகப் பாரம்பரிய தினம் குறித்த சிறப்புக் கட்டுரை | 46-47

**இந்தியாவின் செயற்கை நுண்ணறிவு மற்றும் செமிகண்டக்டர் முன்னேற்றங்களால் ஒட்டுமொத்த மனிதகுலமும் பயன் பெறும்**
பிரதமர் நரேந்திர மோடியின் குஜராத் பயணம்
20,000 கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்பிலான திட்டங்கள் | 48-50



**Published:** Kanchan Prasad, Director General, on behalf of Central Bureau of Communication
**Communication Address :** Room No–1077, Soochna Bhawan, CGO Complex, New Delhi -110003.
**E-Mail : response-nis@pib.gov.in, RNI No. :** DELENG/2020/78811

# ஆசிரியர் மேசையிலிருந்து ...

## இந்தியாவிலிருந்து சிவப்பு பயங்கரவாதம் ஒழிப்பு

# பழங்குடியினப் பகுதிகள் தடையற்ற வளர்ச்சியைச் சந்திக்கும்

***வணக்கம்!***

நாட்டை 'சிவப்பு பயங்கரவாதத்தின்' பிடியிலிருந்து விடுவிப்பதற்காக இந்திய அரசு மேற்கொண்ட இயக்கம் வெற்றியடைந்துள்ளது. பல ஆண்டுகளாக, பன்னிரண்டு மாநிலங்களில் பரவியிருந்த 'சிவப்பு வழித்தடத்திற்குள்' இயங்கி வந்த போட்டி அரசு போன்ற கட்டமைப்பு, அந்தப் பகுதி இளைஞர்களைத் தவறாக வழிநடத்தி, வன்முறை மூலம் வளர்ச்சியைத் தடுத்து வந்தது. தற்போது, மத்திய அரசின் தெளிவான உத்தி மற்றும் தொடர்ச்சியான முயற்சிகளின் பலனாக, இந்தப் பகுதிகளில் ஒரு புதிய யுகம் உதயமாகிறது – இது வளர்ச்சியடைந்த மற்றும் தற்சார்பு இந்தியாவின் விருப்பங்களுடன் இணைந்த ஒரு புதிய காலமாகும்.

நக்சலிசத்தை எதிர்கொள்ள, உரையாடல், பாதுகாப்பு, ஒருங்கிணைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய மும்முனை உத்தி பின்பற்றப்பட்டது. இதன் விளைவாக, 2024 முதல் 2026 மார்ச் வரை, 706 நக்சலைட்டுகள் கொல்லப்பட்டனர், 2,218 பேர் கைது செய்யப்பட்டனர். 4,839 பேர் சரணடைந்தனர். மத்திய குழு மற்றும் அரசியல் தலைமைக்குழுவின் அனைத்து உயர்மட்ட உறுப்பினர்களும் ஒழிக்கப்பட்டனர். ஒருபுறம் கடுமையான நடவடிக்கைகள் மூலம் வன்முறை கட்டுக்குள் கொண்டு வரப்பட்ட நிலையில், மறுபுறம் சாலைகள், தொலைத்தொடர்பு, கல்வி, திறன் மேம்பாடு மற்றும் நிதி உள்ளடக்கம் போன்ற துறைகளில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வளர்ச்சிக்கு புதிய வேகத்தை அளித்துள்ளன. ஒரு காலத்தில் பயம் மற்றும் பாதுகாப்பின்மையின் அடையாளங்களாக இருந்த அதே பகுதிகள், இன்று நிலைத்தன்மை, நம்பிக்கை மற்றும் புதிய வாய்ப்புகளுக்காகத் தங்கள் கதவுகளைத் திறந்துள்ளன. சத்தீஸ்கரின் பஸ்தார் பகுதி இந்த மாற்றத்திற்கு ஒரு சிறந்த உதாரணமாக உருவெடுத்துள்ளது; அங்கு தற்போது ஒவ்வொரு பகுதியிலும் கலாச்சார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதோடு, பள்ளிகள் மற்றும் விளையாட்டு வசதிகளை ஏற்படுத்த தீவிர இயக்கமும் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு கிராமத்திலும் இந்த மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. 'பஸ்தார் ஒலிம்பிக்' மற்றும் 'பஸ்தார் விழா' போன்ற நிகழ்வுகள் சமூக மறுசீரமைப்பு மற்றும் புதுப்பிக்கப்பட்ட தன்னம்பிக்கையின் அடையாளங்களாக மாறியுள்ளன. இந்த மாற்றம் ஒரு குறிப்பிட்ட பகுதியோடு மட்டுப்படுத்தப்பட்டதல்ல. ஒரு காலத்தில் 'சிவப்பு பயங்கரவாதத்தால்' பாதிக்கப்பட்டிருந்த அனைத்துப் பகுதிகளிலும் இது தெளிவாகத் தெரிகிறது. இந்த மாற்றம் 'வளர்ச்சியடைந்த இந்தியா 2047' இயக்கத்திற்கு ஒரு வலுவான அடித்தளத்தை அமைக்கிறது. இது ஒவ்வொரு பிராந்தியமும் ஒவ்வொரு குடிமகனும் சமமான வாய்ப்புகளுடன் முன்னேற வழிவகுக்கும் ஒரு தொலைநோக்குப் பார்வையாகும். இதுவே எமது தற்போதைய இதழின் அட்டைப்பக்கக் கட்டுரையாகும்.

ஆளுமைப் பகுதியில் தாதாசாகேப் பால்கே பற்றி வாசியுங்கள். மத்திய அமைச்சரவை முடிவுகள், உலகப் பாரம்பரிய தினம், முன்னோடித் திட்டமான 'கேலோ இந்தியாவின் பத்தாண்டுகள் நிறைவு, ஏப்ரல் 21 அன்று நடைபெறும் 18–வது குடிமைப்பணி தினம், 5 பில்லியன் உணவுப் பொட்டலங்கள் வழங்கும் அட்சய பாத்திர நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவரின் பங்கேற்பு, மேற்கு ஆசியப் போர்ச் சூழல் குறித்து நாடாளுமன்றத்தில் பிரதமர் நரேந்திர மோடியின் உரை மற்றும் அவரின் பதினைந்து நாள் நிகழ்வுகள் ஆகியவை இதர சிறப்பம்சங்களாகும். இவற்றுடன், இதழின் உட்பக்கத்தில் 'மனதின் குரல்' மற்றும் ஏப்ரல் 22 மேற்கொள்ளப்படும் உலகப் புவி தினத்திற்கான சிறப்புக் கட்டுரை பின் அட்டையிலும் இடம்பெற்றுள்ளன.

*உங்கள் ஆலோசனைகளைத் தொடர்ந்து எங்களுக்கு அனுப்பி வைக்கவும்.*

*(தீரேந்திர ஓஜா)*

**இந்த இதழை இந்தி, ஆங்கிலம் மற்றும் 11 இதர மொழிகளில் வாசிக்க/பதிவிறக்கம் செய்ய:** *https://newindiasamachar.pib.gov.in/*

# மின்னஞ்சல் பெட்டி






### அரசுத் திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகள் தொடர்பான செய்திகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை

நான் 'நியூ இந்தியா சமாச்சார்' இதழின் வழக்கமான வாசகர். இந்த இதழில் வெளியாகும் செய்திகள் – குறிப்பாகப் பல்வேறு அரசுத் திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகள் தொடர்பானவை – மிகவும் உண்மையானவை, முக்கியமானவை என நான் கருதுகிறேன். இந்த இதழ் மாணவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கிறது. இதில் உள்ள கட்டுரைகள் எளிதாகவும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய மொழியிலும் எழுதப்பட்டுள்ளன.

m.prashus91@gmail.com

### வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்டங்கள் குறித்து குடிமக்கள் விழிப்புணர்வு பெறுகின்றனர்

'நியூ இந்தியா சமாச்சார்' இருவார இதழ் சிறந்த நடைமுறைக்கு உகந்த தகவல்களை வழங்குகிறது. எங்கள் பள்ளியின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சார்பாக, இந்த இதழை நான் பாராட்ட விரும்புகிறேன். இதன் மூலம், நாட்டில் தற்போது நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்டங்கள் குறித்து குடிமக்கள் நன்கு அறிந்து கொள்கின்றனர். முதல்முறை வாசிப்பவர்கள் கூடச் சிக்கலான விஷயங்களை அதிக சிரமமின்றி எளிதில் புரிந்துகொள்ள இது உதவுகிறது.

bharath417c@gmail.com

### சாகர்மாலா திட்டம்: கடல்சார் இந்தியா தொலைநோக்கு 2030-ன் முக்கியத் தூண்

'நியூ இந்தியா சமாச்சார்' இதழில் சாகர்மாலா திட்டம் குறித்த கட்டுரையை வாசித்தேன். இந்தியாவின் வர்த்தகத்தில் 99 சதவீதம் கடல் வழிகள் வழியாகவே நடைபெறுகிறது. கடந்த 11 ஆண்டுகளில், சாகர்மாலா திட்டம் 280 திட்டங்களை நிறைவு செய்துள்ளது, இதன் மூலம் நாட்டின் துறைமுகங்கள் மற்றும் போக்குவரத்து இணைப்பு உள்கட்டமைப்புகளில் புதிய உத்வேகம் ஏற்பட்டுள்ளது. கடல்சார் இந்தியா தொலைநோக்கு 2030, அமிர்த கால தொலைநோக்கு 2047 ஆகியவை இந்த வேகத்தை மேலும் வலுப்படுத்தும்.

சஞ்சீவ் சோனா

### ஒவ்வொரு இதழிலும் புதிதாகக் கற்றுக்கொள்ள ஏதோ ஒன்று இருக்கிறது

எனக்கு 'நியூ இந்தியா சமாச்சார்' இதழின் மீது மிகுந்த ஆர்வம் உண்டு. இந்த வெளியீட்டின் மூலம், நாட்டிற்குள்ளும் வெளிநாட்டிலும் நடக்கும் அனைத்து நிகழ்வுகளையும் நான் உடனுக்குடன் தெரிந்துகொள்கிறேன். ஒவ்வொரு இதழிலிருந்தும் நான் புதிதாக ஏதேனும் ஒன்றைக் கற்றுக்கொள்கிறேன். இது ஒட்டுமொத்த தேசத்தின் அரசுக் கொள்கைகள் மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகள் குறித்த விரிவான தகவல்களை வழங்குகிறது.

shaherdkharachiagp@gmail.com

### இதழின் புள்ளிவிவரங்களும் உண்மைகளும் துல்லியமான தகவல்களை வழங்குகின்றன

முதற்கண், 'நியூ இந்தியா சமாச்சார்' இதழின் வெற்றிக்காக உங்களுக்கும் உங்கள் குழுவினர் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இதழில் முன்வைக்கப்படும் புள்ளிவிவரங்களும் தரவுகளும் மிகவும் துல்லியமான தகவல்களை வழங்குகின்றன. இதில் இடம்பெறும் 'ஆளுமை' பகுதி இதழின் சிறப்பம்சமாகும். பொது மக்கள் மட்டுமின்றி, குடிமைப்பணி தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களும் இந்த அற்புதமான, அறிவுபூர்வமான இதழை வாசிப்பதன் மூலம் பெரும் பயன் பெறுகின்றனர்.

achintasuril@gmail.com


Communication Address : Room No–1077, Soochna Bhawan, CGO Complex, New Delhi -110003

E-Mail: response-nis@pib.gov.in

செய்திச் சுருக்கம்



## கோடைகாலத்தில் மின் தட்டுப்பாட்டைத் தடுத்தல்

தற்போது நாடு போதுமான மின்சார இருப்பைக் கொண்டுள்ளது. 2026 பிப்ரவரி நிலவரப்படி, நாட்டின் நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறன் 524 ஜிகா வாட் ஆகும். 2014 ஏப்ரல் முதல், இந்தியா 299.87 ஜிகா வாட் புதிய மின் உற்பத்தித் திறனைச் சேர்த்ததன் மூலம் மின் பற்றாக்குறை என்ற இக்கட்டான பிரச்சனையை வெற்றிகரமாகக் கையாண்டுள்ளது. இதன் விளைவாக, இந்தியா மின்சாரப் பற்றாக்குறை என்பதிலிருந்து மின் மிகை நாடாக உருவெடுத்துள்ளது. மத்திய கிழக்கில் நிலவும் தற்போதைய நெருக்கடிக்கு மத்தியிலும், 2026 ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான கோடைகால மாதங்களில் எதிர்பார்க்கப்படும் தேவையைப் பூர்த்தி செய்ய, மாற்று ஆதாரங்களில் இருந்து மின்சாரம் தயாரிக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. புதிய மின் உற்பத்தி நிலையங்களைத் தொடங்குதல் மற்றும் பிற திட்டங்களின் கட்டுமானப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன; இவை அனைத்தும் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கப்படும் நிலையில் உள்ளன. மின் உற்பத்தி நிறுவனங்கள் முழுச் செயல்பாட்டுத் திறனுடன் இருப்பதையும், தினசரி அடிப்படையில் அதிகபட்ச உற்பத்தி நிலையைப் பராமரிப்பதையும் உறுதி செய்ய உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.



## இந்தியா மீண்டும் 100 பில்லியன் டன் நிலக்கரி உற்பத்தி மைல்கல்லை எட்டியது

நிலக்கரித் துறையில் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான, ஒருங்கிணைந்த முயற்சிகளாலும், பங்குதாரர்களின் விலைமதிப்பற்ற பங்களிப்பினாலும், 2026 மார்ச் 20 அன்று நாடு இரண்டாவது ஆண்டாக இந்த மைல்கல் உற்பத்தியை வெற்றிகரமாக எட்டியுள்ளது. இந்தக் குறிப்பிடத்தக்க சாதனை, எரிசக்தி துறையில் இந்தியாவின் வளர்ந்து வரும் தற்சார்பு நிலையையும், முக்கியத் தொழில்துறைகளுக்குத் தடையற்ற எரிசக்தி விநியோகத்தை உறுதி செய்வதில் அதன் அர்ப்பணிப்பையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இந்த மேம்படுத்தப்பட்ட நிலக்கரி உற்பத்தி அளவு, அதிகரித்து வரும் எரிசக்தி தேவைகளைத் திறம்பட பூர்த்தி செய்யவும், நிலக்கரி சார்ந்த அனல் மின் நிலையங்களில் முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிக நிலக்கரி இருப்பைப் பராமரிப்பதன் மூலம் மின்சாரத் துறைக்கு ஆதரவளிக்கவும் நாட்டுக்கு உதவியுள்ளது. இந்த சாதனை, நிலக்கரி விநியோகத் தொடர் சங்கிலி மேற்கொள்ளப்பட்ட வலுவான திட்டமிடல், திறமையான செயல்பாடு மற்றும் பலப்படுத்தப்பட்ட ஒருங்கிணைப்பைப் பிரதிபலிக்கிறது.



## குஜராத்தில் "கான மயில்" குஞ்சு பொரிப்பு

மிகவும் ஆபத்தான நிலையில் அழியும் தருவாயில் உள்ள 'கிரேட் இந்தியன் பஸ்டர்ட்' என்றழைக்கப்படும் "கான மயில்" பறவை இனத்தைப் பாதுகாப்பதில் ஒரு முக்கிய



மைல்கல்லாக, ஒரு தசாப்தத்திற்குப் பின் குஜராத்தின் கட்ச் பகுதியில் ஒரு குஞ்சு பொறிப்பு நடந்துள்ளது. "துரிதமான பாதுகாப்பு உத்தி" எனப்படும் ஒரு புதுமையான பாதுகாப்பு உத்தி மூலம் இந்த சாதனை சாத்தியமானது. குஜராத்தின் கட்ச் புல்வெளிப் பகுதிகளில் தற்போது மூன்று பெண் பறவைகள் மட்டுமே உள்ளன என்பதாலும், அங்கு ஆண் பறவைகள் எதுவும் இல்லாததாலும் இந்த முறை அவசியமானது. இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, ராஜஸ்தானில் உள்ள ஒரு இனப்பெருக்க மையத்திலிருந்து 770 கிலோமீட்டர் தூரம் கடந்து கொண்டு வரப்பட்ட முட்டை, குஜராத்தில் இதற்காக ஒதுக்கப்பட்ட ஒரு கூட்டில் வைக்கப்பட்டது. துரிதமான பாதுகாப்பு உத்தியின் கீழ் நாட்டிலேயே முதன்முதலாக மாநிலங்களுக்கு இடையே இத்தகைய நடவடிக்கை குஜராத்தில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. குஜராத் உட்பட அதன் இயற்கையான வாழ்விடங்கள் முழுவதும் 'கான மயில்' பறவைகளைப் பாதுகாக்கும் நோக்கில், பிரதமர் நரேந்திர மோடியால் 2011-ம் ஆண்டில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டு, 2016-ல் முறையாகத் தொடங்கப்பட்டது.

# ரயில் டிக்கெட் ரத்துசெய்யும் விதிகளில் மாற்றங்கள்

இந்திய ரயில்வே, உறுதி செய்யப்பட்ட டிக்கெட்டுகளை ரத்து செய்வது தொடர்பான விதிகளில் சில முக்கியமான மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. ஏற்கனவே ரயில் புறப்படுவதற்கு 48, 12, மற்றும் 4 மணி நேரங்களுக்கு முன்னதாக இருந்த கால அளவுகள், தற்போது முறையே 72, 24, மற்றும் 8 மணி நேரங்களாக மாற்றப்பட்டுள்ளன. ரயில் புறப்படுவதற்கு 9 முதல் 18 மணி நேரத்திற்கு முன்பாகவே முன்பதிவு அட்டவணைகள் தயார் செய்யப்படுவதால், பயணிகளின் வசதிக்காக இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது குறிப்பாகக் காத்திருப்போர் பட்டியலில் உள்ள பயணிகளுக்குப் பெரிதும் உதவும். கட்டணக் கழிவைப் பொறுத்தவரை, டிக்கெட்டை 24 முதல் 72 மணி நேரத்திற்குள் ரத்து செய்தால் 25 சதவீதமும், 8 முதல் 24 மணி நேரத்திற்குள் ரத்து செய்தால் 50 சதவீதமும் கட்டணம் கழிக்கப்படும். ஆனால், ரயில் புறப்பட 8 மணி நேரத்திற்கும் குறைவாக இருக்கும்போது டிக்கெட்டை ரத்து செய்தால், பணம் ஏதும் திரும்பக் கிடைக்காது. பயணிகள் தங்கள் பயண வகுப்பை மாற்றிக்கொள்ளும் வசதியிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இப்போது ரயில் புறப்படுவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்பு வரை பயணிகள் தங்கள் பயண வகுப்பை உயர்த்திக் கொள்ளலாம் . இதற்கு முன்பு பட்டியல் தயாரிப்பதற்கு முன்பு வரை மட்டுமே இந்த வசதி இருந்தது. இது குறித்துப் பேசிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், உண்மையான பயணிகள் மட்டுமே டிக்கெட்டுகளைப் பெறுவதை உறுதி செய்யவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இதற்காக சுமார் 3 கோடி போலி கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. மற்றொரு முக்கியமான வசதியாக, இனிமேல் ரயில் நிலைய கவுண்டர்களில் எடுக்கப்பட்ட டிக்கெட்டுகளை நாட்டின் எந்தவொரு ரயில் நிலையத்திலும் ரத்து செய்துகொள்ளலாம் என்றும் அவர் கூறினார்.



## இணையவழி-வணிகத் தளங்களில் பழங்குடியினர் தயாரிப்புகளை ஊக்குவித்தல்




பழங்குடியினக் கலைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கவும், அவர்களின் பாரம்பரியத் தயாரிப்புகளை ஊக்குவிக்கவும் தபால் துறை ஒரு முக்கிய முயற்சியை மேற்கொண்டுள்ளது. இதற்காகப் பழங்குடியினர் நல அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இந்தியப் பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்தல் மேம்பாட்டு அமைப்பான 'ட்ரைபெட்' உடன் தபால் துறை புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி, ட்ரைபெட் நிறுவனத்தின் இணையவழித் தளங்கள் மூலம் வரும் அனைத்து மின்-வணிக ஆர்டர்களுக்கும் தேவையான, முழுமையான போக்குவரத்து மற்றும் விநியோக வசதிகளைத் தபால் துறை வழங்கும். இந்த முயற்சி பழங்குடியினக் கலைஞர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கான சந்தை வாய்ப்புகளைப் பெருமளவில் விரிவுபடுத்தும். மேலும், இந்தத் தடையற்ற விநியோகக் கட்டமைப்பு பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதோடு, டிஜிட்டல் பொருளாதார வளர்ச்சியிலும் அவர்களைப் பங்கேற்கச் செய்யும். இது இறுதியில் பழங்குடியினச் சமூகங்களின் வருவாய் அதிகரிக்கப் பெரிதும் வழிவகுக்கும்.

## 5 கோடி டன் இரும்புத் தாது உற்பத்தி செய்து புதிய வரலாறு

இந்தியாவின் மிகப்பெரிய இரும்புத் தாது உற்பத்தியாளரும், 'நவரத்னா' பொதுத்துறை நிறுவனமுமான என்.எம்.டி.சி , ஒரே நிதியாண்டில் 5 கோடி டன் இரும்புத் தாதுவை உற்பத்தி செய்து புதிய வரலாறு படைத்துள்ளது. இந்தியாவில் இந்த மைல்கல்லை எட்டிய முதல் சுரங்க நிறுவனம் இதுவாகும். கடந்த 2015-ம் ஆண்டு முதல் கணக்கிடுகையில், இந்நிறுவனத்தின் உற்பத்தி சுமார் மூன்றில் இரண்டு பங்கு அதிகரித்துள்ளது. அதாவது, 3 கோடி டன்னாக இருந்த உற்பத்தி தற்போது 5 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், இந்த ஒட்டு மொத்த வளர்ச்சியில் ஐந்தில் ஒரு பங்கு கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டுமே எட்டப்பட்டுள்ளது. 2030-க்குள் நாட்டின் எஃகு உற்பத்தித் திறனை 30 கோடி டன்னாக உயர்த்த வேண்டும் என்ற இந்தியாவின் இலக்கை நோக்கி இந்த முன்னேற்றம் ஒரு வலுவான அடித்தளத்தை அமைத்துள்ளது.





# இந்திய சினிமாவில் தற்சார்பு நிலையை உருவாக்கியவர்

இந்திய சினிமாவில் இந்தியாவில் தயாரிப்போம் என்ற கொள்கையை அன்றே விதைத்து, திரைத்துறையில் 'தற்சார்பு' நிலையை உருவாக்கிய ஒரு தொலைநோக்கு சிந்தனையாளர் தாதாசாகேப் பால்கே. 'இந்திய சினிமாவின் தந்தை' என்று அழைக்கப்படும் இவரது இயற்பெயர் துண்டிராஜ் கோவிந்த் பால்கே என்பதாகும். சிறுவயது முதலே கலைகளின் மீது மிகுந்த பற்று கொண்டிருந்தார். தனது திரைப்படங்களில் எப்போதும் உள்ளூர் கலைஞர்களையே பயன்படுத்திய அவர், இந்திய நிலப்பரப்புகளையும், உள்ளூரிலேயே கிடைக்கும் தொழில்நுட்ப வசதிகளையும் பயன்படுத்துவதை ஊக்குவித்தார். அவரது தேசபக்தி, இந்திய சினிமாவின் மீதான தீராத ஆர்வம், தீர்க்கதரிசனம் ஆகியவை இன்றும் உலகெங்கிலும் உள்ள கதைசொல்லிகளுக்கும், திரைக்கலைஞர்களுக்கும் ஒரு சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்றன.

பிறப்பு:
ஏப்ரல் 30, 1870

மறைவு:
பிப்ரவரி 16, 1944

அவரிடம் செல்வம் ஏதும் இல்லை, எந்தவொரு காப்பீட்டுத் திட்டமும் இல்லை. இதன் விளைவாக, திரைப்படத் தயாரிப்பிற்குத் தேவையான அனைத்தையும் திரட்டுவதற்காக அவர் தனது மனைவியின் நகைகளை விற்றார். இந்த அபூர்வமான மனிதர் திரைப்படங்களை உருவாக்கியது மட்டுமின்றி, அவருக்குப் பின் வந்த தலைமுறையினருக்கும் ஒரு புதிய பாதையை அமைத்துத் தந்தார். இந்திய மக்களுக்குத் திரைப்பட அனுபவத்தின் அழகை அறிமுகம் செய்த அவர், தற்போது உலகிலேயே மிகப்பெரிய பொழுதுபோக்குத் துறைகளில் ஒன்றாக இத்துறை வளர்வதற்கு வித்திட்டார். திரைக்கதை, தயாரிப்பு, இயக்கம் என பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய தாதாசாகேப் பால்கே, 'இந்திய சினிமாவின் தந்தை' என்று போற்றப்படுகிறார். இந்தியாவின் முதல் முழுநீளத் திரைப்படமான 'ராஜா ஹறிச்சந்திரா'வை வெளியிட்டதன் மூலம், இந்தியத் திரையுலகின் மாயாஜால உலகிற்கு அவர் வலுவான அடித்தளம் அமைத்தார்.

மகாராஷ்டிர மாநிலம் நாசிக் அருகே உள்ள திரியம்பகேஸ்வரில் 1870 ஏப்ரல் 30 அன்று அவர் பிறந்தார். 'தி லைஃப் ஆஃப் கிரைஸ்ட்' (The Life of Christ) என்ற திரைப்படத்தைப் பார்த்த பின், தானும் திரைப்படங்களை உருவாக்க வேண்டும் என்ற உத்வேகம் அவருக்குப் பிறந்தது. அதன் விளைவாக, 1912–ல் 'பால்கே ஃபிலிம் கம்பெனி'யைத் தொடங்கினார். 1913 மே 3 அன்று, மும்பையிலுள்ள கோரனேஷன் தியேட்டரில் தனது முதல் மௌனப் படமான 'ராஜா ஹறிச்சந்திரா'வைத் திரையிட்டார். அந்தக் காலகட்டத்திலேயே திரைப்படத் தயாரிப்பில் பல புதுமையான சோதனைகளை அவர் மேற்கொண்டார். தொடர்ந்து, 1917–ல் 'இந்துஸ்தான் ஃபிலிம் நிறுவனத்திற்கு அவர் அடித்தளம் அமைத்தார். மகாராஷ்டிராவின் நாசிக்கில் தனது 19 ஆண்டுகால திரையுலகப் பயணத்தில், அவர் 95 முழுநீளத் திரைப்படங்கள், 27 குறும்படங்கள் உட்பட ஏராளமான படைப்புகளை உருவாக்கினார். 'ராஜா ஹறிச்சந்திரா' தவிர, 'மோகினி பஸ்மாசூர்', 'சத்யவான் சாவித்திரி', 'லங்கா தகன்', 'ஸ்ரீ கிருஷ்ண ஜன்மா', 'காளிய மர்தன்' ஆகியவை இவரது புகழ்பெற்ற திரைப்படங்களில் சிலவாகும். அவர் தயாரித்த 'மோகினி பஸ்மாசூர்' திரைப்படம்தான் பெண் நடிகைகள் நடித்த முதல் இந்தியத் திரைப்படமாகும். அதேபோல், 1917–ல் வெளியான 'லங்கா தகன்' திரைப்படத்தில்தான் முதன்முறையாக ஒரு நடிகர் இரட்டை வேடத்தில் நடித்தார். 1932–ல் வெளியான 'சேது பந்தன்' அவரது கடைசி மௌனப் படமாகும்; அவர் 'கங்காவதரன்' என்ற ஒரே ஒரு பேசும் படத்தை மட்டுமே தயாரித்தார். இந்தியத் திரையுலக வரலாற்றில் தாதாசாகேப் பால்கேயின் பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது. இத்தகைய மாபெரும் கலைஞர் 1944 பிப்ரவரி 16 அன்று காலமானார்.

இந்தியத் திரையுலகின் மிக உயரிய விருதான 'தாதாசாகேப் பால்கே விருது', திரைப்படத் துறையில் ஆற்றிய சிறந்த பங்களிப்புகள் மற்றும் சாதனைகளுக்காக வழங்கப்படுகிறது. தாதாசாகேப் பால்கேவின் பிறந்த நூற்றாண்டு விழாவைக் குறிக்கும் வகையில், 1969–ல் இந்த விருது நிறுவப்பட்டது. 2025 மே 1 அன்று நடைபெற்ற 'வேவ்ஸ்' உச்சிமாநாட்டில், இந்தியாவின் செழுமையான திரையுலக வரலாறு குறித்துப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, தாதாசாகேப் பால்கேவுக்கு மரியாதை செலுத்தினார். முன்னோடித் திரைப்படத் தயாரிப்பாளரான தாதாசாகேப் பால்கே இயக்கிய இந்தியாவின் முதல் முழுநீளத் திரைப்படமான 'ராஜா ஹறிச்சந்திரா', 1913 மே 3 அன்று வெளியானது என்பதை அப்போது அவர் நினைவு கூர்ந்தார்.

ஏப்ரல் 21, 2026: 18-வது குடிமைப்பணிகள் தினம்

# அரசுப் பணியாளர்கள்: ‘வளர்ச்சியடைந்த இந்தியா’வை கட்டமைக்கும் சிற்பிகள்



அரசுத் திட்டங்கள் மக்களை எந்த அளவுக்குச் சென்றடைகின்றன என்பதும், அடித்தள நிலையில் அவை ஏற்படுத்தும் உண்மையான தாக்கமும்தான் சிறந்த நிர்வாகத்தைத் தீர்மானிக்கின்றன. இந்த முயற்சியின் முதுகெலும்பாக விளங்குவது சிவில்சர்வீஸ் எனப்படும் குடிமைப் பணிகள் ஆகும். இதன் காரணமாகவே, சர்தார் வல்லபாய் படேல் குடிமைப்பணி அதிகாரிகளை நாட்டின் 'எஃகுக் கட்டமைப்பு' என்று அழைத்தார். பொதுச் சேவை, கொள்கை உருவாக்கம் மற்றும் அவற்றைச் செயல்படுத்துவதில் குடிமைப்பணி அதிகாரிகளின் பங்கினை அங்கீகரிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் குடிமைப்பணி தினம் கொண்டாடப்படுகிறது. ஏப்ரல் 21 அன்று, நாடு தனது 18-வது குடிமைமப்பணி தினத்தைக் கொண்டாடுகிறது



நல்லாட்சி அதிகாரத்தை உறுதி செய்வது அல்லது திட்டங்கள், கொள்கைகளை அமல்படுத்துவது என எதுவாக இருந்தாலும், குடிமைப் பணியாளர்கள் உறுதிப்பாட்டுடனும் அர்ப்பணிப்புடனும் நாட்டிற்கு சேவையாற்றியுள்ளனர். குறிப்பாக, வளர்ச்சியடைந்த இந்தியாவாக மாறும் தீர்மானத்துடன் நாடு முன்னேறி வரும் வேளையில், குடிமைப்பணி அதிகாரிகளின் பொறுப்புகள் இன்னும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகின்றன. இந்தப் பொறுப்புகளையும், வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கிய பயணத்தில் அவர்களின் பங்களிப்பையும் கருத்தில் கொண்டு, 'நாட்டின் குடிமக்களே கடவுள்', என்ற தாரக மந்திரத்தைப் பிரதமர் நரேந்திர மோடி முன் வைத்துள்ளார்.

கடந்த 1947 ஏப்ரல் 21 அன்று ஆட்சிப் பணி அதிகாரிகளின் முதல் பிரிவினரிடையே உரையாற்றிய சர்தார் வல்லபாய் படேல், குடிமைப் பணி அதிகாரிகளை, தேசத்தின் "எஃகுக் கட்டமைப்பு" என்று குறிப்பிட்டார். 'நாட்டு மக்களுக்கு சேவையாற்றுவது தான் உங்களின் தலையாய கடமை' என்று 'இரும்பு மனிதர்' சர்தார் படேல் இந்த அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

சுதந்திர இந்தியாவின் நிர்வாகத்திற்கு அவர் புதிய தரநிலைகளை உருவாக்கினார். குடிமைப்பணியாளர் என்பவர் நாட்டிற்கு சேவையாற்றுவதை தனது உயரிய பணியாகக் கருத வேண்டும். ஜனநாயக முறையில் நாட்டை நிர்வகிக்க வேண்டும். நேர்மை, ஒழுக்கம், அர்ப்பணிப்பு நிறைந்தவராக இருக்க வேண்டும். நாட்டின் இலக்குகளை அடைவதற்கு இரவும், பகலும் அயராது பாடுபட வேண்டும். வளர்ச்சியடைந்த இந்தியாவைக் கட்டமைக்கும் உறுதிப்பாட்டுடன் இன்று நாம் முன்னேறும் நிலையில், சர்தார் வல்லபாய் படேலின் கருத்துகள், மேலும் பொருத்தமானவையாக அமைகின்றன. இதனால்தான் ஒரு காலத்தில் ஆட்சியதிகார நிலையின் பங்கு, பெரும்பாலும் தொழில்மயமாக்கல், தொழில்முனைவின் வேகத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு கட்டுப்பாட்டாளராக இருந்தது என்று பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டார். ஆனால் இப்போது நாடு அத்தகைய மனநிலையில் இருந்து வெகு தூரம் முன்னேறிவிட்டது. குடிமக்களிடையே தொழில்முனைவை ஊக்குவித்து அவர்கள் ஒவ்வொரு தடையையும் கடந்து செல்ல உதவும் ஒரு சூழலை இப்போது உருவாக்குகிறோம். எனவே, அரசுப் பணித்துறை, வெறும் விதிமுறைப் புத்தகங்களின் பாதுகாவலாக மட்டுமின்றி, வளர்ச்சிக்கு வித்திடுவதாகவும், செயல் ஊக்கியாகவும் மாற வேண்டும்.

### புதிய இந்தியாவின் சிற்பிகள்

குடிமைப்பணியாளராக சேரும் ஒருவர், அதே பணியில் தொடர்ந்து செயல்பட்டு வந்த காலம் இருந்தது. ஆனால் தற்போது காலம் மாறிவிட்டது. இது குறித்து பிரதமர் மோடி கூறியதாவது: "இந்தியா பற்றி நான் கொண்டிருக்கும் தொலைநோக்குப் பார்வையும், 140 கோடி மக்களின் கண்களில் நான் காணும் கனவுகளும் என்னைக் கட்டாயப்படுத்தி கூறவைப்பதாவது: நீங்கள் இனியும் வெறும் குடிமைப் பணியாளர்கள் அல்ல. நீங்கள் தான் புதிய இந்தியாவின் சிற்பிகள்.

இத்தகைய சிற்பிகளாக நமது பொறுப்புகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்கு நம்மை வலுப்படுத்திக் கொண்டு, தேசிய இலக்குகளுக்காக நேரம் ஒதுக்குவதுடன் ஒவ்வொரு சாமானிய மனிதரின் கனவையும் தமதாக்கிக் கொள்ள வேண்டும்.

## ஆட்சியதிகாரத்தைக் கட்டுப்பாடுகளில் இருந்து அரசு விடுவிக்கிறது

கடந்த சில ஆண்டுகளில், ஆட்சியதிகாரத்தை அதன் தளைகளிலிருந்து, குறிப்பாக, நெறிமுறை, படிநிலை ஆகியவற்றின் கட்டுப்பாடுகளிலிருந்து அரசு, விடுவித்துள்ளது. அனைவரும் அறிந்தவாறு, இது போன்ற படிநிலை சார்ந்த தடைகளைத் தகர்க்கும் நடைமுறைக்குப், பிரதமர் மோடியே அடித்தளமிட்டார். செயலாளர்கள் முதல் உதவிச் செயலாளர்கள் வரை அதிகாரிகளுடன் அவர் தொடர்ந்து உரையாடுகிறார். பயிற்சி அதிகாரிகளுடனும் அவர் கூட்டங்களை நடத்துகிறார். ஒரு துறையின் அனைத்து அதிகாரிகளின் பங்களிப்பை அதிகரிப்பதற்காகவும், புதிய சிந்தனைகளை ஊக்குவிப்பதற்காகவும், சிந்தனை அமர்வுகள் என்ற மத்திய அரசின் நிலையில் புதிய கருத்துருவை அவர் தீவிரமாக ஊக்குவித்துள்ளார். அவரது முயற்சிகள் மற்றொரு குறிப்பிடத்தக்க மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. கடந்த காலங்களில் மாநில அளவில் பல ஆண்டுகள் சேவையாற்றிய பின் மத்திய அரசுப் பணியில் அதிகாரிகள் சேர்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. மத்திய அரசில் பணியாற்றிய முன் அனுபவம் இல்லாத பட்சத்தில், இந்த அதிகாரிகளால் மத்திய அரசின் திட்டங்களை அடித்தள அளவில் எவ்வாறு திறம்பட செயல்படுத்த முடியும் என்ற முக்கியமான கேள்வியை இதற்கு முன் யாரும் எழுப்பியதில்லை. 'உதவிச் செயலாளர் திட்டத்தின்' வாயிலாக இந்த இடைவெளியை நீக்க அவர் முயற்சிகளை மேற்கொண்டார். தங்களது பணிக் காலத்தின் தொடக்கத்திலேயே மத்திய அரசுடன் இணைந்து பணியாற்றவும், அனுபவம் பெறவும் இளம் ஐஏஎஸ் அதிகாரிகளுக்குத் தற்போது வாய்ப்பு வழங்கப்படுகிறது.

## தொழில்நுட்பப் புரட்சிக்குக் குடிமைப் பணியாளர்கள் தயாராக இருக்க வேண்டும்

தொழில்நுட்பத்தைப் புரிந்து கொள்ளும் திறன்கள் மட்டுமின்றி, திறமை வாய்ந்த, உள்ளடக்கிய நிர்வாகத்திற்கு அதிகாரம் வழங்குகின்ற திறன்களையும் குடிமைப் பணியாளர்கள் பெற வேண்டும். தற்போதைய தொழில்நுட்ப யுகத்தில், செயல்பாட்டில் உள்ள அமைப்புமுறைகளை நிர்வகிப்பதுடன், சாத்தியக்கூறுகளின் எல்லையைப் பன்மடங்கு பெருக்குவதையும் உள்ளடக்கியதாக நிர்வாகம் உள்ளது. செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் இயற்பியல் துறைகளில் ஏற்பட்டு வரும் வேகமான முன்னேற்றங்களுக்கு ஈடு கொடுத்து, அவற்றை அறிந்து கொள்வதுடன், தற்போதைய தொழில்நுட்பப் புரட்சிக்கும் குடிமைப் பணியாளர்கள் முழுவதுமாக தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.



## நல்லாட்சி அதிகாரம், நம்பிக்கையை உருவாக்கியுள்ளது

- ஏற்கனவே தங்கள் ஆவணங்களுக்குச் சான்று பெற, அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் ஒருவரை மக்கள் நாட வேண்டியிருந்தது. ஆனால் தற்போதைய மத்திய அரசு, குடிமக்கள் தங்கள் ஆவணங்களைத் தாங்களே சரிபார்க்கும் அதிகாரத்தை வழங்கியுள்ளது.
- அரசுப் பணிகளில் சி & பி பிரிவுகளில் உள்ள அரசிதழ் பதிவு பெறா பதவிகள் அனைத்தையும் நிரப்புவதற்கு இருந்து வந்த நேர்முகத் தேர்வுகளை ரத்து செய்ய 2016 ஜனவரி 1 அன்று முடிவெடுக்கப்பட்டது.
- முன்னர், பொதுமக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு சராசரியாக 62 நாட்கள் தேவைப்பட்டன. இந்த எண்ணிக்கை தற்போது வெறும் 13 நாட்களாகக் குறைந்துள்ளது. பல்வேறு சந்தர்ப்பங்களில் 5 முதல் 6 நாட்களுக்குள் பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்படுகின்றன.

## தேசிய குடிமைப்பணிகள் தினக் கொண்டாட்டத்தின் நோக்கம்

- குடிமைப்பணி அதிகாரிகளின் செயல்பாடுகளையும், முயற்சிகளையும் ஊக்குவித்துப்பாராட்டுவது.
- குடிமைப் பணிகளின் கீழ் இயங்கும் பல்வேறு துறைகளின் செயல்பாடுகளை மதிப்பிடும் தருணமாக இதை மத்திய அரசு பயன்படுத்துகிறது.
- சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்திய தனி நபர்களுக்கும், குழுக்களுக்கும் மத்திய அரசு விருதுகளை வழங்குகிறது.
- இந்த நாளன்று, பொது நிர்வாகத் துறையில் சிறந்து விளங்கிய மத்திய, மாநில அரசுகளின் அதிகாரிகள், பிரதமரால் கௌரவிக்கப்படுகின்றனர்.



அவ்வாறு செய்யும்போது, 'வளர்ச்சியடைந்த இந்தியா' எழுச்சி பெறுவதை நாம் காண்போம்.

### குடிமைப்பணி சீர்திருத்தங்களை மறுபரிசீலனை செய்வதற்கான தருணம்

குடிமைப் பணிகளில் சீர்திருத்தங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நேரம் இது. சீர்திருத்தங்களின் வேகத்தை நாம் விரைவுபடுத்தி, அவற்றை அளவிட வேண்டும். உள்கட்டமைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்குகள், உள்நாட்டுப் பாதுகாப்பு, ஊழலை ஒழிப்பதற்கான நமது இயக்கம், சமூக நலத் திட்டங்கள் அல்லது விளையாட்டு, ஒலிம்பிக் இலக்குகள் என ஒவ்வொரு துறையிலும் நாம் புதிய சீர்திருத்தங்களை அறிமுகம் செய்ய வேண்டும். இதுவரையிலான நமது சாதனைகள், பாராட்டுக்குரியவை. ஆனால் இப்போது நாம் அதை விட பன்மடங்கு அதிகமாக சாதிக்க வேண்டும். இவை அனைத்திற்கும் மத்தியில், நாம் எப்போதும் ஒரு விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும்: "எவ்வளவுதான் தொழில்நுட்பத்தால் உலகம் இயக்கப்பட்டாலும், மனிதத் தீர்ப்பின் முக்கியத்துவத்தை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது." உணர்வுபூர்வமாக இருங்கள், ஏழைகளின் கோரிக்கைகளைக் கேளுங்கள், அவர்களின் வலியைப் புரிந்து கொள்ளுங்கள், அவர்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை கொடுங்கள்.

'அதிதி தேவோ பவ' (விருந்தினரே கடவுள்) என்று நாம் கூறுவதைப் போல், 'நாக்ரிக் தேவோ பவ' (குடிமக்களே கடவுள்) என்ற தாரக மந்திரத்துடன் நாம் முன்னேறிச் செல்ல வேண்டும். அரசு ஊழியராக மட்டும் உங்களை நீங்கள் தயார்படுத்திக்

**பங்களிப்பை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைக்கு அரசு வலிமையான முக்கியத்துவம் அளிக்கிறது**

- திறன்களையும், திறன் கட்டமைப்பையும் ஊக்குவிக்க, குடிமைப் பணிகளுக்குள் ஒரு புதிய கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.
- கற்றல், தொழில்முறை மேம்பாட்டுக்கான வழிமுறைகள் ஜனநாயகப்படுத்தப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு அதிகாரிக்கும், அவரது தனிப்பட்ட திறன்கள், அவர் மீது வைக்கப்பட்டுள்ள எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப, குறிப்பிட்ட பொறுப்புகள் தற்போது வரையறுக்கப்பட்டு ஒதுக்கப்படுகின்றன.





> குடிமைப் பணிகள் இப்போது சமகால சவால்களுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும், அப்போதுதான் அவை பொருத்தமானதாக இருக்க முடியும். நமக்கான புதிய அளவுகோல்களை நாம் தொடர்ந்து நிர்ணயித்துக் கொண்டு, அவற்றைத் தொடர்ந்து பூர்த்தி செய்து, அதையும் தாண்டிச் செல்ல வேண்டும். உங்களுக்கு நீங்களே சவால் விடுத்துக்கொள்வதுதான் வெற்றிக்கான மிகப்பெரிய திறவுகோலாகும்.
>
> **–நரேந்திர மோடி, பிரதமர்**

கொள்ளாமல், 'வளர்ச்சியடைந்த இந்தியாவின்' சிற்பியாகவும் உங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

## நல்லாட்சி அதிகாரம்தான் முக்கியமானது

வாழ்க்கையில் இரண்டுவிதமான அணுகுமுறைகள் உள்ளதாக அரசுப் பணியாளர்களிடம் பிரதமர் தெரிவித்தார்: ஒன்று, பணிகளை முடித்துக்காட்டுவது, இரண்டாவது அதுவாகவே நடக்கட்டும் என்று விட்டுவிடுவது. இதில், முதலாவது, ஆற்றலுடன் கூடிய அணுகுமுறையாகும். இரண்டாவது, மந்தநிலையைக் காட்டும் அணுகுமுறையாகும். பணிகளை முடித்துக்காட்டுவதில் நம்பிக்கை கொண்ட மக்கள், ஆக்கபூர்வமாக செயல்பட்டு தங்களின் குழுக்களுக்கு உந்துசக்தியாக விளங்குவார்கள். "மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தைக் கொண்டுவர விரும்பும் இந்தப் பேருக்கம், உங்களின் அதிகாரத்தை என்றும் நினைவில் வைத்துகொள்ளும் வகையில் விளங்கும். உங்களுக்கு நீங்கள் என்ன செய்து கொண்டீர்களோ, அதனடிப்படையில் உங்களைக் கணக்கிட முடியாது. மாறாக, மக்கள் வாழ்க்கையில் என்ன மாற்றத்தைக் கொண்டு வந்தீர்களோ, அதன் அடிப்படையிலேயே உங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள முடியும்", என்று பணியாளர்களிடம் பிரதமர் கூறினார். எனவே 'நல்லாட்சி அதிகாரமே முக்கியமானது. மக்களை மையமாகக் கொண்ட ஆட்சி முறை தான் பிரச்சனைகளைத் தீர்த்து நல்ல விளைவுகளை ஏற்படுத்தும்", என்று அவர் தெரிவித்தார்.

பிரதமர் மோடி ஆட்சியின் தாரக மந்திரம்

# குடிமக்களே தெய்வம்

*21-வது நூற்றாண்டான இந்த யுகத்தில், வேகமாக மாறிவரும் அமைப்புமுறைகளுக்கு இடையே, இந்தியா விறுவிறுப்பாக முன்னேறுகிறது. இந்தப் புதிய வரிசைக்கு இணங்க, இந்தியாவின் அரசுப் பணிகளும் தொடர்ந்து புதுப்பிக்கப்படுகின்றன. இந்நிலையில், ஏப்ரல் 2 முதல் 8 வரை 'பணியாளர் சாதனை வாரம்' நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியின் போது மக்கள் பணியின் முக்கிய தாரக மந்திரமான 'குடிமக்களே தெய்வம்' என்பதை மேற்கோள் காட்டி, அரசுப் பணியாளர்களிடையே உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, சாமானிய மக்களைப் பொருத்தவரை, உள்ளாட்சி அலுவலகம், அரசின் முகமாக செயல்படுகிறது என்றார்.*

## அரசு ஊழியர்களுக்கான பிரதமர் மோடியின் தாரக மந்திரம்

- நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரமும், எளிமையான வாழ்க்கையும் மேம்படும் வகையில் நமது நிர்வாகம் செயல்பட வேண்டும்.
- ஒவ்வொரு நாளும், புதிதாக ஏதேனும் ஒன்றைக் கற்றுக் கொள்வது அவசியமாகிறது; 'பணிஈடுபாட்டாளர்' உணர்வுடன் உங்களை நீங்கள் வடிவமைத்துக் கொள்ள வேண்டும்.
- நிர்வாக சேவைகளில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்களும், மாற்றங்களும், அரசு ஊழியரின் நடத்தையிலும், மனப்பான்மையிலும் ஏற்படும் மாற்றத்தையே குறிக்கிறது.
- பிறர் வரைந்துள்ள கோடுகளை சிறியதாக்க முயல்வதை விடுத்து, நீளமான கோட்டை வரைவதில் நீங்கள் கவனம் செலுத்துங்கள் என்பதுதான் வெற்றியின் அடிப்படைக் கோட்பாடாகும்.
- கடந்த கால அமைப்புமுறையில், அதிகாரத்தில் இருப்பதற்கு மட்டும்தான் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது; இன்று கடமை உணர்விற்கே முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.
- வகித்து வரும் பதவியை விட, செய்யப்படும் பணியின் முக்கியத்துவம் உயர்த்தப்பட வேண்டும். எந்தவொரு முடிவையும் எடுப்பதற்கு முன், "என் கடமை என்ன கோருகிறது", என்று உங்களை நீங்களே கேள்வி கேட்டுக் கொள்ளுங்கள். இவ்வாறு செய்வது, நீங்கள் எடுக்கும் முடிவின் நேர்மறையான தாக்கத்தைப் பன்மடங்கு பெருக்கும்.
- 2047-ல் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையின் வாயிலாக உங்கள் பணியைக் காணுங்கள். நாட்டின் வளர்ச்சிப் பயணத்திற்கு உங்கள் முயற்சிகள் எவ்வாறு பங்களிக்கின்றன என்று உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள்.
- நமது தனிநபர் மாற்றம், அமைப்பு சார்ந்த மாற்றமாக எவ்வாறு பரிணமிக்கக் கூடும் என்பது பற்றி சிந்தியுங்கள்.
- இதை அடைவதற்கு, ஆழமாக, வேரூன்றிய சேவை மனப்பான்மையிலிருந்து மட்டுமே பெறக்கூடிய அபரிமிதமான ஆற்றல் தேவைப்படுகிறது.

## சிறந்த நிர்வாகத்திற்கான தொழில்நுட்பம்

- 'கற்றல்' என்பது பற்றி நாம் பேசும்போது, இன்றைய காலகட்டத்தில் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம் இன்றியமையாததாகிறது.
- கடந்த 11 ஆண்டுகளில், நிர்வாகம், சேவை வழங்கல் முதல் பொருளாதாரம் வரை, பல்வேறு அரசு, நிர்வாக செயல்பாடுகளில், தொழில்நுட்பப் புரட்சியின் மாற்றம் தரும் ஆற்றல் சக்தியை நாம் கண்டு வருகிறோம்.
- செயற்கை நுண்ணறிவின் எழுச்சியுடன், விரைவான மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, தொழில்நுட்பப் புரிதலும், செயல் திறன் வாய்ந்த பயன்பாடும், பொதுச் சேவையில் மறுக்க முடியாத அளவிற்கு முக்கியத்துவம் பெறுகிறது.
- தொழில்நுட்பம், தரவு குறித்த ஆழ்ந்த புரிதலின் அடிப்படையிலேயே, செயல் திறன் வாய்ந்த நிர்வாகமும், போட்டித் தன்மை மிக்க அரசு ஊழியரும் வரையறுக்கப்படுவார்கள்.
- உங்கள் முடிவெடுக்கும் செயலுக்கு இது அடித்தளமாக விளங்கும். எனவே செயற்கை நுண்ணறிவுத் துறையில், தொடர்ச்சியான கற்றலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.



### குடிமைப்பணிகள் தினம்: தீர்மானங்களை மேற்கொள்ளும் ஒரு தினம்

குடிமைப்பணிகள் தினம் என்பது வெறும் சம்பிரதாயமான வருடாந்தர நிகழ்வல்ல; அது, தீர்மானங்களை மேற்கொள்வதற்கான ஒரு தினம். நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் முடிவுகளை மேற்கொள்ள நம்முள் உற்சாகத்தையும் ஆற்றலையும் புகுத்தும் வாய்ப்பாக இந்த தினம் அமைந்துள்ளது. புதுப்பிக்கப்பட்ட ஆற்றல், ஊக்கம், வலிமை, திறன் மற்றும் உறுதிப்பாட்டுடன் இந்தத் தருணத்தை நாம் அணுகினால், நாம் அடைய விரும்பும் சாதனைகளை நம்மால் தனிப்பட்ட முறையில் அடைய முடியும் என்று பிரதமர் மோடி நம்புகிறார். நமக்கும், நமது நண்பர்களுக்கும், ஒட்டுமொத்த சமுதாயத்திற்குமான திறன் கட்டமைப்புதான் நமது நிலையான முயற்சியாக இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார்.

பிரதமர் ஆற்றிய முழு உரையைக் காண க்யூ ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்


‘சிவப்பு வழித்தடம்’ முதல், பசுமையான
வளர்ச்சியின் வழித்தடம் வரை
நக்சல் இல்லாத
இந்தியாவின்
புதிய கதை



நக்சலிச, மாவோயிச வன்முறைக்கு எதிரான தனது போராட்டத்தில் ஓர் உறுதியான கட்டத்தை இந்தியா வெற்றிகரமாகக் கடந்துள்ளது. கடந்த 12 ஆண்டுகளில் தேசப் பாதுகாப்பில் இது மிக முக்கியமான வெற்றியாக உருவெடுத்துள்ளது. நக்சலிசத்தின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டுள்ள தேசம், இனி நிம்மதி பெருமூச்சு விடும். இந்தப் போரில் வெடிகுண்டுகள், துப்பாக்கிகளின் ஆதிக்கத்திற்கு மாறாக, அரசியலமைப்பின் ஆற்றலும், சட்ட விதிகளும், வெற்றி பெற்றுள்ளன. ஒரு காலத்தில் 'சிவப்பு வழித்தடம்' என்று அழைக்கப்பட்டு வந்த பகுதி, இப்போது, வளர்ச்சி, பசுமை மேம்பாட்டின் மையங்களாக உருமாறி உள்ளன. அச்சத்தையும், இருளையும் கடந்து, முன்னேற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளது. பல தசாப்தங்களாக நீடித்து வந்த இந்த அச்சுறுத்தலை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் முறையாக ஒழித்ததன் மூலம், 2026 மார்ச் 31–க்குள் நக்சல் பாதிப்பு இல்லாத இந்தியாவை உருவாக்கும் உறுதிமொழி, ஒரு வரலாற்றுச் சாதனையாக, நாட்டிற்கு அளப்பரிய பெருமையைத் தேடித்தந்துள்ளது.

*ஒரு காலத்தில் துப்பாக்கி குண்டுகள் எதிரொலித்தப் பகுதிகளில் தற்போது வளர்ச்சியின் குரல்கள் ஒலிக்கின்றன. முன்னர் அச்சத்தில் கழிந்த இரவுகள், இப்போது நம்பிக்கையின் கதிர்களால் ஒளி வீசுகின்றன. மௌனத்தின் ஆதிக்கம் நிறைந்திருந்த வனப்பகுதிகளில், இப்போது புன்னகை பூக்கிறது. அதன் துணிச்சல், உறுதிப்பாட்டின் வாயிலாக இந்தியா இப்போது ஓர் புதிய வரலாற்றை உருவாக்குகிறது.*

2026 மார்ச் 30 அன்று நாடாளுமன்றத்தில் எதிரொலித்த இந்த வரிகள், இந்தியாவில் நக்சலிசத்தின் ஒழிப்பு குறித்தும், நக்சல் பாதிப்புக்கு உள்ளான பகுதிகளில் ஏற்பட்டு வரும் மாற்றம் குறித்தும் பறைசாற்றும் கவிதை வரிகளாக மிளிர்கின்றன. ஒரு காலத்தில் துப்பாக்கிகள் நிறைந்திருந்த இடத்தில் தற்போது வேலைவாய்ப்பு காணப்படுகிறது; அச்சமும் இருளும் சூழ்ந்திருந்தப் பகுதியில், தற்போது வளர்ச்சிக்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வளர்ச்சி, பாதுகாப்பு, லட்சியங்களால் நிறைந்த ஒரு புதிய சகாப்தத்தை இது வர்ணிக்கிறது. இங்கு வன்முறைக்கு மாற்றாக வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. கொள்கை, நோக்கம், தலைமைத்துவம் முதலியவை ஒன்றுபட்டு இயங்கும் போது, சாத்தியமற்றது கூட சாத்தியமாகிறது என்பதற்கு இது ஒரு உதாரணமாக விளங்குகிறது.



குறிப்பிட்ட தேதிகளும், தருணங்களும் அவ்வப்போது வரலாற்றின் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படுகின்றன. அதுபோன்ற ஒரு தினமாக 2026 மார்ச் 31 மாறியுள்ளது. இதுவரை மார்ச் 31 என்பது நிதியாண்டின் கடைசி தினமாகவும், சர்வதேச அளவில் ஈபிள் கோபுரம் திறந்து வைக்கப்பட்ட நாளாகவும், அமெரிக்காவில் முதன் முதலாக ஓர் ஆப்பிரிக்க அமெரிக்க நபர் வாக்களிக்க அனுமதிக்கப்பட்ட தினமாகவும் நினைவுகூரப்பட்டு வந்தது. எனினும், இந்த தினம், நக்சல் இல்லாத இந்தியா, சமூக பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றின் சின்னமாக இனி பிரபலமடையும். நக்சல் வன்முறைகளின் சம்பவங்கள் காரணமாக பல காலமாக வளர்ச்சி வாய்ப்புகள் மறுக்கப்பட்டு வந்த பகுதிகள், தற்போது வளர்ச்சியின் புதிய பயணத்தின் தொடக்கத்தை சந்திக்கும். நக்சல் இல்லாத நாடாக இந்தியா மாறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதியான மார்ச் 31–க்கு சரியாக ஒரு நாள் முன்னதாக, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, ஜனநாயகத்தின் உன்னத ஆலயத்திலிருந்து இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகப் பிரகடனம் செய்தார். அதனுடன், பல தசாப்தங்கள் பழமையான நக்சல் பிரச்சனை, பழங்குடியினப் பகுதிகளில் வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவித்து, அமைதியின்மையைத் தூண்டிய ஒரு வன்முறை சித்தாந்தமாகவும் இருந்தது.

மத்திய அரசின் உறுதியான, தெளிவான கொள்கை, இந்த விஷயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. இந்திய வரலாற்றில் பல தசாப்தங்களாக நிலவி வந்த பிரச்சனையை அதன் வேரிலிருந்து அகற்றியதற்காக 2026 மார்ச் 31 என்ற

தேதி பல நூற்றாண்டுகள் நினைவுகூரப்படும். ஒரு பல்முனை உத்தியின் கீழ், வலிமையான பாதுகாப்பு செயல்பாடுகள், விரைவுபடுத்தப்பட்ட வளர்ச்சிக்கான முன்முயற்சிகள், கருணை நிறைந்த செயல்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு கொள்கையை மத்திய அரசு அமல்படுத்தியது. நக்சல்களின் உள்கட்டமைப்பையும், படைகளையும் தகர்த்ததில் அரசின் இது போன்ற ஒருங்கிணைந்த முயற்சிகள் முக்கிய அங்கம் வங்கித்தன. சொல்லப்போனால், நரேந்திர மோடி பிரதமராகப் பதவியேற்ற போது, இந்தியாவில் உள்நாட்டுப் பாதுகாப்பு அதிக பதற்றமான மூன்று பகுதிகளில் கடுமையாக பாதிப்புக்கு உள்ளாகி இருந்தது: ஜம்மு காஷ்மீர், வடகிழக்குப் பகுதிகள், இடதுசாரி தீவிரவாதத்தால் தாக்குதலுக்கு உள்ளான சிவப்பு வழித்தடம். சுமார் 40–50 ஆண்டுகளாக இந்தப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்ததுடன், கணிசமான பொருட்சேதமும் ஏற்பட்டன. ஏழைகளின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்துவதற்கு பதிலாக, இந்தப் பகுதிகளை நிர்வகிப்பதற்கு மத்திய பட்ஜெட்டின் கணிசமான பங்கு செலவிடப்பட்டது. பாதுகாப்புப் படையினரிடையேயும் உயிரிழப்பு நேரிட்டது. எனினும், 2014–க்குப் பின், மூன்று முக்கிய பகுதிகளுக்கும் கூடுதல் முன்னுரிமை வழங்கப்பட்டதுடன், தெளிவான, நீண்ட கால உத்தியின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

## நக்சலிசத்தின் தோற்றம்

மேற்கு வங்கத்தில் 1967–ம் ஆண்டு நடைபெற்ற நக்சல்பாரி இயக்கத்தில் இருந்து தோன்றிய நக்சலிசம், பெரும்பாலும் "சிவப்பு வழித்தடத்தில்" பரவி சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், ஒடிசா, மகாராஷ்டிரா, கேரளா, மேற்கு வங்கம், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களுடன் ஆந்திர பிரதேசம், தெலுங்கானாவின் ஒரு சில பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்தியது.

சுதந்திர இந்தியாவின் வரலாற்றிலேயே அதிகபட்சமாக, 3620 வன்முறை சம்பவங்கள் 1971–ம் ஆண்டு நடைபெற்றன. அதே நேரம், 1980–களில் மக்கள் யுத்தக் குழு இந்த மாநிலங்களுக்குத் தனது எல்லையை விரிவுபடுத்தியது. இந்தத் தசாப்தத்திற்குப் பின், பல்வேறு இடதுசாரி இயக்கங்கள் ஒன்றாக இணைந்து, 2004–ல் சிபிஐ (மாவோயிஸ்ட்) என்ற இயக்கமாக உருவானது. நக்சல் தீவிரவாதம், மிக மோசமாகப் பரிணமித்தது. பசுபதி முதல் திருப்பதி வரையிலான வழித்தடம், "சிவப்பு வழித்தடம்" என்று அழைக்கப்பட்டது. நாட்டின் புவியியல் பரப்பில் 17 சதவீதத்தை இந்த சிவப்பு வழித்தடம் உள்ளடக்கியிருந்தது. மேலும் இந்த அச்சுறுத்தலால் பாதிக்கப்பட்டிருந்த 12 கோடி மக்கள், பல ஆண்டுகளாக கடுமையான வறுமையில் வாழ நிர்பந்திக்கப்பட்டனர். அப்போது நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 10% பேர் எப்போதுமே நக்சல் தீவிரவாதப் பிடியில் வாழ்ந்து வந்தனர்.

ஒப்பீட்டளவில், நாட்டில் மற்ற இரண்டு பதற்றமான பகுதிகளான காஷ்மீரும், வடகிழக்குப் பகுதியும் முறையே 1 சதவீத நிலப்பரப்பு பயங்கரவாதத்தாலும், 3.3 சதவீத நிலப்பரப்பு பொதுவான அமைதியின்மையாலும் பாதிக்கப்பட்டிருந்தன. இத்தகைய சூழலில், 2014 தொடங்கி, பிரதமர் மோடியின் தலைமையின் கீழ், பேச்சுவார்த்தை, பாதுகாப்பு, ஒருங்கிணைப்பு ஆகிய மூன்று முக்கிய தூண்களில் கவனம் செலுத்தும் விரிவான உத்தியை மத்திய அரசு அறிமுகம் செய்தது. இந்த வகையில், 2014 முதல் 2026 வரையிலான காலகட்டம், இந்தியாவின் உள்நாட்டுப் பாதுகாப்பு வரலாற்றில் "பொற்காலமாகப்" பொறிக்கப்படவுள்ளது. "2026 மார்ச்



மத்திய மற்றும் கிழக்கு இந்தியாவில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் மாவோயிஸ்ட் பயங்கரவாதம் வளர்ச்சியை முடக்கியது என்பது நிதர்சனமான உண்மை. அதனால்தான் மாவோயிஸ்ட் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக, 2015–ல் எங்கள் அரசு ஒரு விரிவான 'தேசியக் கொள்கை மற்றும் செயல்திட்டத்தை' உருவாக்கியது. தீவிரவாதத்திற்கு எதிரான சகிப்பின்மை அணுகுமுறையுடன், இந்தப் பகுதிகளில் வசிக்கும் ஏழைகளின் வாழ்க்கையில் நேர்மறையான மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு, உள்கட்டமைப்பை, சமூக வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம்.

– நரேந்திர மோடி, பிரதமர்



# ‘சிவப்பு வழித்தடம்’ முதல் நக்சல் இல்லாத இந்தியா வரை (2014–2026)

*பாதுகாப்பு, உள்கட்டமைப்பு மேம்பாடு, நக்சல் நிதி வலையமைப்பைத் தகர்த்தல், சரணடைவதற்கான கொள்கை போன்ற மத்திய அரசின் உத்திகள், நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி உள்ளன. இடதுசாரி தீவிரவாதம் என்று அழைக்கப்படும் நக்சலிசம், இந்தியாவின் மிகக் கடுமையான உள்நாட்டுப் பாதுகாப்புச் சவால்களில் ஒன்றாக விளங்கியது. மத்திய அரசுடன், சம்பந்தப்பட்ட மாநில அரசுகளின் உதவியால் இந்தப் பகுதிகள் தற்போது நக்சல் இல்லாத இடங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. நக்சலிசத்தில் இருந்து நாட்டிற்கு விடுதலை அளிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்...*

## தேசிய கொள்கை மற்றும் செயல்திட்டம்–2015

- நக்சல் தீவிரவாதப் பிரச்சனையை அதன் வேர்களில் இருந்து அகற்றும் நோக்கத்துடன், இடதுசாரி தீவிரவாதத்தை எதிர்கொள்வதற்கான செயல்திட்டம் மற்றும் தேசிய கொள்கைக்கு, 2015–ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. பாதுகாப்பு சம்பந்தமான நடவடிக்கைகள், வளர்ச்சி சார்ந்த செயல்பாடுகள், உள்ளூர் சமூகங்களின் உரிமைகளை உறுதி செய்வது போன்றவற்றை உள்ளடக்கிய பல்வேறு உத்திகளில் இந்தக் கட்டமைப்பு கவனம் செலுத்தியது.
- இடதுசாரி தீவிரவாத பாதிப்புக்கு உள்ளான மாநிலங்களில், மத்திய அரசு ஏராளமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. மத்திய ஆயுதப்படைகளின் நியமனம், இந்திய ரிசர்வ் படைகளின் உருவாக்கம், ஹெலிகாப்டர் உதவி, காவல்துறை பயிற்சி, நவீனமாக்கல் ஆகியவற்றுடன் தேவையான நிதி, ஆயுதங்கள், உபகரணங்களின் விநியோகம் முதலியவை இதில் அடங்கும். மேலும், உளவுத் தகவல்களைப் பகிர்வதற்கும், பலப்படுத்தப்பட்ட காவல் நிலையங்களைக் கட்டுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

**₹ 3681.73**

*கோடி ரூபாய் பாதுகாப்பு தொடர்பான செலவின திட்டத்தின் கீழ், மாநிலங்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக, 2014–15 முதல் இடதுசாரி தீவிரவாத பாதிப்புக்கு உள்ளான மாநிலங்களுக்கு விடுவிக்கப்பட்டது.*

**31–க்குள் நக்சல் தீவிரவாதத்தில் இருந்து ஒட்டுமொத்த நாட்டையும் சந்தேகத்திற்கு இடமின்றி விடுதலை பெறச் செய்வோம்", என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா பல்வேறு தருணங்களில் முழங்கினார்.**

**அதே போல், வடகிழக்குப் பகுதியில் 10,000–க்கும் அதிகமான இளைஞர்கள் தங்கள் ஆயுதங்களைக் கைவிட்டு மைய நீரோட்டத்தில் இணைந்துள்ளனர். 12–க்கும் அதிகமான அமைதி ஒப்பந்தங்கள் மூலம் அப்பகுதியில் அமைதியை நிலைநாட்டும் மாபெரும் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. அரசியல் சட்டப் பிரிவு 370 ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஜம்மு காஷ்மீர், லடாக்கிலும் கூட வளர்ச்சிக்கான புதிய சகாப்தம் தொடங்கியுள்ளது.**


> “
>
> **2014 முதல் எங்கள் அரசு நக்சலைட்– மாவோயிஸ்ட் தீவிரவாதத்திற்கு எதிராக மிகப்பெரிய தாக்குதலைத் தொடுத்துள்ளது. நமது நகரங்களுக்குள் இருந்து செயல்பட்ட ‘நகர்ப்பகுதி நக்சலைட்டுகளையும்’ அவர்களின் ஆதரவாளர்களையும் செயலிழக்கச் செய்துள்ளோம்; கருத்தியல் சார்ந்த போரில் நாம் வெற்றி பெற்றுள்ளோம்; மேலும், நக்சல்களின் கோட்டைகளிலேயே அவர்களை நேருக்கு நேர் எதிர்கொண்டுள்ளோம். இந்த முயற்சிகளின் விளைவுகளை இன்று ஒட்டுமொத்த தேசமும் தெளிவாகக் காண்கிறது.**
>
> **– நரேந்திர மோடி, பிரதமர்**




# தொடர்ந்து குறைந்த வன்முறைகள்

- 'தேசியக் கொள்கை மற்றும் செயல்திட்டம் 2015'-ன் அமலாக்கம் என்பது வன்முறையைக் கணிசமாகக் குறைத்தது. நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்பிற்குப் பெரும் சவாலாக விளங்கிய இடதுசாரி தீவிரவாதம், கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.
- 2014-ல் 126-ஆக இருந்த இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கை, 2025 டிசம்பரில் வெறும் 11-ஆக சரிந்தது. தற்போது, எந்த மாவட்டமும் 'கடுமையாக பாதிக்கப்பட்ட' நிலையில் இல்லை.


கடுமையாக பாதிக்கப்பட்ட மாவட்டங்கள்




இடதுசாரி தீவிரவாதிகளால் நிகழ்த்தப்பட்ட வன்முறைச் சம்பவங்கள்




பாதுகாப்புப் படையினரின் உயிரிழப்புகள் குறைந்துள்ளன




| நக்சலைட் உயிரிழப்புகள் | |
|---|---|
| ஆண்டு | எண்ணிக்கை |
| 2025 | 364 |

- 1,022 நபர்கள் கைது செய்யப்பட்டதுடன், 2,337 பேர் சரணடைந்தனர்.

இடதுசாரி தீவிரவாதம் தொடர்பான வன்முறை சம்பவங்களைப் பதிவு செய்த காவல் நிலையங்கள்

| ஆண்டு | காவல் நிலையங்கள் |
|---|---|
| 2010 | 465 |
| 2025 | 119 |
| 2026 | 60 |

**24** நக்சலைட்டுகள் 2025 மே 23 அன்று சரணடைந்தனர்.

**197** நக்சலைட்டுகள் சத்தீஸ்கரிலும், மகாராஷ்டிராவில் 61 நக்சலைட்களும் 2025 அக்டோபரில் சரணடைந்தனர்.

**7,409** இடதுசாரி தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டதுடன், 5,880 பேர் 2019-க்கும், 2026 ஜனவரி 15-க்கும் இடையே சரணடைந்தனர்.

## எதார்த்தமாக மாறும் தீர்மானம்

**706** நக்சல்கள் 2024, 2025 முதல் 2026 மார்ச் வரையிலான காலத்தில் நடந்த மோதல்களில் கொல்லப்பட்டனர்.

**2,218** நக்சல்கள் கைது செய்யப்பட்டனர்

**4,839** நக்சல்கள் சரணடைந்தனர்

## 'சிவப்பு தீவிரவாதத்திலிருந்து' இந்தியாவிற்கு விடுதலை

நக்சல்-மாவோயிச தீவிரவாதத்தின் முதுகெலும்பை உடைத்தது, கடந்த 12 ஆண்டுகளில் தேசப் பாதுகாப்பில் இந்தியாவின் மகத்தான சாதனைகளில் ஒன்றாக விளங்குகிறது. 2014-க்கு முன், இந்தியாவின் மையப் பகுதியில் நக்சலைட்களும் மாவோயிஸ்டுகளும் தங்களின் சொந்த அரசுகளை இணையாக நடத்திய சூழல் நிலவியது. அந்தப் பகுதிகளில், இந்திய அரசியல் சட்டம் செயல்படவில்லை. அங்குக் காவல்துறையும் நிர்வாகமும் செயல்பட முடியவில்லை, இந்தக் குழுக்களை எதிர்கொள்வதில் அரசு நிர்வாக எந்திரம் முற்றிலும் செயலற்றதாகத் தோன்றியது. 2014-க்கு முன், செயலற்ற நாட்டில் சுமார் 125 மாவட்டங்கள் மாவோயிச வன்முறையால் பாதிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், கடந்த 12 ஆண்டுகால அயராத முயற்சிகளின் பயனாக, மாவோயிச தீவிரவாதத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, இன்று தேசம் சுதந்திரமாக சுவாசிக்கிறது. பல தலைமுறைகளில் முதல்



## மறுவாழ்வு மற்றும் ஊக்குவிப்புகளின் தாக்கமும் கண்கூடாகத் தெரிகிறது

- பிற அம்சங்களுடன் கூடிய மறுவாழ்வுத் தொகுப்பு, இடதுசாரி தீவிரவாத குழுக்களில் (எல்.டபிள்யு.இ) உயர் பொறுப்பில் இருந்தவர்களுக்கு 5 லட்சம் ரூபாயும், பிற இடதுசாரி தீவிரவாத குழுவைச் சேர்ந்தவர்களுக்கு 2.5 லட்சம் ரூபாயும், உடனடி மானியமாக வழங்குகிறது.

**₹50,000**

*ஊக்கத்தொகை சரணடைந்தால் வழங்கப்படுகிறது, கூட்டாகச் சரணடைந்தால் இந்தத் தொகை இரட்டிப்பாகும்.*



- *சரணடையும் ஒவ்வொரு தனி நபருக்கும் ஒரு செல்பேசி வழங்கப்படுகிறது.*

- *ஆயுதங்களை ஒப்படைத்தால் இழப்பீடு வழங்கப்படுகிறது.*
- *மறுவாழ்வு மையங்களில் திறன் பயிற்சியும் கருவித் தொகுப்புகளும் விநியோகிக்கப்படுகின்றன.*

**₹10,000**

*வீதம் 36 மாதங்கள் வரை மாதந்தோறும் நிதி உதவி வழங்கப்படுகிறது. மேலும், பிரதமரின் வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் அனைத்து பயனாளிகளுக்கும் வீடு வழங்கப்படுகிறது.*

- *'நக்சல் இல்லாத பகுதி' என ஒரு பஞ்சாயத்து, அறிவிக்கப்பட்டவுடன், அதன் வளர்ச்சிப் பணிகளுக்காக 1 கோடி ரூபாய் மானியம் ஒதுக்கப்படுகிறது.*
- *அவர்களின் பிள்ளைகளுக்கு 12-ம் வகுப்பு வரை இலவசக் கல்வி, பெண்களுக்கு 2 லட்சம் ரூபாய் வரையும், ஆண்களுக்கு 5 லட்சம் ரூபாய் வரையும் கடன் ஆகியவை இதில் அடங்கும்.*

முறையாக, கோடிக்கணக்கான மக்கள் அச்சத்தின் பிடியிலிலிருந்து வெளியேறி, வளர்ச்சியின் பிரதான நீரோட்டத்தின் ஒரு பகுதியாக இப்போது உள்ளனர். ஒரு காலத்தில், இதே பகுதிகளில், சாலைகள், பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகள் கட்டுவதை மாவோயிஸ்ட் நக்ஸல்கள், தடுத்ததுடன், ஏற்கனவே உள்ள உள்கட்டமைப்புகளைக் கூட குண்டுவீசித் தாக்கினர். மருத்துவர்களை சுட்டுக் கொன்றனர், செல்பேசி' கோபுரங்கள் அமைப்பதைத் தடுத்தனர். கைதிகளை விடுவிக்கப் பாதுகாப்புப் படை முகாம்களைத் தாக்கினர், ஆயுதங்களைக் கொள்ளையடித்தனர். உள்கட்டமைப்புத்

“

"சுதந்திரடைந்த காலத்திலிருந்தே நாட்டு மக்கள் விரும்பிய பல முக்கியப் பணிகள், நரேந்திர மோடி தலைமையின் கீழ், இந்த 12 ஆண்டுகளில், நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், நக்சலிசம் இல்லாத இந்தியாவை உருவாக்குவது நரேந்திர மோடி நிர்வாகத்தின் கீழ் துல்லியமாக வடிவம் பெற்று வருகிறது. ஒரு வகையில், இந்த 12 ஆண்டுகள் தேசத்திற்கு மிகவும் சிறந்தவை என்பதை நிரூபித்துள்ளன.

-------------------------------

–அமித் ஷா, மத்திய உள்துறை அமைச்சர்

திட்டங்களில் ஈடுபட்டிருந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து கமிஷன் வசூலித்தனர், லாரிகள் மற்றும் ரயில்வே சரக்குகளுக்குத் தீ வைத்தனர்; ஆனால், இப்போது, அங்கு நெடுஞ்சாலைகளும் புதிய தொழிற்சாலைகளும் அமைக்கப்படுகின்றன.


இந்த வெற்றிக்காக, தேசம் அதன் பாதுகாப்புப் படையினரின் அர்ப்பணிப்பு, தியாகம் மற்றும் வீரத்திற்குக் கடமைப்பட்டுள்ளது. இதன் விளைவாக, 2025–ல், பிரதமர் நரேந்திர மோடி தேசத்திற்குத் தனது உறுதியான வாக்குறுதியை அளித்தார்: நாடு நக்ஸல்–மாவோயிச பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து முழுமையாக விடுவிக்கப்படும் வரை, தனது முயற்சிகளை நிறுத்தப் போவதில்லை அல்லது அந்தப் பணி நிறைவேறும் வரை ஓயப்போவதில்லை என்று திட்டவட்டமாக அறிவித்தார்.

### உரையாடல் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு

பிரதமர் நரேந்திர மோடி தலைமையின் கீழ், நக்சலிசத்திற்கு எதிரான இந்தியாவின் போராட்டம் பாதுகாப்பு, வளர்ச்சி, சமூக நீதி ஆகிய மூன்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே தொடர்ச்சியான, தீவிரமான ஒத்துழைப்பின் மூலம், 2026 மார்ச் 31–க்குள் 'நக்சல்–இல்லாத' என்ற இலக்கை நாடு அடைந்தது.

அரசின் தீர்க்கமான கொள்கை, அமைதி, வளர்ச்சி ஆகியவற்றிற்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பின் ஒரு தசாப்தத்திற்கு சான்றாக நிற்கிறது. நக்ஸலிசத்திற்கு எதிராக இது ஓர் ஒருங்கிணைந்த, பலமுனை மற்றும் வலுவான உத்தியை அரசு கையாண்டுள்ளது–முந்தைய நிர்வாகங்களின் துண்டு துண்டான வழிமுறைகளுக்கு பதிலாக வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்ட ஓர் அணுகுமுறை இதுவாகும்.

பேச்சுவார்த்தை பாதுகாப்பு ஒருங்கிணைப்பு என்ற தெளிவான கொள்கைகளால் வழிநடத்தப்பட்ட மத்திய அரசு, 2026 மார்ச் மாதத்திற்குள் நக்சல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பிராந்தியத்தையும் முற்றிலும்



## மூன்று தேதிகள்... திசையில் ஒரு மாற்றம்

*வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசு "முழு-அரசு" அணுகுமுறையைக் கையாண்டது; அதே நேரத்தில், பாதுகாப்பைக் கடுமையாக்குவதற்காக, அது தனது உத்தியை ஒரு "முழு-முகமை" கண்ணோட்டத்தின் பக்கம் திருப்பியது. இந்த மாற்றத்தில் மூன்று குறிப்பிட்ட தேதிகள் தீர்க்கமான கதையாடலை வரைந்தன...*

- "அனைத்து முகமை அணுகுமுறை" மூலம், என்ஐஏ, அமலாக்கத்துறை பல்வேறு புலனாய்வு அமைப்புகள் போன்ற நிறுவனங்கள் நக்சலைட்டுகளின் நெட்வொர்க்குகள், நிதி வழிகள் மற்றும் ஆதரவு அமைப்புகளுக்கு எதிராகப் பன்முகத் தாக்குதலைத் தொடங்கின.
- "முழு அரசு" அணுகுமுறையைப் பயன்படுத்தி, பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேம்பாட்டு முயற்சிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன.
- 2019 ஆகஸ்ட் 20: மத்திய உள்துறை அமைச்சகத்தில் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது, அதில் காவல்துறை ஒருங்கிணைப்பு, காவல்துறை நவீனமயமாக்கல், முன்னாள் நக்சலைட்டுகளை காவல் படையில் இணைத்தல், புலனாய்வு அமைப்புகளுடன் ஒருங்கிணைத்தல் போன்றவற்றை செயல்படுத்தும் விரிவான செயல்திட்டம் தயாரிக்கப்பட்டது.
- 2024 ஆகஸ்ட் 24: சத்தீஸ்கரில் தேர்தலைத் தொடர்ந்து, ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மாநிலத்திற்குப் பயணம் மேற்கொண்டார். அங்கு மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே ஒரு கூட்டு உத்தி வகுக்கப்பட்டது. இந்தத் தேதியில், 2026 மார்ச் 31-க்குள் இந்தியா நக்சல் தீவிரவாதம் இல்லாத நாடாக மாறும் என்று ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டது.
- 2026 மார்ச் 31: நக்சல் தீவிரவாதம் இல்லாத இந்தியாவுக்கான உறுதிமொழியை நிறைவேற்றும் இலக்கு தேதிக்கு ஒரு நாள் முன்னதாக, மக்களவையில் மத்திய உள்துறை அமைச்சர் முறையான அறிவிப்பை வெளியிட்டார்.

*மத்திய உள்துறை அமைச்சரின் முழுப் பேச்சைக் காண கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.*

நக்சல் சுவடே இல்லாததாக மாற்றியது.

துண்டு துண்டான அணுகுமுறை, எதிர்வினையாற்றும் சம்பவ அடிப்படையிலான நடவடிக்கைகள், நிரந்தரக் கொள்கை கட்டமைப்பின் முழுமையான பற்றாக்குறை ஆகியவற்றால்



## காவல்படையை நவீனமாக்குதல்

- 'காவல் படைகளை நவீனமாக்குதல்' திட்டத்தின் கீழ் மாநில காவல் படைகளுக்கு உதவி வழங்கப்பட்டது.
- இந்தத் திட்டத்தின் கீழ், ஆயுதங்கள், தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், தகவல் தொடர்பு அமைப்புகள், பயிற்சி, போக்குவரத்து வசதி, காவலர் குடியிருப்புகள் மற்றும் பிற உள்கட்டமைப்புகளுக்காக மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உதவி வழங்கியது.
- 'சிறப்பு உள்கட்டமைப்புத் திட்டம் (எஸ்ஐஎஸ்)' – முதன்மைத் திட்டத்தின் ஒரு துணைத் திட்டத்தின் கீழ்– இடதுசாரி தீவிரவாதத்தால் (எல்டபிள்யுஇ) பாதிக்கப்பட்ட மாநிலங்களில் சிறப்புப் படைகள், மாநில உளவுப் பிரிவுகள், மாவட்டக் காவல் நிலையங்கள் மற்றும் பலப்படுத்தப்பட்ட காவல் பிரிவுகள் நிறுவப்பட்டன.
- பாதுகாப்பு உள்கட்டமைப்பை வலுப்படுத்த, 656-க்கும் அதிகமான பலப்படுத்தப்பட்ட காவல் நிலையங்கள் நிறுவப்பட்டன

**₹1,224.59 கோடி**

*உதவி, 2014-15-ம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் மூலம், மத்திய முகமைகளுக்கு வழங்கப்பட்டது.*

**596** பலப்படுத்தப்பட்ட காவல் நிலையங்கள், கடந்த 11 ஆண்டுகளில் நிறுவப்பட்டன.

**350** காவல் நிலையங்கள் ஒரு காலத்தில் நக்சல் தீவிரவாதம் தொடர்பான சம்பவங்களைப் பதிவுசெய்த நிலையில், இப்போது அந்த எண்ணிக்கை வெறும் 60 ஆகக் குறைந்துள்ளது.

**406** புதிய முகாம்கள் 2020 முதல் மத்திய ஆயுதப் படைகளுக்காக அமைக்கப்பட்டுள்ளன,

**68** இரவில் தரையிறங்கும் வசதி உள்ள ஹெலிகாப்டர் தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**400** புல்லட் மற்றும் குண்டு வெடிப்புத் தடுப்பு வாகனங்கள் படைவீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**05** மருத்துவமனைகள் படை வீரர்களுக்காகக் கட்டப்பட்டுள்ளன. தகவல் தொடர்பு கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது.





# தடுப்பு நிதிக்கான நடவடிக்கைகள்

*இடதுசாரி தீவிரவாதக் (எல்டபிள்யுஇ) குழுக்களுக்கு நிதி செல்வதைக் கட்டுப்படுத்துவதில், அரசு சிறப்பு கவனம் செலுத்தியுள்ளது. குறிப்பாக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) மற்றும் அவர்களுக்கு நிதியுதவி அளிப்பவர்களுக்கு இடையேயான தொடர்பை வெளிக்கொணர தொடர்ச்சியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இடதுசாரி தீவிரவாதக் குழுக்கள் நிதி மற்றும் பிற வளங்களை அணுகுவதைத் தடுக்க, மாநிலக் காவல் படைகள் மற்றும் மத்திய முகமைகள் ஒருங்கிணைந்த மற்றும் பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. இடதுசாரி தீவிரவாதக் குழுக்களின் நிதி கட்டமைப்புகளைத் தகர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு:*

- பயங்கரவாத நிதியுதவியைக் கட்டுப்படுத்த, 2011–ல் உள்துறை அமைச்சகத்திற்குள் "பயங்கரவாத நிதியுதவி தடுப்பு (சிடிஃஎப்) பிரிவு" என்ற தனிப் பிரிவு நிறுவப்பட்டது. இந்தப் பிரிவு, பயங்கரவாத நிதிக் கட்டமைப்புகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க பல்வேறு உளவு மற்றும் அமலாக்க முகமைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது.
- பயங்கரவாத நிதியுதவி மற்றும் போலி இந்திய ரூபாய் நோட்டுகள் (ஃஎப்ஐசிஎன்) தொடர்பான வழக்குகளை விசாரித்து வழக்குத் தொடர "பயங்கரவாத நிதியுதவி மற்றும் போலி ரூபாய் நோட்டு தடுப்புப் பிரிவு" (டிஃஎப்ஃஎப்சி ) ஒன்றையும் தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ), நிறுவியுள்ளது.
- நாட்டிற்குள் போலி ரூபாய் புழக்கத்தைத் தடுப்பதற்காக, மத்திய, மாநில அரசுகள் நிலையிலான பல்வேறு பாதுகாப்பு முகமைகளுக்கு இடையே உளவு மற்றும் தகவல் பகிர்வை எளிதாக்கும் வகையில் "போலி நிதி ஒருங்கிணைப்பு மையம்" (ஃஎப்சிஓஆர்டி) ஒன்று நிறுவப்பட்டது.
- பாதுகாப்பு சபை தீர்மானங்களின் கீழ், பயங்கரவாத அமைப்புகள் மற்றும் அவற்றின் உறுப்பினர்கள் மீது பல்வேறு தடைகள் விதிக்கப்பட்டன. சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் கீழ் நிதி திரட்டுவதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நடவடிக்கைகளில் நிதி மற்றும் சொத்துக்களை முடக்குதல், அவற்றைப் பறிமுதல் செய்தல் ஆகியவை அடங்கும். இதன் மூலம் பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி செல்வது கட்டுப்படுத்தப்பட்டது.
- 2016–ல், இடதுசாரி தீவிரவாதக் குழுக்களுக்குச் செல்லும் நிதி ஓட்டத்தைக் கண்காணிக்க, உள்துறை அமைச்சகத்தின் கீழ், மத்திய அளவில் ஒன்றும், மாநில அளவில் ஒன்றுமாக, இரண்டு பல்துறை குழுக்கள் அமைக்கப்பட்டன.

**₹40**

*கோடி மதிப்புள்ள சொத்துக்கள் என்ஐஏ-வால் அதன் பிரத்யேக நக்சல் எதிர்ப்பு நிதிப் பிரிவு மூலம் பறிமுதல் செய்யப்பட்டன. அதே நேரத்தில் மாநிலங்களும் 40 கோடி ரூபாய்க்கும் அதிகமான சொத்துக்களைப் பறிமுதல் செய்தன. இதன் மூலம் நக்சலைட் நிதிக் கட்டமைப்புகள் திறம்படக் கட்டுப்படுத்தப்பட்டன.*

**12**



*கோடி ரூபாய் அமலாக்க இயக்குநரகத்தால் முடக்கப்பட்டது. இந்த நடவடிக்கை நகர்ப்பகுதி 'நக்சல்கள்' மீது கடுமையான, தார்மீக, உளவியல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்தியதுடன், அவர்களின் தகவல் சார்ந்த போர் கட்டமைப்புகள் மீது மேலும் கடுமையான கட்டுப்பாட்டிற்கு வழிவகுத்தது*

கடந்த காலம் வகைப்படுத்தப்பட்டது என்று மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா கூறினார். ஒரு வகையில், அரசின் பதிலடி நடவடிக்கையின் திசைமாற்றி, நக்சல் தீவிரவாதிகளின் கைகளில் இருந்தது. இருப்பினும், 2014 முதல், அரசின் பிரச்சாரங்கள் மற்றும் திட்டங்களின் வழிநடத்துதல் மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தால் மேற்கொள்ளப்பட்டது.

இது கொள்கை ரீதியாக ஒரு மகத்தான மாற்றத்தைக் குறிக்கிறது. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா இது குறித்து கருத்து தெரிவிக்கையில், "நமது அரசின் கொள்கை மிகவும் தெளிவானது: ஆயுதங்களைக் கைவிட்டு சரணடைய விரும்புவோருக்கு, 'சிவப்புக் கம்பள வரவேற்பு' காத்திருக்கிறது; அவர்கள் முழு மனதுடன் வரவேற்கப்படுகின்றனர். இருப்பினும், அப்பாவிப் பழங்குடி மக்களைக் கொல்வதற்காக அவர்கள் ஆயுதங்களை ஏந்தத் தீர்மானித்தால், அந்த அப்பாவிப் பழங்குடியின மக்களைப் பாதுகாப்பதும், ஆயுதம் ஏந்திய நக்ஸலைட்டுகளை எதிர்கொள்வதும் அரசின் புனிதக் கடமையாகிறது," என்றார். மத்திய, மாநில அரசுகளுக்கு



மாதிரிப் படம்

# வளர்ச்சியை மையமாகக் கொண்ட முன்னெடுப்புகள்

மேம்பாட்டு நடவடிக்கைகளில், அரசின் முதன்மைத் திட்டங்களுடன் கூடுதலாக, இடதுசாரி தீவிரவாதத்தால் (எல்டபிள்யுஇ) பாதிக்கப்பட்ட பல பகுதிகளுக்காக சிறப்பு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சாலைக் கட்டமைப்புகளை விரிவுபடுத்துதல், தொலைத்தொடர்பு இணைப்பை மேம்படுத்துதல், கல்வி, திறன் மேம்பாடு, நிதி உள்ளடக்கம் ஆகியவற்றிற்கு குறிப்பிட்ட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இவற்றில் முக்கியமான சிலவற்றைக் காணலாம்:

- சாலைக் கட்டமைப்பை வலுப்படுத்த, சாலைத் தேவைத் திட்டம் (ஆர்ஆர்பி) மற்றும் இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான சாலை இணைப்புத் திட்டம் (ஸர்சிபிஎல் டபிள்யுஇஃ) ஆகிய இரண்டு சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**17,589** *கி.மீ சாலைகளுக்கு இந்தத் திட்டங்களின் கீழ், பிராந்தியம் முழுவதும் ஒப்புதல் அளிக்கப்பட்டது, அவற்றில் 12,000 கி.மீ சாலைகள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன.*

**6,025** *அஞ்சல் நிலையங்கள், இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், வங்கிச் சேவைகளை வழங்குவதற்காக, இந்திய அஞ்சல் துறையால் திறக்கப்பட்டுள்ளன.*

- இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொலைத்தொடர்பு இணைப்பை மேம்படுத்த, 9,233 தகவல் தொடர்பு கோபுரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

-------------------------------------

- திறன் மேம்பாட்டிற்காக, 46 தொழிற்பயிற்சி நிறுவனங்களும் (ஐடிஐ-கள்) மற்றும் 49 திறன் மேம்பாட்டு மையங்களும் திறக்கப்பட்டுள்ளன.

-------------------------------------

- பழங்குடியினர் பகுதிகளில் தரமான கல்வியை உறுதி செய்வதற்காக, 259 ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன.

*இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பின்வரும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன*

**1,804** வங்கி கிளைகள்

**1,321** ஏடிஎம்கள்

**37,850** வங்கித் தொடர்பாளர்கள்



- இடதுசாரித் தீவிரவாதத்தால் (எல்டபிள்யுஇ) மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள பொது உள்கட்டமைப்பு இடைவெளிகளை நிரப்புவதை நோக்கமாகக் கொண்ட 'சிறப்பு மத்திய உதவித் திட்டத்தின் கீழ், 2017-ல் இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை மொத்தம் 3,953.67 கோடி ரூபாய் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

-------------------------------------

- 2024 அக்டோபர் 2 அன்று, பிரதமர் நரேந்திர மோடி ஜார்க்கண்ட் மாநிலத்திலிருந்து 'மண்ணின் மைந்தன் பழங்குடியினர் உன்னத கிராம இயக்கம் (தர்த்தி ஆபா ஜன்ஜாதிய கிராம உத்கர்ஷ் அபியான்') என்னும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். 15,000-க்கும் அதிகமான கிராமங்களில் அடிப்படை வசதிகள் கிடைப்பதை உறுதி செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மேலும், இப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகளின் வேகத்தை விரைவுபடுத்தவும், மக்களுக்குச் சிறந்த வசதிகள் கிடைப்பதை உறுதி செய்யவும், '3-சி-க்கள்' எனப்படும் சாலை இணைப்பு, அலைபேசி இணைப்பு, நிதிசார் இணைப்பு ஆகியவற்றை அரசு தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது.

**இடையிலான ஒருங்கிணைப்பு மேம்பட்டுள்ளதுடன், மாநிலங்களின் திறன்களும் காவல் துறை அமைப்புகளும் வலுப்படுத்தப்பட்டுள்ளன. மத்திய ஆயுதப் படைகளுக்கும் மாநிலக் காவல்துறைக்கும் இடையிலான ஒருங்கிணைப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது.**

முதல் முறையாக, மத்திய அரசு எந்தவிதக் குழப்பத்திற்கும் இடமளிக்காத, மிகத் தெளிவான ஒரு கொள்கையை ஏற்றுக்கொண்டது. மாநிலக் காவல் படைகளுக்கும் மத்தியப் பாதுகாப்பு முகமைகளுக்கும் செயல்பாட்டுச் சுதந்திரம் வழங்கப்பட்டது. அதே வேளையில், உளவுத் தகவல் சேகரிப்பு, தகவல் பகிர்வு, களப்பணிகளைச் செயல்படுத்துதல் ஆகியவற்றில் பயனுள்ள ஒருங்கிணைப்பை உறுதி செய்வதற்காக, மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே நடைமுறை ரீதியான இணைப்பு ஏற்படுத்தப்பட்டது.




**240** படுக்கைகள் கொண்ட ஓர் அதி-சிறப்பு மருத்துவமனை ஜகதல்பூரில் நிறுவப்பட்டது. இதற்கு முன், இப்பகுதியில் அடிப்படை ஆரம்ப மற்றும் சமூக சுகாதார மையங்கள் கூட இல்லை.

**₹2,212** கோடி மதிப்பிலான மருத்துவ முகாம்கள் மற்றும் மருந்து விநியோகம் உள்ளிட்ட பல பணிகள், 'குடிமை நடவடிக்கை திட்டத்தின்' கீழ், மேற்கொள்ளப்பட்டன.

- பழங்குடியின இளைஞர்களுக்காகப் பரிமாற்றத் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.
- மாநிலங்களுக்குச் சிறப்புப் பாதுகாப்பு தொடர்பான செலவின முன்னெடுப்புகள் அறிமுகம் செய்யப்பட்டன:

**₹3,000** கோடி, 10 ஆண்டு காலத்தில் வழங்கப்பட்டுள்ளது.

**₹5,000** கோடி, 'சிறப்பு உள்கட்டமைப்பு திட்டத்தின்' கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

**₹2,000** கோடி, விரிவுபடுத்தப்பட்ட சிறப்பு உள்கட்டமைப்பு திட்டத்தின் கீழ், கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

**₹4,000** கோடி, முக்கியமான பொது உள்கட்டமைப்பு வசதிகளுக்காக மத்திய நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

## பஸ்தர் மேம்பாட்டில் புதிய பரிமாணங்கள்

- பஸ்தர் பகுதியிலிருந்து நக்சலிசம் ஏறக்குறைய முழுமையாக ஒழிக்கப்பட்டுவிட்டது.
- இதை அடைவதற்காக, பஸ்தர் பகுதியின் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பள்ளியை நிறுவும் நோக்கில் ஒரு இயக்கம் தொடங்கப்பட்டது.
- ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நியாயவிலைக் கடையைத் திறப்பதற்கான ஒரு தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டது.
- ஒவ்வொரு வட்டத்திலும், ஒவ்வொரு பஞ்சாயத்திலும் சமூக சுகாதார மையங்களும் (சிஎச்சி-கள்) ஆரம்ப சுகாதார மையங்களும் (பிஎச்சி-கள்) நிறுவப்பட்டன.
- ஆதார் அட்டைகளும் குடும்ப அட்டைகளும் வழங்கப்பட்டன; பயனாளிகள் 5 கிலோ இலவச ரேஷன் பொருட்கள், எரிவாயு அடுப்புகள் போன்ற வசதிகளைப் பெற்றனர்.
- 'பஸ்தர் ஒலிம்பிக்ஸ்' மற்றும் 'பஸ்தர் விழா' போன்ற முன்னெடுப்புகள் மூலம் விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**1.20** லட்சம் கலைஞர்கள் 'பஸ்தர் விழா'வில் பங்கேற்றனர்;

**5.50** லட்சம் பழங்குடியின மக்கள் விளையாட்டு நடவடிக்கைகளில் பங்கேற்றனர்.



சட்டவிரோத ஆயுத விநியோகத்தின் மீது மிகக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. 2019 மற்றும் 2026-ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், நக்சல் தீவிரவாதிகளின் ஆயுத விநியோகத் தொடரை துண்டிப்பதில் குறிப்பிடத்தக்க வெற்றி எட்டப்பட்டது. மேலும், நக்சல் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு நிதியுதவி அளிப்பதில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தேசியப் புலனாய்வு முகமையும் (என்ஐஏ) அமலாக்க இயக்குநரகமும் (ஈடி) மிகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டன

மேலும், நக்சலைட்டுகளின் "நகர்ப்பகுதி நக்சல்" ஆதரவு கட்டமைப்பு , சட்ட உதவி மற்றும் ஊடகக் கதையாடல்களை உருவாக்கும் முயற்சிகளைத் தடுப்பதற்காகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மத்தியக் குழு உறுப்பினர்களுக்கு எதிராக இலக்கு நிர்ணயிக்கப்பட்ட




நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. 'ஆபரேஷன் ஆக்டோபஸ்' 'ஆபரேஷன் டபுள் புல்' போன்ற இலக்கு சார்ந்த சிறப்புச் செயல்பாடுகள் நிறைவேற்றப்பட்டன. டிஆர்ஜி, எஸ்டிஃஎப், சிஆர்பிஃஎப் மற்றும் கோப்ரா படைகளுக்காகக் கூட்டுப் பயிற்சித் திட்டங்களும் தொடங்கப்பட்டன; இது இந்த நான்கு முகமைகளும் இணைந்து கூட்டுச் செயல்பாடுகளை மேற்கொள்ள வழிவகுத்தது. அதே நேரத்தில், தடயவியல் விசாரணைகள் தொடங்கப்பட்டன. இருப்பிடக் கண்காணிப்பு அமைப்புகள் பயன்படுத்தப்பட்டன. அலைபேசி செயல்பாடுகள் தொடர்பான தரவுகள் மாநிலக் காவல்துறைக்கு வழங்கப்பட்டன. அழைப்புப் பதிவுகளை அறிவியல் பூர்வமாகப் பகுப்பாய்வு செய்வதற்கான மென்பொருள் உருவாக்கப்பட்டது; மேலும் நக்சலைட்டுகளின் மறைமுக ஆதரவாளர்களை அடையாளம் காணச் சமூக ஊடகப் பகுப்பாய்வு பயன்படுத்தப்பட்டது. இந்த நடவடிக்கைகள் நக்சல் எதிர்ப்புச் செயல்பாடுகளைத் துரிதப்படுத்தியது மட்டுமின்றி, உறுதியான முடிவுகளையும் ஈட்டித் தந்தன.

### நக்சல் இல்லாத இந்தியா – ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நாள்

2026 மார்ச் 31, இந்தியாவின் வரலாற்றில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நாளாக உருவெடுத்துள்ளது. இந்த இலக்கை அடைவதற்காக, பலமுனை உத்தி ஒன்று கையாளப்பட்டது. பாதுகாப்புப் படைகளின் இடைவிடாத செயல்பாடுகள், விரிவான மேம்பாட்டு முயற்சிகள், மறுவாழ்வுக் கொள்கைகள் ஆகியவற்றை இந்த உத்தி உள்ளடக்கியிருந்தது. பல்வேறு முகமைகளுக்கு இடையிலான ஒத்துழைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்ட இந்தச் செயல்பாடுகள், மாவோயிச கட்டமைப்பைச் சிதைப்பதிலும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைதியை மீட்பதிலும் முன்னெப்போதும் இல்லாத

> **"கடந்த ஆண்டில் மட்டும், 2,100-க்கும் அதிகமான நக்சலைட்டுகள் சரணடைந்துள்ளனர்; 900-க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்; மேலும், தங்கள் ஆயுதங்களை ஒப்படைக்கத் தயாராக இல்லாத 300-க்கும் அதிகமான தீவிர நக்சலைட்டுகளைப் பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர். இதன் விளைவாக, ஒரு காலத்தில் அச்சத்தின் பிடியில் வாழ நிர்பந்திக்கப்பட்ட பகுதிகள், இன்று வளர்ச்சியின் புதிய ஆற்றலால் நிரம்பியுள்ளன.**
>
> **நரேந்திர மோடி,** பிரதமர்

வெற்றியை அடைந்தன. இத்தகைய சவால்களை முழுமையாக ஒழிக்க ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவை நிர்ணயித்து, அந்த வாக்குறுதியை வெற்றிகரமாக நிறைவேற்றிய முதல் நிகழ்வாக இது அமைகிறது. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, சத்தீஸ்கர் உட்பட நாடு முழுவதும் 2026 மார்ச் 31-க்குள் நக்சலிசம் கடந்த கால நிகழ்வாக மாறிவிடும் என்று 2025 ஏப்ரல் மாதத்தில் திட்டவட்டமாகக் கூறினார்.

நாட்டிற்கும் அதன் மக்களுக்கும் இந்த உறுதிப்பாட்டை அவர் பல சந்தர்ப்பங்களில் மீண்டும் வலியுறுத்தினார். இந்த நோக்கத்தை அடைய, பாதுகாப்புப் படைகள் பல




> மாவோயிச சித்தாந்தத்தில் என்ன அடங்கியுள்ளது? அதன் வழிகாட்டும் குறிக்கோள் என்ன? நாம் சுதந்திரம் பெற்றபோது, “சத்யமேவ ஜெயதே” அதாவது வாய்மையே வெல்லும் என்று அறிவித்தோம். இருப்பினும், அவர்களின் குறிக்கோள், “துப்பாக்கி முனையிலிருந்தே அதிகாரம் பிறக்கிறது” என்று கூறுகிறது. அவர்களின் சூழலில், “அதிகாரம்” என்ற வார்த்தை வளர்ச்சியைக் குறிக்கவில்லை, மாறாக தங்களின் சொந்த சித்தாந்தத்தின் நிலையை மட்டுமே குறிக்கிறது. இங்கு வளர்ச்சி குறித்து எந்தவொரு உரையாடலும் இல்லை; அவர்கள் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.
>
> **அமித் ஷா,** மத்திய உள்துறை அமைச்சர்

நடவடிக்கைகளை மேற்கொண்டன. 2022–ல், பீகாரின் புத்த பஹாட் பிராந்தியத்தில் 'ஆபரேஷன் ஆக்டோபஸ்' நடத்தப்பட்டது. அதே ஆண்டில், கும்லா, லோஹர்தகா மற்றும் லத்தேஹாரில் 'ஆபரேஷன் டபுள் புல்' நடத்தப்பட்டது, மேலும் மூன்று பகுதிகளும் சில நாட்களில் நக்சல் இல்லாதவையாக மாறின. இதேபோல், 2022 செப்டம்பர் 1 முதல் 3 வரை, ஜார்க்கண்டின் செரைகேலா, மேற்கு சிங்பூம் மற்றும் குந்தி மாவட்டங்களில் 'ஆபரேஷன் தண்டர்ஸ்டார்ம்' செயல்படுத்தப்பட்டது. 2022 ஜூன்–ஜூலை மாதங்களில், முங்கர் மாவட்டத்தில் 'ஆபரேஷன் பீம்பந்த்' நடத்தப்பட்டது. பீகாரின் கயா மற்றும் அவுரங்காபாத் மாவட்டங்களில் 'ஆபரேஷன் சக்ரபந்தா' நடத்தப்பட்டது.

2025 மே மாதத்தில், நக்சல் இல்லாத இந்தியாவை உருவாக்குவதற்கான தீர்மானத்தில் ஒரு வரலாற்று மைல்கல்லை எட்டிய பாதுகாப்புப் படைகள், சத்தீஸ்கர்–தெலுங்கானா எல்லையில் உள்ள கர்ரேகுட்டலு மலையில் நடத்தப்பட்ட மிகப்பெரிய நக்சல் எதிர்ப்பு நடவடிக்கையின் போது, 31 நக்சல் தீவிரவாதிகளை அழித்தன. ஒரு காலத்தில் சிவப்பு பயங்கரவாதத்தால் ஆளப்பட்ட கர்ரேகுட்டலு மலை, இப்போது பெருமையுடன் மூவர்ணக் கொடியை ஏற்றுகிறது. இது வெறும் 21 நாட்களில் பாதுகாப்புப் படையினர் நிறைவு செய்த ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாகும். பாதுகாப்புப் படையினர் எந்த உயிரிழப்பையும் சந்திக்காத, மிகப்பெரிய நக்சல் எதிர்ப்பு நடவடிக்கையாக இது உள்ளது. மற்றொரு வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையைச் செய்து, நாராயண்பூரில் இந்திய கம்யூனிஸ்ட் (மாவோயிச) கட்சியின் பொதுச் செயலாளர் நம்பாலா கேசவ் ராவ் என்கிற பசவராஜு உட்பட 27 பயங்கரவாத நக்சல்களை பாதுகாப்புப் படையினர் முறியடித்தனர். மாவோயிச இயக்கத்தின் முதுகெலும்பாக பசவராஜு கருதப்பட்டார். மூன்று தசாப்தங்களுக்குப் பிறகுதான் இவ்வளவு உயர்ந்த அந்தஸ்துள்ள ஒரு மாவோயிச தலைவர் அகற்றப்பட்டார். "ஆபரேஷன் பிளாக் ஃபாரஸ்ட்" நடவடிக்கையைத் தொடர்ந்து, பல்வேறு மாநிலங்களில் 54 மாவோயிச தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர், மேலும் 84 பேர் சரணடைந்தனர்.

### வளர்ச்சியின் பச்சை மண்டலம்

கடந்த பத்தாண்டுகள், ஒரு வகையில், அமைதி மற்றும் முன்னேற்றத்தின் சகாப்தத்தைக் குறிக்கின்றன. நீண்ட காலமாக, தேசம் பல்வேறு வகையான வன்முறை சம்பவங்களால் பாதிக்கப்பட்டது. அந்தப் பாதிப்பு

## சிறப்பு நீதிமன்றங்கள்...

- தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) வலுப்படுத்தப்பட்டது; மேலும், இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட மாநிலங்களில், மாநிலப் புலனாய்வு முகமைகள் (எஸ்ஐஏ–க்கள்) நிறுவப்பட்டன.
- சத்தீஸ்கர் மாநிலத்தில் நான்கு எல்டபிள்யுஇ சிறப்பு நீதிமன்றங்கள் தொடங்கி வைக்கப்பட்டன; மேலும், பிற மாநிலங்களிலும் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன.

**280** *புதிய முகாம்கள் 2019 முதல் அமைக்கப்பட்டுள்ளன, 15 கூட்டுப் பணிக்குழுக்கள் மற்றும் 6 மத்திய ரிசர்வ் காவல் படைப் பிரிவுகள் மாநில காவல்துறை நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கின்றன.*





**“2014–க்குப் பின் என்ன மாற்றம் ஏற்பட்டது? மத்திய ஆயுதக் காவல் படைகள் (சிஏபிஃஎப்) அதே நிலையில்தான் உள்ளன. மாநிலக் காவல் படைகளும் எவ்வித மாற்றமுமின்றி அப்படியே உள்ளன. 2014–க்குப் பின் அறிமுகம் செய்யப்பட்டது என்னவென்றால், வலுவான அரசியல் உறுதியால் ஆதரிக்கப்படும் ஒரு தெளிவான கொள்கை ஆகும். நாட்டின் எந்தவொரு பகுதியிலும் சட்டவிரோதச் செயல்கள் சகித்துக்கொள்ளப்பட மாட்டாது என்பதை நரேந்திர மோடி மிகத் தெளிவாகத் தெரிவித்தார்.**

**அமித் ஷா,** மத்திய உள்துறை அமைச்சர்

பயங்கரவாதம் அல்லது நக்சலிசத்தால் ஏற்பட்டது., "நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான மாவட்டங்கள் நக்சலிசத்தின் பிடியிலிருந்து வெளிவந்து சுதந்திரத்தின் காற்றைச் சுவாசிக்கின்றன. வெடிகுண்டுகள், துப்பாக்கிகள் மற்றும் கைத்துப்பாக்கிகள் மீது நமது நாட்டின் அரசியலமைப்பு ஆதிக்கம் செலுத்துகிறது என்பதில் நாம் பெருமிதம் கொள்கிறோம்; நமது அரசியலமைப்பு வெற்றி பெற்று வருகிறது. நாட்டின் ஒளிமயமான எதிர்காலத்திற்காக, ஒரு காலத்தில் 'சிவப்பு வழித்தடங்கள்' என்று அழைக்கப்பட்டவை இன்று 'பசுமை வளர்ச்சி மண்டலங்களாக' மாறி வருகின்றன என்பது தெளிவாகத் தெரிகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார். நக்சலிசத்தால் பாதிக்கப்பட்ட மாநிலங்களில், குறிப்பாக சத்தீஸ்கரில் ஏற்பட்ட மாற்றம் உண்மையிலேயே குறிப்பிடத்தக்கது என்பதுடன், ஊக்கத்தையும் அளிக்கிறது. இந்த மாநிலம் ஒரு காலத்தில் நக்சலிசம் மற்றும் பின்தங்கிய தன்மையால் வரையறுக்கப்பட்டது; இன்று, அதே மாநிலம் செழிப்பு, பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையின் அடையாளமாக மாறி வருகிறது. இன்று, 'பஸ்தர் ஒலிம்பிக்' என்பது நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் விவாதப் பொருளாக உள்ளது.

பீஜப்பூரின் சில்காபல்லி கிராமத்தில், ஏழு தசாப்தங்களில் முதல் முறையாக குடியிருப்பாளர்களுக்கு மின்சாரம் கிடைத்துள்ளது. அபுஜ்மாட்டின் ரேகவாயா கிராமத்தில், ஒரு பள்ளிக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இது நாடு சுதந்திரம் பெற்ற பின் முதல் முறையாகும். முன்பு பாதிக்கப்பட்ட இந்தப் பகுதிகளின் கிராமங்கள் வழியாக இப்போது வளர்ச்சிப் பணிகளின் காற்று வீசுகிறது. சிவப்புக் கொடிக்கு பதிலாக இப்போது மூவண்ணக் கொடி பெருமையுடன் பட்டொளி வீசிப் பறக்கிறது.

பஸ்தர் போன்ற பிராந்தியங்கள் அச்சம் என்பது இனி இல்லை என்ற நிலைக்கு முன்னேறியுள்ளன. அவை இப்போது கொண்டாட்டத்தின் சூழ்நிலையால் வரையறுக்கப்பட்டுள்ளன.

2014 –க்குப் பின், தவறான வழிகாட்டுதலுக்கு ஆளான இளைஞர்களை மீண்டும் பிரதான நீரோட்டத்திற்குக் கொண்டு வர மத்திய அரசு நேர்மையான முயற்சிகளை மேற்கொண்டது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. எனவே, 2025 அக்டோபரில் ஒரு நிகழ்ச்சியில் பேசிய நரேந்திர மோடி, "கடந்த பத்தாண்டுகளில், ஆயிரக்கணக்கான நக்சலைட்டுகள் தங்கள் ஆயுதங்களைக் கைவிட்டுள்ளனர். கடந்த 75 மணி நேரத்தின் புள்ளிவிவரங்களை நான் உங்களுக்குத் தருகிறேன். இந்த 75 மணி நேரத்தில் 303 நக்சலைட்டுகள் சரணடைந்திருப்பது எனது வாழ்க்கையின் மிகப்பெரிய திருப்திகரமான தருணங்களில் ஒன்றாகும். ஒரு காலத்தில், அவர்களை 303 துப்பாக்கி வைத்திருந்தனர்; இன்று, அவற்றை வைத்திருந்த 303 பேர் சரணடைந்துள்ளனர். இவர்கள் சாதாரண நக்சலைட்டுகள் அல்ல. சிலருக்கு 1 கோடி ரூபாய், சிலருக்கு 15 லட்சம் ரூபாய், மற்றவர்களுக்கு 5 லட்சம் ரூபாய் என அவர்களது தலைகளுக்கு விலை அறிவிக்கப்பட்டிருந்தது. அவர்கள் அனைவரும் தங்கள் பெயர்களில் விலை அறிவிப்புகளுக்கு ஆளானவர்கள். அவர்களிடமிருந்து ஏராளமான ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன. இந்த நபர்கள் அனைவரும் துப்பாக்கிகளையும் வெடிகுண்டுகளையும் கைவிட்டு, இந்திய அரசியலமைப்பைத் தழுவிக்கொள்ளத் தயாராக உள்ளனர். ஒர் அரசு அரசியலமைப்பிற்கு முழுமையாக உறுதியுடன் இருக்கும்போது, தவறான பாதையில் சென்றவர்கள் கூட பின்வாங்கி அரசியலமைப்பின் மீது தங்கள் கண்களைத் திருப்புகிறார்கள். அவர்கள் இப்போது வளர்ச்சியின் பிரதான நீரோட்டத்தில் இணைகின்றார்கள். தாங்கள் தவறான பாதையில் சென்றதை அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். அவர்கள் ஐந்து தசாப்தங்களைக் கழித்துவிட்டனர். தங்கள் முழு இளமையையும் தியாகம் செய்துவிட்டனர். ஆனால் அவர்கள் கற்பனை செய்த மாற்றங்கள் வரவில்லை. இப்போது, அவர்கள் இந்திய அரசியல் சட்டத்தின் மீது நம்பிக்கையுடன் முன்னேறுவார்கள் என்று தெரிவித்தார்.

# தேசியக் கொள்கை

## புதிய இந்தியாவின் அரசியல் அடிப்படை

புதிய இந்தியா ஒரு புதிய நம்பிக்கையுடன் முன்னேறிச் செல்கிறது. அது சவால்களைக் கண்டு இனியும் தயங்காமல், அவற்றை நேருக்கு நேர் எதிர்கொள்கிறது. இதனால்தான் இந்தியா, நாட்டிற்குள் மட்டுமல்லாமல், வளைகுடா முதல் உலகின் மேற்கத்திய நாடுகள் வரையிலும், உலகளாவிய தெற்கிலிருந்து அதன் அண்டை நாடுகளிலும் ஒரு நம்பகமான தோழமை நாடாக உருவெடுத்துள்ளது. தற்போதுள்ள உலகளாவிய சூழலையும், அதை வழிநடத்த வகுக்கப்பட்ட கொள்கைகளையும் கருத்தில் கொண்டு, பிரதமர் நரேந்திர மோடி டிவி9 உச்சிமாநாடு 2026-ல் ஒரு தெளிவான செய்தியை வழங்கினார்:

பிரதமரின் முழு உரையைப் பார்க்க, கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

"இதுவே புதிய இந்தியா; இது தனது வளர்ச்சிப் பயணத்தில் அனைத்து விதமான முயற்சிகளையும் மேற்கொள்கிறது.

---

தேசிய நலனைக் கட்சி நலனுக்கு மேலாக வைப்பது அவசியம், ஏனெனில், இறுதியில், அரசியலுக்கு மேலாக தேசமும், தேசத்தின் வளர்ச்சியுமே நிற்கின்றன.

---

எல்லாவற்றிற்கும் மேலாக தேசிய நலனை வைக்கும் இந்த உத்வேகம் இந்தியாவை ஒரு வளர்ச்சியடைந்த நாடாக மாற்றும். இந்த உத்வேகம் இந்தியாவைத் தன்னிறைவு பெற்ற நாடாக மாற்றும்."




## பிரதமரின் உரையிலிருந்து சில பகுதிகள்

### நம்பிக்கையுடன் ததும்பும் தீர்வுகள் சாதனைகளாக உருவெடுக்கின்றன

இப்போது இந்தியா சவால்களைத் தவிர்ப்பதில்லை, மாறாக அவற்றை நேருக்கு நேர் எதிர்கொள்கிறது. கடந்த 5–6 ஆண்டுகளைப் பாருங்கள்: பெருந்தொற்றுக்குப் பின்னர், ஆண்டுக்கு ஆண்டு சவால்கள் பன்மடங்கு அதிகரித்துள்ளன. இந்தியாவையும் இந்தியர்களையும் சோதிக்காத ஒரே ஒரு வருடம்கூட இருந்ததில்லை. இருப்பினும், 1.4 பில்லியன் மக்களின் ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலம், இந்தியா ஒவ்வொரு நெருக்கடியையும் எதிர்கொண்டு முன்னேறியுள்ளது. கடந்த காலத்திலும் கொள்கைகள் உருவாக்கப்பட்டிருந்தாலும், இன்று நாம் உறுதியான முடிவுகளைக் காண்கிறோம். முன்பு, வேகம் மெதுவாக இருந்தது. தற்போது, இந்தியா வெகு வேகமாக முன்னேறி வருகிறது. கடந்த காலத்தில், எதிர்காலத்திற்கான வாய்ப்புகள் கூட நிச்சயமற்ற தன்மையில் மூழ்கியிருந்தன; இன்று, நமது தீர்மானங்கள் சாதனைகளாக மாறி வருகின்றன. இதன் விளைவாக, உலகம் ஒரு தெளிவான செய்தியைப் பெறுகிறது: இதுவே புதிய இந்தியா – வளர்ச்சிக்கான தனது இடைவிடாத தேடலில் எதையும் விட்டு வைக்காத ஒரு தேசம்.

### போர்க்காலத்தில் வலிமை

போர்க்காலங்களிலும்கூட, இந்தியாவின் கொள்கை, உத்தி மற்றும் வலிமையைக் கண்டு உலகம் வியக்கிறது.

நமது முதுமொழி: "வாய்மை அக்னிச் சோதனையையும் தாங்கி நிற்கும்." கடந்த 23 நாட்களில், உறவுகளை மேம்படுத்துதல், முடிவெடுத்தல், இடர்பாட்டு மேலாண்மை ஆகிய அம்சங்களில், தனது திறனை இந்தியா நிரூபித்துள்ளது.

## உலக அளவில் பதற்றமான நிலை...

## இருந்தபோதிலும், இந்தியா தொடர்ந்து முன்னேற்றம் அடைந்து வருகிறது.

உலக அளவில் நிலவும் ஒவ்வொரு பதற்றமான சூழல்களுக்கும் இடையே, இந்தியா தொய்வின்றி முன்னேற்றப் பாதையில் சென்றுள்ளது. பிப்ரவரி 28 அன்று, போர் பதற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, கடந்த 23 நாட்களின் விவரங்களை மட்டும் கூர்ந்து நோக்கினால், நாட்டின் கிழக்கு முதல் மேற்கு வரை, வடக்கு முதல் தெற்கு வரை, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்கும் வகையில், நாட்டில் வளர்ச்சிக்கான பணிகள் விரைவாக செயல்படுத்தப்படுகின்றன என்பதற்கு இத்தகைய முன்னெடுப்புகள் உறுதியான சான்றுகளாகத் திகழ்கின்றன.

- தில்லி மெட்ரோ ரயில் சேவைக்கான முக்கிய வழித்தடங்கள், நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டன.
- சில்சாரில், அதிவேக ரயில் வழித்தடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.
- கோட்டாவில், புதிய விமான நிலையம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.
- மதுரை விமான நிலையத்திற்கு, சர்வதேச விமான நிலைய அந்தஸ்து வழங்கப்பட்டது.
- தொழில்துறை வளர்ச்சியை விரைவுபடுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு விரிவான திட்டத்திற்கு ஒப்புதல்


'ஜல் ஜீவன் இயக்கம்' திட்டத்தை **2028** - ம் ஆண்டு வரை நீட்டிக்க, முடிவு செய்யப்பட்டுள்ளது.



- 'பிரதமரின் விவசாயிகள் கௌரவிப்பு நிதி திட்டத்தின் கீழ், 18,000 கோடிக்கும் அதிகமான தொகை, விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறையைச் சேர்ந்த ஏற்றுமதியாளர்களுக்கு, அதிகமான 500 கோடி மதிப்பிலான நிவாரணத் தொகுப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

## மதிப்பீடு: புதிய வாய்ப்புக்களின் தோற்றம்

மேலாண்மைத் துறையில், நன்கு அறியப்பட்ட கோட்பாடு ஒன்று உள்ளது. எது அளவிடப்படுகிறதோ, அதுவே சிறப்பாக நிர்வகிக்கப்படுகிறது எனினும், இத்துடன் நான் மற்றொரு கருத்தையும் கூடுதலாக இணைக்க விரும்புகிறேன். எது அளவிடப்படுகிறதோ, அதுவே மேம்படுத்தப்படுகிறது. இறுதியில், அதுவே முழுமையாக உருமாற்றம் அடைகிறது. ஏனெனில், மதிப்பீடு என்பது விழிப்புணர்வை ஏற்படுத்தவதுடன், பொறுப்பையும் நிலைநாட்டுகிறது. அனைத்திற்கும் மேலாக, மதிப்பீடு என்பது, புதிய வாய்ப்புகள் உருவாக உதவுகிறது. 2014-ம் ஆண்டிற்கு முந்தைய 10 முதல் 11 ஆண்டுகால செயல்பாடுகளை, 2014-ம் ஆண்டிற்குப் பிந்தைய 10 முதல் 11 ஆண்டுகால செயல்பாடுகளுடன் ஒப்பிட்டு, மதிப்பீடு செய்தால், இந்தக் கோட்பாட்டைத் துல்லியமாகப் பின்பற்றியதன் மூலம், இந்தியா எவ்வாறு ஒவ்வொரு துறையையும் முழுமையாக உருமாற்றியுள்ளது என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள முடியும். உதாரணமாக:




### இந்தியா தேசிய நலன், அமைதி மற்றும் பேச்சுவார்த்தை போன்றவற்றிற்குத் துணை நிற்கிறது.

உலகம் தற்போது பல்வேறு கூறுகளாகப் பிரிந்துள்ள நிலையில், முன்னெப்போதும் இல்லாத வகையிலும், கற்பனை செய்து பார்க்க முடியாத வகையிலும் இந்தியா, நட்புறவை ஏற்படுத்தியுள்ளது. வளைகுடா நாடுகள் முதல் மேற்கத்திய நாடுகள் வரை, தெற்குலக நாடுகள் முதல் அண்டை நாடுகள் வரை, அனைத்து நாடுகளின் நம்பிக்கைக்குரிய நட்பு நாடாக இந்தியா திகழ்கிறது. "நாம் யாருக்கு ஆதரவாக உள்ளோம் என்று சிலர் வினவுகிறார்கள்? அவர்களுக்கு எனது பதில் எளிமையானது. நாங்கள் அனைவரும் இந்தியாவிற்குத் துணையாக நிற்கிறோம். நாட்டு மக்களின் நலன், அமைதி மற்றும் பேச்சுவார்த்தையின் பக்கம் நிற்கிறோம்.

### நாட்டின் எதிர்காலமே முதன்மையானது

தேசியக் கொள்கையே அரசியலின் அடித்தளமாக அமையும்போது, நாட்டின் எதிர்காலத்திற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஆனால், தனிப்பட்ட நலன்களே, அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வரும் சூழலில், மக்கள் நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்திக்காமல், தங்களது சொந்த எதிர்காலம் குறித்தே சிந்திக்கிறார்கள்.

2004 மற்றும் 2010-ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்த பல்வேறு சம்பவங்களை நினைவுகூருங்கள். அப்போது பெட்ரோல், டீசல், எரிவாயு ஆகியவற்றின் விலைகளில் கடும் நெருக்கடியான சூழல் நிலவியது. அதன் விளைவாக, அதிகமான 1,48,000 கோடி மதிப்பிலான

## இந்தியாவில் உள்ள கிழக்கு மாநிலங்களின் வளர்ச்சி

கடந்த காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சி சார்ந்த நடவடிக்கைகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை, தற்போது வாய்ப்புகளாக மாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். நாட்டின் கிழக்குப் பகுதி வளங்கள் நிறைந்த பகுதியாகும். இருப்பினும், பல தசாப்தங்களாக, இப்பகுதியை ஆட்சி செய்தவர்களின் அலட்சியம், அதன் வளர்ச்சியை தடுத்து நிறுத்திவிட்டது. தற்போது, அத்தகைய நிலைமையில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது.

- அசாம் மாநிலத்தில், ஒரு காலத்தில், துப்பாக்கிச் சூட்டின் சத்தங்கள் மட்டுமே கேட்டுக் கொண்டிருந்த நிலையில், தற்போது, செமிகண்டக்டர் உற்பத்தித் தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகிறது.
- ஒடிசாவில், செமிகண்டக்டர் உற்பத்தி முதல், பெட்ரோ ரசாயனப் பொருட்கள் வரை, பல்வேறு புதிய துறைகள், அதிவேக வளர்ச்சி அடைந்து வருகின்றன.
- பீகாரில், கங்கை நதியின் குறுக்கே, ஒரே ஒரு பெரிய பாலத்தைக் கட்டுவதற்கு, ஆறு அல்லது ஏழு தசாப்தங்கள் தேவைப்பட்டன. ஆனால், கடந்த பத்தாண்டுகளில் மட்டும் ஐந்துக்கும் அதிகமான புதிய பாலங்கள் கட்டப்பட்டுள்ளன.
- உத்தரப் பிரதேசம், ஒரு காலத்தில், நாட்டுத் துப்பாக்கிகளின் புழக்கத்திற்குப் பெயர் பெற்றிருந்த நிலையில், தற்போது, செல்பேசி உற்பத்தித் துறையில், உலக அளவில், தனக்கென ஒரு தனி முத்திரையைப் பதித்து வருகிறது.
- இந்தியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள முக்கிய மாநிலமான மேற்கு வங்கம், ஒரு காலத்தில், நாட்டின் கலாச்சாரம், கல்வி, தொழில் மற்றும் வர்த்தகம் ஆகியவற்றின் மையமாகத் திகழ்ந்தது. கடந்த 11 ஆண்டுகளில், மேற்கு வங்க மாநிலத்தின் வளர்ச்சிக்காக, மத்திய அரசு கணிசமான அளவில் முதலீடு செய்துள்ளது.



## ஜனநாயக நடைமுறைகளில் எதிர்ப்புக்கும், காழ்ப்புணர்ச்சிக்கும் இடையேயான வேறுபாடு

அரசியல் ரீதியான எதிர்ப்பு என்பது, வளர்ச்சிக்கு எதிரான எதிர்ப்பாக உருமாற்றம் பெறும்போதும், நாட்டின் சாதனைகளின் மீதான விமர்சனங்கள், சந்தேகத்தை எழுப்பத் தொடங்கும்போதும், அது வெறும் அரசின் மீதான எதிர்ப்பாக மட்டும் நின்று விடுவதில்லை. மாறாக, நாட்டின் முன்னேற்றத்தைக் கண்டு பொறுத்துக்கொள்ள முடியாத ஒரு மன நிலையாக, அது பரிணமிக்கிறது. தற்போதைய சூழலில், நாடு பெறுகின்ற ஒவ்வொரு வெற்றியும், கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. நாட்டின் ஒவ்வொரு முயற்சியும், தோல்வியில் முடிய வேண்டும் என்ற விருப்பம் இருப்பதாகவே தோன்றுகிறது. ஒரு ஜனநாயக நடைமுறையில், மாறுபட்ட கருத்துக்களுக்கு இடமுண்டு. அது அவசியமானதாகும். அரசுக்கு எதிரான கருத்துகளைத் தெரிவிப்பது ஜனநாயக உரிமையாகும். இருப்பினும், நாட்டை இழிவுபடுத்துவது அல்லது அவதூறு பரப்புவது ஒருவரின் உள்நோக்கம் குறித்த கடுமையான கேள்விகளை எழுப்புகிறது.

- கொவிட்–19 பெருந்தொற்று காலத்தில், நாடு தனது சொந்த முயற்சியில் தடுப்பூசியை உருவாக்கிய போது, எதிர்க்கட்சிகள் அதன் மீது சந்தேகத்தை எழுப்பின. 'மேக் இன் இந்தியா' திட்டம் குறித்துப் பேசப்பட்ட போது, அது வெற்றி பெறாது என்று கூறியதுடன், அதை ' அதை பெரிய புலி என்று நினைப்பு கேலி செய்து இழிவுபடுத்தின.
- 'டிஜிட்டல் இந்தியா' திட்டம் தொடங்கப்பட்ட போது, அவர்கள் அத்திட்டத்தை ஏளனம் செய்தனர். ஆனால் இன்று, உலகின் மிகப்பெரிய தடுப்பூசி செலுத்தும் இயக்கத்திற்கு, இந்தியா ஒரு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறது. டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகளில், இந்தியா, உலக அளவில் முன்னணி நாடாக உள்ளது. உற்பத்தித் துறை, புத்தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றில், இந்தியா புதிய உச்சங்களை எட்டி வருகிறது.



- அண்மையில் நடைபெற்ற 'உலக செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டின்' போதும் இதனைக் காண முடிந்தது. உலகத்தில் உள்ள பல்வேறு நாடுகளின் தலைவர்கள், இந்தியாவில் ஒன்று கூடியிருந்த வேளையில், குறிப்பிட்ட சில விமர்சகர்கள், அங்கே குழப்பத்தை ஏற்படுத்துவதற்காக வந்திருந்தனர். இந்தச் சம்பவம், நாட்டின் கௌரவத்தின் மீது, அவர்களுக்கு எவ்வளவு குறைவான மதிப்பீடு உள்ளது என்பதைத் தெளிவாக உணர்த்துகிறது. இன்று, கட்சி நலனைக் காட்டிலும், தேச நலனுக்கு முன்னுரிமை அளிப்பது அவசியமாகும். ஏனெனில், இறுதியில், அரசியலுக்கு அப்பாற்பட்டு நாடும், நாட்டின் வளர்ச்சியுமே உயர்ந்து நிற்கின்றன.

'எண்ணெய் பத்திரங்கள்' வெளியிடப்பட்டன. இதன் மூலம், வருங்காலத் தலைமுறையினர் மீது, கடன் சுமையைச் சுமத்துவதாக அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் கூறினார். அந்தப் பத்திரங்களுக்கான கடன் தொகையை வட்டியுடன் திருப்பிச் செலுத்தும் காலம் 2020–ம் ஆண்டிற்குப் பிறகு வந்தது. கடனுடன், வட்டித் தொகையும் சேர்ந்து, ரூ 1.48 லட்சம் கோடிக்குப் பதிலாக, நாடு 3 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகையைச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

### கட்டுப்பாடும், உணர்வுபூர்வமான அணுகுமுறையும் தேவைப்படும் தருணம் இது

ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்துள்ள உலக அமைப்பில், போர்களின் பாதகமான விளைவுகளிலிருந்து, எந்தவொரு நாடும் இப்போது தப்பித்துவிட முடியாது. பல்வேறு நாடுகளில், நிலைமை ஏற்கனவே மிகவும் தீவிரமடைந்துவிட்டது. இது கட்டுப்பாட்டையும், உணர்வுபூர்வமான அணுகுமுறையையும், கடைப்பிடிக்க வேண்டிய தருணமாகும். பெருந்தொற்றுப் பரவல் போன்ற, பேரிடர் காலத்தில் ஏற்பட்ட பெரும் நெருக்கடி நிலையின் போது, அத்தகைய சவாலான சூழலை எதிர்கொள்வதற்காக, மக்கள் அனைவரும் ஓரணியில் திரளும் போது, அதன் தாக்கம் மிகவும் அர்த்தமுள்ளவையாக அமைகின்றன. அதே உணர்வுடன், போரினால் உருவாகியுள்ள தற்போதைய சூழலையும், நாம் அனைவரும் ஒன்றிணைந்து எதிர்கொள்ள வேண்டும்.

# திருத்தியமைக்கப்பட்ட உடான் திட்டம்



## 'இந்தியத் தொழித்துறை மேம்பாட்டுத் திட்டத்திற்கு' ஒப்புதல்

**திருத்தியமைக்கப்பட்ட உடான் திட்டத்திற்கு, மத்திய அமைச்சரவை, ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், 100 புதிய விமான நிலையங்கள், 200 ஹெலிகாப்டர் இறங்கு தளங்கள் மற்றும் 441 விமான ஓடுதளங்கள் அமைக்கப்படவுள்ளன. இதன் மூலம், விமான சேவைகள் புதிய பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, மக்கள் வசதியான மற்றும் எளிதில் அணுகக்கூடிய விமானப் பயண வசதிகளைப் பெற இயலும். மேலும், இந்தியாவின் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தும் நோக்கில், ஒரு முக்கிய நடவடிக்கையாக, இந்தியத் தொழித்துறை மேம்பாட்டுத் திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இது தவிர, மேலும் பல்வேறு முக்கிய முன்முயற்சிகளுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது...**

முடிவு: 'மண்டல இணைப்புத் திட்டமான' திருத்தியமைக்கப்பட்ட உடான் திட்டத்தை, 2026-27-ம் நிதியாண்டு முதல் 2035-36-ம் நிதியாண்டு வரை, பத்தாண்டு காலத்திற்கு செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு, மத்திய பட்ஜெட்டில், மொத்தம் 28,840 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தாக்கம்:

- தற்போது விமான சேவைகளுக்கான இணைப்புகள் குறைவாக உள்ள அல்லது விமான சேவைகள் போதிய அளவில் சென்றடையாத பகுதிகளில், மண்டல அளவிலான விமானப் போக்குவரத்து சேவைகளுக்கான இணைப்புகள் மேம்படுத்தப்படும்.
- இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலையில் உள்ள நகரங்களில், பொருளாதார வளர்ச்சி, வர்த்தகம், சுற்றுலா போன்ற துறைகள் உத்வேகம் பெறும்.
- சாமானிய மக்களுக்கும், குறைந்த கட்டணத்தில், விமானப் பயண வசதிகளைப் பெறும் வாய்ப்பு அதிகரிக்கும்.
- தொலைதூர மற்றும் மலைப்பாங்கான பகுதிகளில், அவசரகால மீட்புப் பணிகள் மற்றும் சுகாதார சேவைகள் கிடைப்பதற்கான வசதி மேம்படுத்தப்படும்.
- மண்டல அளவிலான விமான நிலையங்கள் மற்றும் விமான நிறுவனங்களின் செயல்பாடு, மேலும் சாத்தியமுள்ளதாகவும், நிலைத்தன்மை கொண்டதாகவும் அமையும்.
- 'தற்சார்பு இந்தியா' என்ற முன்முயற்சியின் கீழ், உள்நாட்டு விமானப் போக்குவரத்துத் துறையின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கப்படும்.
- 'வளர்ச்சியடைந்த இந்தியா 2047' என்ற இலக்கை அடைவதற்கான முன்னேற்றம் ஏற்படும்.

முடிவு: 'இந்திய தொழில்துறை மேம்பாட்டுத் திட்டத்தின்' வாயிலாக, நவீன காலத்திற்கு ஏற்ப, 'பிளக்-அண்ட்-பிளே' முறையில், உடனடித் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தாக்கம்: இத்திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 100 'பிளக்-அண்ட்-பிளே' அடிப்படையில் உடனடித் தொழில் பூங்காக்களை அமைக்க 33,660 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- உலகத்தரம் வாய்ந்த தொழில்சார் உள்கட்டமைப்பை உருவாக்குவது, உற்பத்தித் துறையின் முழுத் திறனையும் வெளிக்கொண்டு வருவது, இந்தியாவின் வளர்ச்சி நடவடிக்கைகளை விரிவுபடுத்துவது ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.
- இத்திட்டத்தின் கீழ், 100 ஏக்கர் முதல் 1,000 ஏக்கர் வரையிலான பரப்பளவில், தொழில் பூங்காக்கள் உருவாக்கப்படும். ஏக்கர் ஒன்றுக்கு அதிகபட்சமாக, ரூ 1 கோடி வரை நிதியுதவி வழங்கப்படும்.
- இத்தொழில் பூங்காக்களில், நவீன உள்கட்டமைப்பு வசதிகளுடன் சேர்த்து, அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கான குடியிருப்பு வசதிகளும், ஏற்படுத்தித் தரப்படும்.
- இத்திட்டம், பெருமளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. உற்பத்தி, சரக்குப் போக்குவரத்து மற்றும் சேவைத் துறைகளில், இது கணிசமான நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

முடிவு: பருத்தி விவசாயிகளுக்கு நேரடி உதவி அளிக்கும் வகையில், 2023-24-ம் ஆண்டின் வேளாண் பருவத்திற்கு, இந்தியப் பருத்திக் கழகத்திற்கு 1,718.56 கோடி மதிப்பிலான, குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்குவதற்கான நிதியுதவி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தாக்கம்: சந்தை விலை, குறைந்தபட்ச ஆதரவு விலையை விடக் குறையும் போது, விவசாயிகள் தங்களின் விளைபொருட்களுக்கு, நியாயமான விலையைப் பெற இந்த நிதி உதவும்.

- பருத்தி அதிகமாக விளையும் 11 முக்கிய மாநிலங்களில், இந்தியப் பருத்திக் கழகம், ஒரு வலுவான கொள்முதல் கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இது 152 மாவட்டங்களில், 508-க்கும் அதிகமான கொள்முதல் மையங்களை இயக்கி வருகிறது. இதன் மூலம், தடையற்ற மற்றும் எளிதில் அணுகக்கூடிய கொள்முதல் சார்ந்த நடைமுறைகள் உறுதி செய்யப்படுகிறது.
- குறைந்தபட்ச ஆதரவு விலை தொடர்பான தகவல்களை விவசாயிகளிடம் கொண்டு செல்லுதல், பருத்தி மூட்டைகளை அடையாளம் காண்பதற்கும், அவற்றைக் கண்காணிப்பதற்குமான அமைப்பைச் செயல்படுத்துதல், 'காட்அலி' எனும் செல்பேசி செயலியை அறிமுகம் செய்தல் போன்ற நடவடிக்கைகள், கொள்முதல் சார்ந்த நடைமுறைகளைச் சீரமைத்து, விவசாயிகளுக்கு அவை எளிதாகக் கிடைப்பதற்கு வழி வகுத்துள்ளது.
- பருத்திப் பயிர் சுமார் 6 மில்லியன் விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு ஆதாரமாக உள்ளது. மேலும், பதப்படுத்துதல், வர்த்தகம், ஜவுளித் தொழில் உட்பட, தொடர்புடைய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள 40 முதல் 50 மில்லியன் மக்களுக்கு, இது ஆதரவளிக்கிறது.


முடிவு: உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள பாராபங்கி முதல் பஹ்ரைச் வரை, 4-வழிப் பாதை மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதியுடன் கூடிய, தேசிய நெடுஞ்சாலை-927-ஐ அமைப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

- நீளம்: 101.515 கி.மீ.
- செலவு: 6,969.04 கோடி
- கட்டுமான மாதிரி: வருடாந்தர கலப்பின முறை

தாக்கம்: பாராபங்கி மற்றும் பஹ்ரைச் மாவட்டங்களின் நகர்ப்புறப் பகுதிகளில் நிலவும் சாலைக் கட்டுமானக் குறைபாடுகள், கூர்மையான வளைவுகள் மற்றும் போக்குவரத்து நெரிசல் தொடர்பான முக்கியப் பிரச்சினைகளுக்குத், தீர்வு காணும் வகையில், இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

- பயண நேரமும், வாகனங்களை இயக்குவதற்கானச் செலவுகளும் குறையும். இதனால், பயணங்கள் மிகவும் பாதுகாப்பானதாகவும், விரைவானதாகவும் அமையும்.
- இது பாராபங்கி மற்றும் பஹ்ரைச் நகரங்களுக்கு இடையே, தடையற்ற போக்குவரத்துக்கான இணைப்பை உறுதி செய்வதுடன், பொருளாதார மற்றும் சரக்குப் போக்குவரத்து மையங்களுக்குப் பல வகையான போக்குவரத்து இணைப்புகளையும் வழங்கும்.
- பஹ்ரைச் மற்றும் ஷ்ராவஸ்தி பிராந்தியங்களுக்கான போக்குவரத்து இணைப்பு வசதி மேம்படுத்தப்படும். இது 'பிரதமரின் விரைவு சக்தி திட்டத்தின்' நோக்கங்களை வலுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு உதவியாக அமையும்.

*மத்திய அமைச்சரவை முடிவுகள் குறித்த செய்தியாளர் சந்திப்பைக் காண, இந்த கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.*



- நேபால்கஞ்ச் எல்லை வழியாக, இந்தியா-நேபாளம் நாடுகளுக்கு இடையேயான போக்குவரத்து இணைப்பு வலுப்படுத்தப்படும். இதன் மூலம், ரூபைடிஹா எல்லைத் துறைமுகத்தை எளிதாக சென்றடைய முடியும்.

முடிவு: 2026-27 முதல் 2030-31 வரையிலான நிதியாண்டுகளுக்கான காலத்தில் சிறு புனல் மின் நிலைய மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தாக்கம்: இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் சுமார் 1,500 மெகாவாட் இணைந்த திறனுடன் சிறு புனல் மின் நிலைய திட்டங்களை நிறுவ 2,584.60 கோடி செலவாகும்.

- இத்தகைய திட்டங்களுக்குப் பேரளவு திறன் கொண்டுள்ள மலைப்பாங்கான மற்றும் வடகிழக்கு மாநிலங்களுக்கு இவை சிறந்த பயன்களைத் தரும்.
- இந்தத் திட்டங்களின் கட்டுமான காலத்தில் 58.1 மில்லியன் (51 லட்சம்) மனித நாட்கள் வேலைவாய்ப்பு உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முடிவு: 2031 முதல் 2035 வரையிலான காலத்தில், ஐ நா சபையின் பருவநிலை மாற்றத்திற்கான கட்டமைப்பு மாநாட்டின் போது சமர்ப்பிக்கப்படவுள்ள, இந்தியாவின் 'தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளுக்கு' ஒப்புதல் அளித்தல்.

தாக்கம்: 2005 முதல் 2020 வரையிலான காலகட்டத்தில், இந்தியாவின் கார்பன் உமிழ்வு 36% குறைந்துள்ளது. தற்போது, 2035-க்குள், இந்தக் கார்பன் வெளியேற்றத்தை மேலும் 47% குறைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாகவே, அதாவது, 2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்குள், நாட்டின் மொத்த மின் உற்பத்தித் திறனில், புதைபடிவமற்ற எரிசக்தி வளங்களின் பங்களிப்பு, 52.57 சதவீதம் என்ற நிலையை நாடு எட்டியுள்ளது.
- தற்போது, 2035-க்குள், புதைபடிவமற்ற எரிசக்திக்கான வளங்களின் பங்களிப்பை, 60%-ஆக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- 2005-ன் அளவீடுகளுடன் ஒப்பிடுகையில், 2035-க்குள், வனங்கள் மற்றும் மரங்களின் பரப்பளவை அதிகரிப்பதன் மூலம், 3.5 முதல் 4.0 பில்லியன் டன் அளவிற்குக் 'கார்பன் உறிஞ்சும் திறனை' இந்தியா உருவாக்கும்.
- இந்தியாவின் இந்தக் கடமைகள், 2047-க்குள், 'வளர்ச்சியடைந்த இந்தியா' மற்றும் 2070-க்குள், கார்பன் உமிழ்வு இல்லாத நிலையை அடைவதற்கான தேசிய இலக்குகளுடன் முழுமையாக ஒத்துப்போகின்றன.

முடிவு: 'குடியேற்றம், விசா, வெளிநாட்டினர் பதிவு மற்றும் கண்காணிப்பு' திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்தல்.

தாக்கம்: இந்தத் திட்டம், 2026 ஏப்ரல் 1, முதல் 2031 மார்ச் 31 வரை, ஐந்து ஆண்டு காலத்திற்கு, மொத்தம் 1,800 கோடி மதிப்பிலான பட்ஜெட் ஒதுக்கீட்டுடன் நீட்டிக்கப்பட்டுள்ளது.

- முக்கிய நோக்கம்: பாதுகாப்பான மற்றும் ஒருங்கிணைந்த சேவை அமைப்பின் கீழ், குடியேற்றம் மற்றும் விசா தொடர்பான சேவைகளை நவீனமாக்குவதும், மேம்படுத்துவதும் ஆகும்.




# முன்னேற்றத்தின் வேகம்

## விமான நிலையங்களால் வரையறுக்கப்படுகிறது

**எந்தவொரு நாட்டிலும், விமான நிலையம் என்பது, வெறும் அடிப்படை வசதியாக இருப்பது மட்டுமின்றி, மாநிலம், நாடு ஆகிய இரண்டின் முன்னேற்றத்திற்கும், புதிய சிறகுகளை அது அளிக்கிறது. 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்கும் வகையில், மத்திய அரசு, நவீன உள்கட்டமைப்பு வசதிகளில், முன்னெப்போதும் இல்லாத அளவில், முதலீடுகளை மேற்கொள்வதற்கு இதுவே மிக முக்கியக் காரணமாகும். இந்த முன்னெடுப்பிற்கு ஏற்ப, மார்ச் 28 அன்று, உத்தரப்பிரதேச மாநிலம் ஜேவாரில், ரூ.11,200 கோடி முதலீட்டில் கட்டப்பட்டுள்ள, நொய்டா சர்வதேச விமான நிலையத்தின் முதற்கட்டத் திறப்பு விழாவின் போது உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, "இன்றைய தினத்திலிருந்து, 'வளர்ச்சியடைந்த உத்தரப்பிரதேசம், வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற இயக்கத்தில், ஒரு புதிய அத்தியாயம் எழுதப்படுகிறது" என்று குறிப்பிட்டார்.**


உத்தரப்பிரதேச மாநிலம் ஜேவாரில் நொய்டா சர்வதேச விமான நிலையத்திற்கான கட்டுமானப் பணிகளுக்கு, 2021–ல் பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார். தற்போது, அந்த விமான நிலையம் பிரதமரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த விமான நிலையத்தின் திறப்பு விழா நிகழ்வு மூலம், நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான சர்வதேச விமான நிலையங்களைக் கொண்ட மாநிலமாக, உத்தரப்பிரதேசம் உருவெடுத்துள்ளது. இந்த விமான நிலையத்தின் திறப்பு விழாவைத் தொடர்ந்து, அம்மாநிலத்தில் உள்ள மொத்த விமான நிலையங்களின் எண்ணிக்கை 17–ஆக உயர்ந்துள்ளது. அதே வேளையில், அம்மாநிலத்தில் உள்ள சர்வதேச விமான நிலையங்களின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரித்துள்ளது. இந்த விமான நிலையத்தின் செயல்பாடுகள் தொடங்குவதன் மூலம், ஆக்ரா, மதுரா, அலிகார், காஜியாபாத், மீரட், எட்டாவா, புலந்த்சாஹர், ஃபரிதாபாத் போன்ற முக்கிய நகரங்கள் உட்பட, பரந்து விரிந்துள்ள பிராந்தியமும் பயனடையவுள்ளது. மேற்கு உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள், சிறு, குறு தொழில் நிறுவனங்கள், மற்றும் இளைஞர்களுக்கு, இந்த விமான நிலையம் எண்ணற்ற புதிய வாய்ப்புகளை வழங்கவுள்ளது. இந்த விமான நிலையத்திலிருந்து புறப்படும் விமானங்கள், உலகம் முழுவதும் உள்ள பல்வேறு இடங்களுக்கு சேவையாற்றவுள்ளன. ஜேவார் விமான நிலையத் திட்டத்திற்கான ஒப்புதல், 2003–ம் ஆண்டிலேயே, அப்போதைய பிரதமராக இருந்த அடல் பிஹாரி வாஜ்பாயால் வழங்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**அண்மையில், 'உடான்' திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு, மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. இதற்காக, ரூ.29,000 கோடி நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. இந்த முன்முயற்சியின் கீழ், நாடு முழுவதும் உள்ள சிறிய நகரங்களில், 100 புதிய விமான நிலையங்களும், 200 புதிய ஹெலிகாப்டர் இறங்கு தளங்களும் புதிதாகக் கட்டப்படவுள்ளன.**

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அரசு அமைந்ததைத் தொடர்ந்து, இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டன. தற்போது, இந்த விமான நிலையம் முழுமையாகச் செயல்பாட்டிற்கு வந்துள்ளது. 2021–ல், இந்த விமான நிலையத்தின் கட்டுமானப் பணிகளுக்குப் பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கு உத்தரப்பிரதேசத்தில் மட்டும், அண்மை வாரங்களில் அடிக்கல் நாட்டப்பட்ட அல்லது தொடங்கி வைக்கப்பட்ட நான்காவது முக்கியத் திட்டம் இது என்று பிரதமர் மோடி குறிப்பிட்டார். இக்காலகட்டத்தில், நொய்டாவில் ஒரு பிரம்மாண்டமான செமிகண்டக்டர் உற்பத்தித் தொழிற்சாலை அமைப்பதற்கும் அடிக்கல் நாட்டப்பட்டது. நாட்டின் முதலாவது தில்லி–மீரட் நமோ பாரத் ரயில் சேவை தொடங்கப்பட்டது. மேலும், மீரட் மெட்ரோ ரயில் சேவையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.





"2014-ம் ஆண்டிற்கு முன், நாட்டில் மொத்தமாக 74 விமான நிலையங்கள் மட்டுமே இருந்தன. தற்போது, நாடு முழுவதும் 160-க்கும் அதிகமான விமான நிலையங்கள் உள்ளன. தற்போது, முக்கியப் பெருநகரப் பகுதிகள் மட்டுமின்றி, நாட்டின் சிறிய நகரங்களுக்கும், விமானப் போக்குவரத்து வசதி விரிவடைந்துள்ளது. முந்தைய அரசுகள், விமானப் பயணம் என்பது, வசதி படைத்தவர்களுக்கு மட்டுமே உரியது என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தன. ஆனால், தற்போதைய மத்திய அரசு, விமானப் பயணத்தை சாமானிய குடிமகனும் அணுகக்கூடியதாகவும், மலிவானதாகவும் மாற்றியுள்ளது."

**– நரேந்திர மோடி**, பிரதமர்

### நொய்டா சர்வதேச விமான நிலையத்தின் முக்கிய அம்சங்கள்

- நொய்டா சர்வதேச விமான நிலையம், இந்தியாவின் மிகப்பெரிய பசுமை விமான நிலையத் திட்டங்களில் ஒன்றாகும்.
- இந்த விமான நிலையம், விமானம் தரையிறங்குவதற்கான அமைப்புகள் மற்றும் மேம்பட்ட விமான நிலைய விளக்குகள் உட்பட, நவீன வழிகாட்டுதல் அமைப்புகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது அனைத்து வானிலையிலும் இரவு பகலாக, திறம்பட செயல்பட உதவுகிறது.
- இந்த விமான நிலையம், ஆண்டொன்றுக்கு 2,50,000 மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான சரக்குகளைக் கையாளும் திறன் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திறனை எதிர்காலத்தில், 1.8 மில்லியன் மெட்ரிக் டன் வரை விரிவுபடுத்த முடியும்.
- இந்த விமான நிலையம் ஒரு 'பன்முகப் போக்குவரத்து மையமாக' உருவாக்கப்பட்டுள்ளது. இது சாலை, ரயில், மெட்ரோ மற்றும் பிராந்தியப் போக்குவரத்து அமைப்புகள் வாயிலாக, தடையற்ற போக்குவரத்துக்கான இணைப்பை வழங்குகிறது.

**₹11,200** கோடி இந்த விமான நிலையத்தின் மேம்பாட்டிற்காக முதலீடு செய்யப்பட்டுள்ளது.

**1.20 கோடி**

பயணிகளை ஆண்டொன்றுக்கு கையாளும் திறன் கொண்டதாக இந்த விமான நிலையத் தொடக்க கட்டத்தில், இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. முழுமையாக மேம்படுத்தப்பட்ட பின், இதன் திறன், 7 கோடி பயணிகளாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**3,900**

மீட்டர் நீளமுள்ள ஓடுபாதை ஒன்று, இந்த விமான நிலையத்தில் அமைக்கப்படவுள்ளது. இது பெரிய அளவிலான விமானங்களைக் கையாளும் திறன் கொண்டது.

செமிகண்டக்டர் உற்பத்தித் தொழிற்சாலை, தொழில்நுட்பத் துறையில் இந்தியாவைத் தன்னிறைவு கொண்ட நாடாக உருவெடுக்கச் செய்ய உதவுகிறது. மீரட் மெட்ரோ ரயில் மற்றும் நமோ பாரத் ரயில் சேவைகள், விரைவான மற்றும் நவீன போக்குவரத்து இணைப்பிற்கான வழித்தடங்களாக உருவாகி வருகின்றன. அதே வேளையில், ஜேவார் விமான நிலையம் வட இந்தியாவை, உலக நாடுகளுடன் இணைக்கிறது.

இப்பகுதி தற்போது, இரண்டு முக்கிய சரக்குப் போக்குவரத்து வழித்தடங்களுக்கான மையமாக உருவெடுத்து வருகிறது. சரக்கு ரயில்களுக்கென, தனியாக ரயில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், வடஇந்தியாவிற்கும், வங்காளம் மற்றும் குஜராத்தில் உள்ள துறைமுகங்களுக்கும் இடையேயான இணைப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இரண்டு சரக்கு போக்குவரத்துக்கான வழித்தடங்களும் இணையும் முக்கியச் சந்திப்பாக தாத்ரி விளங்குகிறது. இதன் மூலம், இப்பகுதி விவசாயிகள் தங்களது விளைபொருட்களையும், தொழில்துறையினர் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களையும், சாலை மற்றும் விமானப் போக்குவரத்து வலையமைப்புகள் வாயிலாக, உலகின் ஒவ்வொரு பகுதிகளுக்கும் மிக விரைவாகக் கொண்டு செல்ல முடியும். இந்தப் பன்முகப் போக்குவரத்து இணைப்பு வசதி, உத்தரப்பிரதேச மாநிலத்தை உலகம் முழுவதிலுமிருந்து வரும் முதலீட்டாளர்களுக்கு உகந்த, முதன்மையான இடமாக நிலைநிறுத்தி வருவதாக, பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

இந்தியா, கச்சா எண்ணெய் இறக்குமதியைச் சார்ந்திருக்கும் நிலையைக் குறைப்பதில், கரும்பு விவசாயிகளின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், கரும்பிலிருந்து உற்பத்தி செய்யப்படும் எத்தனாலின் முக்கியப் பங்களிப்பை பிரதமர் மோடி சுட்டிக் காட்டினார். எத்தனால் உற்பத்தி அதிகரிப்பும், அதனை பெட்ரோலுடன் கலக்கும் நடைமுறையும் இல்லாவிட்டால், இந்தியா ஆண்டுதோறும் கூடுதலாக 4.5 கோடி பீப்பாய் (சுமார் 700 கோடி லிட்டர்) கச்சா எண்ணெயை இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியிருக்கும் என்று அவர் குறிப்பிட்டார். எத்தனால் பயன்பாடு நாட்டிற்கு மட்டுமின்றி, விவசாயிகளுக்கும் குறிப்பிடத்தக்க நன்மைகளை ஈட்டித் தந்துள்ளது என்பது நிரூபணமாகியுள்ளது. இந்த முன்முயற்சியின் விளைவாக, ரூ.1.5 லட்சம் கோடி அளவிற்கான அந்நியச் செலாவணி சேமிப்பு ஏற்பட்டுள்ளது.








**நிகழ்ச்சியின் மையக்கருத்து:**

'ஊட்டச்சத்தும், கல்வியும் பெற்ற இந்தியாவிலிருந்து, வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கி'

குடியரசுத் தலைவரின் முழுமையான நிகழ்ச்சியைக் காண, இந்த கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

# வாய்ப்புகளை உருவாக்கும் முக்கியக் கருவி கல்வி ஆகும்

**குழந்தைகளே நாட்டின் எதிர்காலம். அவர்களுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவும், தரமான கல்வியும் கிடைப்பது மிகவும் அவசியமாகும். இதனால் தான், குழந்தைகளுக்குப் போதுமான ஊட்டச்சத்தையும், சிறந்த சுகாதாரச் சேவைகளையும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, மத்திய அரசு பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் குறைப்பதையும், குழந்தைகள் கல்வியைத் தொடர்வதை ஊக்குவிப்பதையும், குறிக்கோளாகக் கொண்ட இம்முயற்சிகளின் ஒரு பகுதியாக, 'அக்ஷய பாத்ரா' அறக்கட்டளை அமைப்பு, கடந்த 25 ஆண்டுகளாகப் பள்ளிகளுக்கு மதிய உணவு வழங்குவதில், அயராது பணியாற்றி வருகிறது. மார்ச் 17 அன்று, இந்த அமைப்பு, 500 கோடி உணவுப் பொட்டலங்களை விநியோகித்து, வரலாற்றுச் சாதனை படைத்துள்ளதை நினைவுகூரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கலந்து கொண்டு உரையாற்றினார்.**

ஒரு தனிநபரின் வாழ்வில் கிடைக்கும் வாய்ப்புகளைத் தீர்மானிப்பதற்கும், அவர்களின் வெற்றிக்கு வழிவகுப்பதற்கும் உதவும் கருவியாகக் கல்வி திகழ்கிறது என்று அவர் கூறினார். மாற்றத்திற்கும், அதிகாரமளித்தலுக்குமான பயனுள்ள ஊடகமாகவும் கல்வி அமைந்துள்ளது என்று அவர் தெரிவித்தார். அதிகாரமளித்தல் மற்றும் திறன் மேம்பாட்டிற்கான நடைமுறை, குழந்தைகள் பள்ளியில் சேரும் தருணத்திலிருந்தே வடிவம் பெறத் தொடங்குகிறது என்று அவர் கூறினார். அன்றாட வாழ்வின் சவால்களைத் திறம்பட எதிர்கொள்வதற்கும், பொறுப்புள்ள மற்றும் மனசாட்சியுடன் செயல்படும் குடிமக்களாக உருவாவதற்கும், தேவையான திறன்களையும், அனுபவங்களையும் பள்ளிக் கல்வி, குழந்தைகளுக்கு வழங்குகிறது என்று அவர் தெரிவித்தார். கடந்த 25 ஆண்டுகளாகப் பள்ளிகளுக்கு மதிய உணவு வழங்கி வருவதன் மூலம், குழந்தைகளிடையே நிலவும் ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் களைவதிலும், அவர்கள் கல்வியைத் தொடர்வதை ஊக்குவிப்பதிலும் தொடர்ந்து பணியாற்றி வரும் 'அக்ஷய பாத்ரா அறக்கட்டளை' அமைப்பை அவர் வெகுவாகப் பாராட்டினார். கல்விசார் நோக்கங்களை முன்னெடுத்துச் செல்லும் வகையில், ஐந்து பில்லியன் உணவுப் பொட்டலங்களை வழங்கியிருப்பது, 'அக்ஷய பாத்ரா' அமைப்பிற்கு குறிப்பிடத்தக்க சாதனையாகத் திகழ்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

## குழந்தைகளுக்கு ஒரு பொன்னான எதிர்காலம், நம் அனைவரது கூட்டுப் பொறுப்பாகும்

நம் குழந்தைகளுக்குப் பாதுகாப்பான மற்றும் பொன்னான எதிர்காலத்தை உறுதி செய்வது, அரசின் பொறுப்பாக இருப்பது மட்டுமின்றி, அது அனைவரின் கூட்டுப் பொறுப்பாகவும் இருக்க வேண்டும். ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூக அமைப்புகள், பெருநிறுவனங்கள் மற்றும் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்படும் போதுதான், வருங்காலத் தலைமுறைக்கு வலுவான அடித்தளத்தை அமைத்துத் தர இயலும்.



## ஊட்டச்சத்து மற்றும் சுகாதார சேவைகள் வழங்குவதை நோக்கமாகக் கொண்ட பல்வேறு முன்முயற்சிகள்

*கருவுற்ற தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் போதுமான ஊட்டச்சத்து மற்றும் மேம்பட்ட சுகாதார சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, மத்திய அரசு பல்வேறு முக்கிய நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. 'பிரதமரின் ஊட்டச்சத்து' திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும், பள்ளிகளுக்கான மதிய உணவுத் திட்டம், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப ஒரு முக்கிய ஊக்கசக்தியாகத் திகழ்வது நிரூபிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் விளைவாக, பள்ளிகளில், குழந்தைகளின் சேர்க்கை, வருகைப்பதிவு, இடைநிற்றலைத் தவிர்க்கும் சூழல் போன்றவற்றின் விகிதங்கள் அதிகரித்துள்ளன. இதனைப் பல்வேறு ஆய்வுகள் உறுதி செய்கின்றன. மேலும், குழந்தைகளின் கற்றல் திறன்களிலும், கல்விசார் செயல்திறனிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 2030–க்குள், அனைத்துக் குழந்தைகளுக்கும், தரமான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய கல்வி கிடைப்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட 'ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி' (சமக்ர சிக்ஷா அபியான்) திட்டத்தின் நோக்கங்களை முன்னெடுத்துச் செல்வதில், 'அக்ஷய பாத்ரா அறக்கட்டளை' முக்கியப் பங்காற்றி வருகிறது.*

### அக்ஷய பாத்ரா அறக்கட்டளை:
### நாட்டின் இளைய தலைமுறைக்கு ஊட்டச்சத்து அளித்தல்

**2.4** லட்சத்திற்கும் அதிகமான குழந்தைகள், தினமும் புதிதாகத் தயாரிக்கப்பட்ட ஊட்டச்சத்து நிறைந்த உணவைப் பெறுகின்றனர்.

**19** மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் இத்திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

- 23,000 பள்ளிகளும் மற்றும் அங்கன்வாடி மையங்களும் இத்திட்டத்தில் இணைந்து செயல்படுகின்றன.
- ஒவ்வொரு உணவின் வாயிலாக நம்பிக்கை, ஊட்டச்சத்து மற்றும் கல்வி வழங்கப்படுகிறது.



### பிரதமரின் ஊட்டச்சத்துத் திட்டம்

**12** *கோடி குழந்தைகள் பயிலும் 11 லட்சத்திற்கும் அதிகமான அரசுப் பள்ளிகளில் தினமும் உணவைப் பெறுகின்றனர்.*

ஒவ்வொரு குழந்தையும் தரமான கல்வி, ஊட்டச்சத்து நிறைந்த உணவு, நல்ல ஆரோக்கியம் மற்றும் தூய்மையான, பாதுகாப்பான சூழலைப் பெறுவதை நாம் உறுதி செய்ய வேண்டும் என்று குடியரசுத் தலைவர் வலியுறுத்தினார். இந்த அடிப்படை அம்சங்கள், குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றன.

**குழந்தைகள்: நாட்டின் ஒளிமயமான எதிர்காலத்தை வடிவமைப்பவர்கள்**

குழந்தைகள் இலவச உணவுத் திட்டங்களின் பயனாளிகளாக மட்டுமல்ல, அவர்கள் நாட்டின் ஒளிமயமான எதிர்காலத்தை வடிவமைப்பவர்கள் ஆவர். இன்று அவர்கள் பெறும் ஊட்டச்சத்து நிறைந்த உணவு, நாட்டின் மனிதவளத்தின் மீதான ஒரு முதலீடாக அமைகிறது என்று குடியரசுத் தலைவர் குறிப்பிட்டார். ஆரோக்கியமான, கல்வியறிவு பெற்றுள்ள மற்றும் ஆற்றல்மிக்க குழந்தைகளே, இந்தியாவின் எதிர்காலப் பணியாளர் சக்தியாகத் திகழ்வார்கள். 2047–க்குள் 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற இலக்கை அடைவதில், அவர்கள் முக்கியப் பங்கு வகிப்பார்கள்.

**ஆச்சார்ய ஸ்ரீல பிரபுபாதாவை நினைவுகூர்ந்த குடியரசுத் தலைவர்:**

அக்ஷய பாத்ரா அறக்கட்டளையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில், இஸ்க்கான் அமைப்பின் நிறுவன ஆச்சார்யரான ஸ்ரீல பிரபுபாதாவிற்கு, குடியரசுத் தலைவர் மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், "எந்தவொரு தனிநபரும் பசியால் வாடாத சமூகத்தை கற்பனை செய்து உருவாக்கிய இஸ்கான் அமைப்பின் நிறுவன ஆச்சாரியரான ஸ்ரீல பிரபுபாதருக்கு, எனது பணிவான மரியாதையைச் சமர்ப்பிக்கிறேன் என்று கூறினார்." இந்தியாவின் கலாச்சாரப் பாரம்பரியமான 'அன்னதானத்தை' (உணவு வழங்குதல்) அவர் உலக அரங்கிற்குக் கொண்டு சென்றதுடன், எவ்விதப் பாகுபாடும் இன்றி, இலவச உணவை விநியோகிப்பதை முன்னின்று ஆதரித்தார். இத்தகைய தொலைநோக்குப் பார்வை கொண்ட பேரறிஞர்களின் உழைப்பின் பயன்களை, வருங்கால சந்ததியினர் பலரும் அறுவடை செய்கின்றனர். தற்போது, இதுபோன்ற தொலைநோக்குப் பார்வையின் வழிகாட்டுதலுடன், 'பிரதமரின் ஏழைகள் நலனுக்கான உணவு தானிய' திட்டத்தின் வாயிலாக, ஏறத்தாழ 80 கோடி மக்களுக்கு மத்திய அரசு இலவச உணவு தானியங்களை வழங்கி வருகிறது.

# அதிகாரமளிக்கப்பட்ட கிராமப்புறச் சமூகங்கள், அதிகாரமளிக்கப்பட்ட பஞ்சாயத்துகள்

## பஞ்சாயத்து அமைப்புகளுக்கான தரவு சார்ந்த தகவல்கள்:

ஸ்வாமித்வா திட்டத்திற்கு முன், மத்தியப் பிரதேசத்தின் செஹோர் மாவட்டத்தில் உள்ள பில்கிஸ்கஞ்ச் கிராமப் பஞ்சாயத்து, கைகளால் வரையப்பட்ட வரைபடங்களையே நம்பியிருந்தது. சேவைகளுக்கான செலவுகளை மதிப்பிடுவது கூட, ஒரு சவாலான பணியாக இருந்தது. ஸ்வாமித்வா நில வரைபடங்கள் அறிமுகம் செய்யப்பட்டதன் மூலம், பஞ்சாயத்து அமைப்புகள் துல்லியமான, தரவு சார்ந்த தகவல்களைக் கொண்டுள்ளன. ஸ்வாமித்வா திட்டத்தின் உதவியால், பல்வேறு செயல்பாடுகளுக்கான நில ஒதுக்கீடு, மேம்பாட்டுக்கான திட்டமிடல் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நிலத்தை திறம்படப் பயன்படுத்துவதும், மேம்பட்ட சேவை வழங்குவதும் தற்போது சாத்தியமாகியுள்ளன.

## சொத்து அட்டைகள் மூலம் தீர்வு காணப்பட்டுள்ள நிலத் தகராறுகள்

ஜம்மு-காஷ்மீரின் சம்பா மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்வாமித்வா திட்டத்தின் பயனாளியான வீரேந்திர குமார், தனது சொத்து அட்டையைப் பெற்றதில் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளார். அவரது கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பல தலைமுறைகளாக, ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக, அங்கு வசித்து வந்த போதும், அவர்களிடம் முறையான நில ஆவணங்கள் ஏதும் இல்லை. தற்போது, கிராமத்தைச் சேர்ந்த மக்கள் தங்களது ஸ்வாமித்வா அட்டைகளைப் பெற்றதில் மகிழ்ச்சி அடைகின்றனர். ஸ்வாமித்வா அட்டையைப் பெற்றதன் மூலம், தனது நிலம் தொடர்பான தகராறுகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாக வீரேந்திரா தெரிவிக்கிறார். "இந்த அட்டையின் உதவியால், தற்போது எனது நிலத்தை அடமானம் வைத்து, வங்கிக் கடன் பெற முடிகிறது. எனது வீட்டைச் சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ள முடிகிறது. கிராமத்திற்குள் நிலம் தொடர்பான தகராறுகளும், மோதல்களும் கணிசமான அளவில் குறைந்துள்ளன என்று தெரிவித்தார்."

## ஸ்வாமித்வா அட்டைகள் மூலம் எளிதாக்கப்பட்ட கடன் வசதி

மகாராஷ்டிராவின் நாக்பூரைச் சேர்ந்த ஸ்வாமித்வா பயனாளியான ரோஷன் சம்பா பாட்டீல், இந்த அட்டையைப் பெற்றது குறித்தும், அதன் வாயிலாக கிடைத்த உதவி மற்றும் நன்மைகள் குறித்த தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். கிராமத்தில் தனக்கு ஒரு பெரிய, பழமையான வீடு இருந்ததாகவும், அந்தச் சொத்து அட்டையின் உதவியுடன், ரூ.9 லட்சம் கடன் பெற்றதாகவும், அதனைக் கொண்டு தனது வீட்டைப் புதுப்பிப்பதற்கும், விவசாய நடவடிக்கைகளுக்கான நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்துவதற்கும், பயன்படுத்தியதாகவும் ரோஷன் விளக்கினார். இதன் காரணமாக, தனது வருமானம் மற்றும் பயிர் விளைச்சல் ஆகிய இரண்டும் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். இந்த ஸ்வாமித்வா திட்டம், தனது வாழ்க்கையில் ஏற்படுத்திய நேர்மறையான தாக்கத்திற்கு ஒரு சான்றாகும் என்றார்.

## ஸ்வாமித்வா அட்டைகள் மூலம் உயர்ந்த தன்னம்பிக்கை

ஒடிசாவின் ராயகடா மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்வாமித்வா பயனாளியான கஜேந்திர சங்கீதா, ஸ்வாமித்வா அட்டையைப் பெற்றது ஒரு மிகப்பெரிய மாற்றத்தைக் குறிப்பதாகத் தெரிவித்தார். குறிப்பாக, கடந்த 60 ஆண்டுகளாகத் தனது சொத்துக்கு முறையான ஆவணங்கள் ஏதும் இல்லாதிருந்த சூழலைக் கருத்தில் கொள்ளும் போது, இது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இந்த அட்டையைப் பெற்றதன் மூலம், தனது தன்னம்பிக்கை அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார். மேலும், தனது தையல் தொழிலை விரிவுபடுத்துவதற்கு, தற்போது கடன் பெறத் திட்டமிட்டுள்ளதாகவும், அவர் குறிப்பிட்டார்.

**இந்தியாவின் கிராமப்புற மக்கள், பஞ்சாயத்து அமைப்புகள் மற்றும் அவற்றின் பொருளாதார நிலையை வலுப்படுத்தும் நோக்கத்துடன், ஆறு ஆண்டுகளுக்கு முன், ஏப்ரல் 24 அன்று, (பஞ்சாயத்து ராஜ் தினம்) பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கப்பட்ட ஸ்வாமித்வா திட்டத்துடன் தொடர்புடைய கதைகள், இம்முயற்சி எவ்வாறு கிராமப்புற இந்தியாவின் லட்சியங்களை மறுவடிவமைப்பு செய்கிறது என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றன. இத்திட்டத்தைத் தொடங்கி வைத்த போது, சொத்துரிமை தொடர்பான தெளிவில்லாதத் தரவுகளை இந்த அட்டை நீக்க உதவும் என்றும், கிராமப் பகுதிகளுக்குள் மேற்கொள்ளப்படும் மேம்பாட்டுத் திட்டங்களைச் சிறப்பாகத் திட்டமிடுவதற்கு இது பெரிதும் உதவும் என்றும், பிரதமர் மோடி குறிப்பிட்டிருந்தார். கிராமப்புற மக்கள், தங்களது சொத்துக்களைப் பிணையமாகப் பயன்படுத்துவதை எளிதாக்குவதன் மூலம், நகர்ப்புற மக்களைப் போலவே, அவர்களும் வங்கிக் கடன்களைப் பெறுவதற்கான நடைமுறையை இத்திட்டம் எளிமைப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.**



## ஸ்வாமித்வா திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்

- சொத்துகளைப் பணமாக்குவதை எளிதாக்குவது
- வங்கி கடன் பெறுவதை எளிதாக்குவது
- சொத்து தொடர்பான தகராறுகளைக் குறைப்பது
- கிராம சுய ஆட்சியை உண்மையாகவே நனவாக்குவதற்கும், கிராமப்புற இந்தியாவைத் தற்சார்படையச் செய்வதற்கும் முதல் படியாக அமையும் விரிவான கிராமப்புற அளவிலான திட்டங்களை வகுப்பது

## விநியோகிக்கப்பட்ட சொத்து உரிமை அட்டைகள்

**31** மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

**3.45** லட்சத்திற்கும் அதிகமான கிராமங்கள் கணக்கெடுப்பிற்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

**3.29** கிராமங்களில் ட்ரோன் அடிப்படையிலான நில அளவைப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

**3.10** கோடி சொத்து அட்டைகள் 1.87 லட்சம் கிராமங்களுக்கு உருவாக்கப்பட்டுள்ளன.

**2.65** கோடிக்கும் அதிகமான சொத்து அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

*குறிப்பு: 2026 மார்ச் 11 நிலவரப்படியான தரவுகள்.





**"கிராமங்களையும் ஏழைகளையும் தற்சார்படையச் செய்வதே இந்தியா ஆற்றலின் உண்மையான அடையாளம் என நாடு தீர்மானித்துள்ளது. இந்தத் தீர்மானத்தை நனவாக்குவதில் ஸ்வாமித்வா திட்டம் முக்கியப் பங்காற்றுகிறது."**

**– நரேந்திர மோடி,** பிரதமர்

இத்திட்டத்தின் காரணமாக உருவான பல வெற்றிக் கதைகளின் வாயிலாக, பயனாளிகள் தற்போது இத்தகைய நன்மைகளைத் தாங்கள் பெற்றுள்ளது குறித்து எடுத்துரைத்து வருகின்றனர்.
இத்திட்டத்தின் காரணமாக உருவான பல்வேறு வெற்றிக் கதைகளில், பயனாளிகள் இந்த திட்டத்தின் நன்மைகளைச் சிறப்பாக எடுத்துக் கூறி வருகின்றனர். இந்த முன்முயற்சி, நில உரிமை தொடர்பான பல நூற்றாண்டு கால சவால்களை, வளர்ச்சிக்கும் அதிகாரமளித்தலுக்குமான வாய்ப்புகளாக மாற்றி வருகிறது. இது நிலத் தகராறுகளைத் தீர்த்து, கிராமப்புற மக்களின் சொத்துக்களைப் பொருளாதார முன்னேற்றத்திற்கான சக்திவாய்ந்த கருவிகளாக மாற்றுகிறது. உயர் தொழில்நுட்ப ட்ரோன் ஆய்வுகள் முதல் டிஜிட்டல் சொத்து அட்டைகள் வரை, இந்தத் திட்டம் வெறும் வரைபடங்களாகவும் எல்லைகள் நிர்ணயமாகவும் மட்டுமே இருப்பதற்கு அப்பாற்பட்டு, கனவுகளைப் புதிய உயரங்களுக்குக் கொண்டு செல்கிறது. கிராமங்கள் இந்தப் புதுமைத் திட்டத்தால் உருவான மாற்றத்தை ஏற்றுக்கொள்வதால், அரசின் இந்த முன்முயற்சி, கிராப்புற சமூகங்களுக்கு அளப்பரிய நன்மை பயப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இது தற்சார்பு, மேம்பட்ட திட்டமிடல், வலுவான, ஒருங்கிணைந்த கிராமப்புற இந்தியா ஆகியவற்றை நோக்கிய, ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு சக்தியாக உருவாகி வருகிறது.
நாட்டின் விடுதலைக்குப் பின், அரசின் கொள்கை வழிகாட்டு நெறிமுறைகளில் பொதிந்துள்ளபடி, கிராமப் பஞ்சாயத்துகளை அரசே அமைத்து, அவை தன்னாட்சி பெற்ற அமைப்புகளாகச் செயல்படத் தேவையான அதிகாரங்களையும் தகுதிகளையும் அவற்றுக்கு வழங்க வேண்டும் என்று, அரசியல் சாசனத்தின் 40–வது பிரிவு

# பஞ்சாயத்து ராஜின் தொடக்கம்... ஏப்ரல் 24 பஞ்சாயத்து ராஜ் தினம்

- இந்தியப் பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் வேர்கள் நாட்டின் வரலாற்றிலும் கலாச்சாரத்திலும் ஆழமாகப் பதிந்துள்ளன. இந்தியாவின் மிகப் பழமையான புனித நூல்களிலும் வரலாற்று ஆதாரங்களிலும் ஒன்றான ரிக் வேதம், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தன்னாட்சியுடன் திகழ்ந்த கிராமப்புற சமூகங்களைப் பற்றிய குறிப்புகளைக் கொண்டுள்ளது.

- 1957-ல், பல்வந்த் ராய் மேத்தா தலைமையிலான குழு தனது அறிக்கையில், சமூக மேம்பாட்டு நடவடிக்கைகளில் பொதுமக்களின் பங்கேற்பு, சட்டப்பூர்வ பிரதிநிதித்துவ அமைப்புகள் மூலம் வழிநடத்தப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தபோது, பஞ்சாயத்து ராஜ் அமைப்பை நிறுவுவதில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க திருப்புமுனை ஏற்பட்டது.



- இருப்பினும், உண்மையான நோக்கத்துடன், பஞ்சாயத்து ராஜ் அமைப்பு சுதந்திர இந்தியாவில் முதன்முதலில் 1959-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதி ராஜஸ்தான் ஜெய்ப்பூரிலிருந்து 260 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள நாகௌரில் செயல்படுத்தப்பட்டது.

- 1978-ல், அசோக் மேத்தா குழு, பஞ்சாயத்து ராஜ் முறைக்கு அரசியல் சாசன அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்து ஓர் அறிக்கையை சமர்ப்பித்தது.

- 1992 டிசம்பர் 22, 23 ஆகிய தேதிகளில், மத்திய அரசு ஊராட்சிகள், நகராட்சிகள் தொடர்பான இரண்டு மசோதாக்களை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் அறிமுகம் செய்தது. குடியரசுத் தலைவரின் ஒப்புதலைத் தொடர்ந்து, இந்தச் சட்டம் 1993 ஏப்ரல் 24 அன்று, அரசியல் சாசனத்தின் 73-வது திருத்தச் சட்டம்-1992 ஆக நடைமுறைக்கு வந்தது.

- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான விதிகளை வகுத்த 1992-ம் ஆண்டின் அரசியல் சாசனத்தின் 74-வது திருத்தச் சட்டம், 1993-ம் ஆண்டு ஜூன் 1-ம் தேதி நடைமுறைக்கு வந்தது.

*நாடு முழுவதும் 2,60,000 ஊராட்சிகளில் (பஞ்சாயத்துகள்) உள்ள மக்களின் சமூக, அரசியல் மேம்பாட்டை உறுதி செய்வதன் மூலம், இப்போது இந்தப் பஞ்சாயத்து ராஜ் அமைப்பு இந்திய ஜனநாயகத்தின் அடித்தளத்தை வலுப்படுத்துகிறது. இதில் 24.24 லட்சம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உள்ளனர். இவர்களில் ஏறக்குறைய 49.55 சதவீதம் பேர் பெண்கள்.*



குறிப்பிட்டுள்ளது. பஞ்சாயத்துராஜ் அமைப்பு முறை அதன் தொடக்கத்திலிருந்து, தன்னாட்சியையே சாராம்சமாகக் கொண்டுள்ளது.

1992-ல் இயற்றப்பட்டு, 1993-ல் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல் சட்டத் திருத்தத்தைத் தொடர்ந்து, இந்தப் பஞ்சாயத்து ராஜ் அமைப்பு அரசியல் சாசனத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக மாறியது. முந்தைய ஆட்சிக் காலங்களில், இந்தியா முழுவதும் உள்ள எண்ணற்ற கிராமப்புறக் குடும்பங்கள் தொடர்பான பதிவுகளும், கிராமங்களின் நிலப் பகுதிகளுக்கான பதிவேடுகளும் முறையாகப் பராமரிக்கப்படவில்லை. சட்டப்பூர்வ ஆவணங்கள் இல்லாததால், தனிநபர்கள் தங்கள் உரிமைகளை நிரூபிக்க முடியவில்லை. மேலும், வங்கிக் கடன்களைப் பெறவோ அல்லது அரசு உதவியை அணுகவோ தங்கள் சொத்துக்களைப் பயன்படுத்தவும் அவர்களால் முடியவில்லை. பதிவேடுகளில் இருந்த இந்த முரண்பாடுகள் கிராமப்புறங்களில் பொருளாதார வளர்ச்சியைத் தடுத்து, எண்ணற்ற நிலத் தகராறுகளுக்கு வழிவகுத்தன. இந்தச் சவால்கள் அனைத்தையும் தீர்க்கும் வகையில், பிரதமர் நரேந்திர மோடி, 2020 ஏப்ரல் 24 அன்று ஸ்வாமித்வா திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இது இப்போது கிராமப்புற இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் புதிய உத்வேகத்தை அளிக்கும் முன்முயற்சியாக மாறியுள்ளது.

நிதி அமைச்சகத்தின் 'ஜன் சுரக்ஷா' தளத்தின் (போர்ட்டல்) தரவுகள், 2026 பிப்ரவரி நிலவரப்படி, 10,913 சொத்து அட்டைதாரர்களுக்கு சுமார் 1,680 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத் தகவல்படி, சொத்து அட்டைகளின் பயன்பாட்டின் வெற்றி தொடர்பாக பல்வேறு மாநிலங்களிலிருந்து குறிப்பிடத்தக்க அளவில் நேர்மறையான தகவல்கள் பெறப்பட்டுள்ளன. குறிப்பாக, ஸ்வாமித்வா திட்டத்தின் பயனாளிகள், வீடு கட்டுதல், வாகனங்கள் வாங்குதல் போன்றவை முதல் வணிக விரிவாக்கம், பால் பண்ணை நிறுவனங்களை அமைத்து அவற்றை மேம்படுத்துதல் வரை பல்வேறு தேவைகளுக்காக, தங்கள் ஸ்வாமித்வா அட்டைகளைப் பிணையமாகப் பயன்படுத்தி வங்கிக் கடன் பெற்றுள்ளனர்.

# நாட்டு மக்களின் நலனே முதன்மையானது



பிரதமரின் முழுமையான உரையைக் காண இந்த க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

**மேற்கு ஆசியாவில் அதிகரித்து வரும் பதற்றங்களும், ஈரானுக்கும், இஸ்ரேல் – அமெரிக்காவுக்கும் இடையேயான தொடர் மோதலும் உலகளாவிய கவலைகளை அதிகரித்துள்ளன. உலக ஒழுங்கு தடுமாறுவதாகத் தோன்றும் இத்தகைய இக்கட்டான காலத்தில், இந்தியா தனது விவேகம், நிதானம், தொலைநோக்குப் பார்வை ஆகியவை மூலம் மீண்டும் ஒருமுறை உறுதியான தலைமைத்துவ செயல்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. வரவிருக்கும் நெருக்கடியை எதிர்பார்த்து, தேசம் தனது தயார்நிலையை வலுப்படுத்தியது மட்டுமின்றி, எந்தவிதமான பீதியோ அல்லது நிலையற்ற தன்மையோ பொது மக்களின் வாழ்க்கையை சீர்குலைக்கக் கூடாது என்பதையும் உறுதி செய்தது. கொவிட்-19 காலகட்டத்தில் ஏற்கனவே இந்தத் திறனை வெளிப்படுத்திய மத்திய அரசு, தற்போதைய நெருக்கடியைக் கண்காணிப்பதற்காக அமைச்சகங்களுக்கு இடையிலான ஒரு குழுவை இப்போது அமைத்துள்ளது. இந்தக் குழு நாட்டு மக்களுக்கு தினசரி தகவல்களை வழங்கும். அதே நேரத்தில், பிரதமர் நரேந்திர மோடி, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் உரையாற்றி நாட்டுக்கு ஒரு செய்தியை வழங்கியுள்ளார். "இந்தியா சவால்களை வெறுமனே எதிர்கொள்வதில்லை; அவற்றை வாய்ப்புகளாக மாற்றும் அசைக்க முடியாத திறனை அது கொண்டுள்ளது. ஒவ்வொரு நெருக்கடியிலிருந்தும் முன்பை விட வலிமையாக வெளிவரும் ஒரு தேசம் இந்தியா...".**

மேற்கு ஆசியாவில் தொடரும் மோதலும், அதன் விளைவாக ஏற்படும் சவால்களும் உலகின் பெரும் பகுதியை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளன. இந்தப் போர், உலகப் பொருளாதாரத்திலும் உலகெங்கிலும் உள்ள மக்களின் வாழ்விலும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை, இந்த மோதல் முன்னெப்போதும் இல்லாத சவால்களை முன்வைத்துள்ளது. இந்தச் சவால்கள், பொருளாதாரம், தேசப் பாதுகாப்பு மனிதாபிமான அக்கறை ஆகியவற்றை உள்ளடக்கியவை. ஏனெனில், இந்தியா போரிடும் நாடுகளுடனும், மோதலால் பாதிக்கப்பட்ட நாடுகளுடனும் விரிவான தூதரக, வர்த்தக உறவுகளைப் பேணி வருகிறது. போர்கள் அரங்கேறும் பிராந்தியத்தின் வழியாக ஒரு முக்கிய வர்த்தக வழித்தடம் செல்கிறது. அது நம்மை உலகின் பிற பகுதிகளுடன் இணைக்கிறது. குறிப்பாக, இந்தப் பிராந்தியம், கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு ஆகியவற்றுக்கான நமது தேவைகளைப் பூர்த்தி செய்வதில்

### முன்னுரிமை: இந்தியர்களின் பாதுகாப்பு

மோதல் தொடங்கியதிலிருந்து, பாதிக்கப்பட்ட நாடுகளில் உள்ள ஒவ்வொரு இந்தியருக்கும் அத்தியாவசிய உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேற்கு ஆசியாவின் பெரும்பாலான நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் நரேந்திர மோடியே தொலைபேசி மூலம் இரண்டு சுற்று ஆலோசனைகளை நடத்தியுள்ளார். அவர்கள் அனைவரும் இந்தியர்களின் பாதுகாப்பு, நலன் ஆகியவை குறித்து முழுமையான, தெளிவான உறுதிமொழிகளை வழங்கியுள்ளனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து இந்தியத் தூதரகங்களும் இந்திய தேசத்தவருக்கு உதவும் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளன. அங்கு பணிபுரியும் தொழில் வல்லுநர்களாக இருந்தாலும், அப்பகுதிக்குச் சென்ற சுற்றுலாப் பயணிகளாக இருந்தாலும், அனைவருக்கும் சாத்தியமான அனைத்து விதமான உதவிகளும் வழங்கப்படுகின்றன. இந்தியாவிலும், பாதிக்கப்பட்ட மற்ற நாடுகளிலும் அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறைகளும் அவசர உதவி எண்களும் நிறுவப்பட்டுள்ளன. மோதல் தொடங்கியதிலிருந்து, 3,75,000-க்கும் அதிகமான இந்தியர்கள் பாதுகாப்பாக இந்தியா திரும்பியுள்ளனர். ஈரானிலிருந்து மட்டும் இதுவரை சுமார் 1,000 இந்தியர்கள் பாதுகாப்பாகத் திரும்பியுள்ளனர். அவர்களில் 700-க்கும் அதிகமானோர் மருத்துவப் படிப்பு பயிலும் இளம் மாணவர்கள் ஆவர்.

ஒரு குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கிறது.

இந்தப் பிராந்தியம் மற்றொரு காரணத்திற்காகவும் முக்கியத்துவம் பெறுகிறது. வளைகுடா நாடுகளில் ஏறத்தாழ 1 கோடி இந்தியர்கள் வசித்து வருவதுடன் அங்கு அவர்கள் பணி செய்கிறார்கள். மேலும், அப்பகுதிகளின் கடற்பரப்பில் பயணிக்கும் வர்த்தகக் கப்பல்களில் உள்ள பணியாளர்களில் கணிசமான பகுதியினர் இந்திய மாலுமிகளே ஆவர். இந்தப் பன்முகக் காரணிகளைக் கருத்தில் கொண்டு, இந்தியாவின் கவலைகள் இயல்பாகவே அதிகரித்துள்ளன. எனவே, இந்த நெருக்கடி குறித்து இந்திய நாடாளுமன்றம் உலகிற்கு ஒருமித்த குரலை எழுப்புவது அவசியமாகும் என்று பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

### சாமானியக் குடும்பங்களின் சிரமத்தைக் குறைத்தல்

கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, உரங்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களை கணிசமான அளவில் ஹோர்மூஸ் நீரிணை வழியாக இந்தியா இறக்குமதி செய்கிறது. மோதல் வெடித்ததிலிருந்து, ஹோர்மூஸ் நீரிணை வழியாக கடல்வழிப் போக்குவரத்து மிகவும் சவாலானதாக மாறியுள்ளது. இருப்பினும், பெட்ரோல், டீசல், இயற்கை எரிவாயு ஆகியவற்றின் விநியோகம் பெரும்பாலும் தடையின்றி இருப்பதை உறுதி செய்ய மத்திய அரசு முயன்று வருகிறது. நாடு முழுவதும் உள்ள சாதாரணக் குடும்பங்களுக்கு ஏற்படும் எந்தவொரு சிரமத்தையும் குறைப்பதே இதன் முதன்மை நோக்கமாக உள்ளது. இந்தியா தனது சமையல் எரிவாயுத் தேவைகளில் 60 சதவீதத்தை இறக்குமதி செய்கிறது. தற்போது அதன் விநியோகத்தைச் சுற்றியுள்ள நிச்சயமற்ற தன்மைகளைக் கருத்தில் கொண்டு, வீட்டு உபயோக நுகர்வுக்கான சமையல் எரிவாயு ஒதுக்கீட்டிற்கு அரசு முன்னுரிமை அளித்துள்ளது. அதே நேரத்தில், உள்நாட்டிலேயே சமையல் எரிவாயு உற்பத்தியை அதிகரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாடு முழுவதும் பெட்ரோல், டீசல் விநியோகம் சீராகவும் தடையின்றியும் இருப்பதை உறுதி செய்வதற்கும் தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 11 ஆண்டுகளுக்கு முன், கச்சா எண்ணெய், திரவ இயற்கை எரிவாயு, சமையல் எரிவாயு போன்ற எரிசக்தி வளங்களை 27 நாடுகளில் இருந்து இந்தியா இறக்குமதி செய்தது. இப்போது, 41 நாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறது. 5.3 மில்லியன் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான உத்திசார் பெட்ரோலிய இருப்புகளை இந்தியா தற்போது கொண்டுள்ளது. மேலும் 6.5 மில்லியன் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான கூடுதல் சேமிப்புத் திறன்களை நிறுவுவதற்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இது, பல்வேறு எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்களால் தற்போது பராமரிக்கப்படும் சேமிப்புகளை விடக் கூடுதலாகும். அரசு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விநியோகஸ்தர்களுடன் தொடர்ந்து தகவல் பரிமாற்றத் தொடர்பில் இருந்து வருகிறது. சாத்தியமான ஒவ்வொரு அம்சத்திலிருந்தும் எண்ணெய், எரிவாயு ஆகியவற்றின் தொடர்ச்சியான விநியோகத்தை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும். மத்திய அரசு, வளைகுடா நாடுகள், அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கப்பல் போக்குவரத்து வழித்தடங்களைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. எண்ணெய், எரிவாயு, உரங்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களை ஏற்றி வரும் கப்பல்கள் பாதுகாப்பாக இந்தியாவுக்கு வருவதை உறுதிசெய்ய அரசு பாடுபடுகிறது.

### எரிசக்தி : பொருளாதாரத்தின் முதுகெலும்பு

இன்றைய உலகில் எரிசக்தி, பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்குகிறது. அத்துடன் உலகளாவிய எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் மேற்கு ஆசியா ஒரு முக்கிய ஆதாரமாகத் திகழ்கிறது. உலகெங்கிலும் உள்ள பொருளாதாரங்கள் தற்போது நிலவும் நெருக்கடியால் பாதிக்கப்படுகின்றன. இதன் விளைவாக, இந்தியா குறைந்தபட்ச பாதகமான விளைவுகளை எதிர்கொள்வதை உறுதிசெய்ய தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறுகிய கால, நடுத்தர கால அல்லது நீண்ட கால என ஒவ்வொரு சாத்தியமான தாக்கத்தையும் எதிர்கொள்ள அரசு ஒரு விரிவான உத்தியுடன் செயல்படுகிறது. அமைச்சகங்களுக்கு இடையிலான ஒரு குழுவையும் மத்திய அரசு அமைத்துள்ளது. இது இறக்குமதி, ஏற்றுமதி நடவடிக்கைகளில் எழும் எந்தவொரு சிரமங்களையும் மதிப்பிடுவதற்கும் தீர்ப்பதற்கும் தினசரி கூடுகிறது. நமது தானியக் கிடங்குகளை முழுமையாக நிரப்பி வைத்திருக்கும் நாட்டின் விவசாயிகளுக்கு நன்றி. இந்தியா போதுமான உணவு தானிய இருப்புகளைக் கொண்டுள்ளது. மேலும், கடந்த சில ஆண்டுகளாக, எந்தவொரு அவசரநிலையையும் திறம்படக் கையாள்வதற்கான ஏற்பாடுகளையும், தடையற்ற உர விநியோகத்திற்குப் போதுமான ஏற்பாடுகளையும் அரசு உறுதி செய்துள்ளது. கொவிட்-19 பெருந்தொற்றின்போதும் அதைத் தொடர்ந்து பல்வேறு மோதல்களுக்கு இடையிலும் உலகளாவிய விநியோகத் தொடர்களில் குறிப்பிடத்தக்க இடையூறுகள் ஏற்பட்டன.

## நிலக்கரி உற்பத்தியில் சாதனை

வரும் நாட்களில் கோடைக்காலம் தீவிரமடைய உள்ளதால், மின்சாரத்திற்கான தேவை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது, நாடு முழுவதும் உள்ள அனைத்து மின் உற்பத்தி நிலையங்களிலும் போதுமான நிலக்கரிக் கையிருப்பு உள்ளது. இந்தியா தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக 100 கோடி டன் நிலக்கரியை உற்பத்தி செய்து வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளது.

மின் உற்பத்தி முதல் மின் விநியோகம் வரையான அனைத்து அமைப்புகளும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மேலும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் பங்களிப்பால் அரசின் ஆயத்த முயற்சிகளுக்குக் குறிப்பிடத்தக்க உத்வேகம் கிடைத்துள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் நாடு மகத்தான முன்னேற்றங்களை அடைந்துள்ளது. இப்போது, நாட்டின் மொத்த நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறனில் ஏறத்தாழ பாதி அளவு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களால் பூர்த்தி செய்யப்படுகிறது. மொத்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறன் இப்போது 250 ஜிகாவாட் என்ற வரலாற்று மைல்கல்லைத் தாண்டியுள்ளது. கடந்த 11 ஆண்டுகளில், நாடு தனது சூரிய மின்சக்தித் திறனை 3 ஜிகாவாட்டிலிருந்து ஏறத்தாழ 140 ஜிகாவாட்டாக அதிகரித்துள்ளது.

## பிரதமர் நரேந்திர மோடி மேற்கு ஆசியாவின் அனைத்துத் தலைவர்களுடனும் கலந்துரையாடினார்

மேற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள மோதல் குறித்து இந்தியா ஏற்கெனவே தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளது. பிரதமர் நரேந்திர மோடியே அப்பகுதியில் உள்ள அனைத்துத் தொடர்புடைய நாடுகளின் தலைவர்களுடனும் கலந்துரையாடியுள்ளார். பதற்றத்தைத் தணித்து, இந்த மோதலுக்கு ஒரு முடிவைக் கொண்டுவருமாறு அவர் அனைவரையும் வலியுறுத்தியுள்ளார். பொதுமக்களையும், எரிசக்தி, போக்குவரத்து தொடர்பான உள்கட்டமைப்புகளையும் குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல்களை இந்தியா கண்டித்துள்ளது. வர்த்தகக் கப்பல்கள் மீதான தாக்குதல்களும், ஹோர்மூஸ் நீரிணை போன்ற சர்வதேச நீர்வழித் தடங்களில் ஏற்படுத்தப்படும் தடைகளும் ஏற்றுக்கொள்ள முடியாதவை. இந்த மோதல் சூழ்நிலைக்கு இடையிலும், இந்தியக் கப்பல்களின் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்வதற்காக, தூதரகங்கள் மூலம் தொடர்ச்சியான முயற்சிகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது.





ஒரு கட்டத்தில், உலகச் சந்தையில் ஒரு மூட்டை யூரியாவின் விலை 3,000 ரூபாய் வரை உயர்ந்தது. இருப்பினும், அதே ஒரு மூட்டை யூரியா, இந்திய விவசாயிகளுக்கு 300 ரூபாய்க்கும் குறைவான மானிய விலையில் கிடைத்தது. கடந்த பத்து ஆண்டுகளில், நாடு முழுவதும் ஆறு புதிய யூரியா தொழிற்சாலைகள் செயல்பாட்டுக்கு வந்துள்ளன. இதன் மூலம் ஆண்டு உற்பத்தித் திறன் 7.6 மில்லியன் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. இதே காலகட்டத்தில், டை அமோனியம் பாஸ்பேட் (டிஏபி), நைட்ரஜன்– பாஸ்பரஸ் – பொட்டாசியம் (என்பிகே) போன்ற உரங்களின் உள்நாட்டு உற்பத்தியும் சுமார் 5 மில்லியன் மெட்ரிக் டன் அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், இயற்கை விவசாய முறைகளைப் பின்பற்ற விவசாயிகளை அரசு தீவிரமாக ஊக்குவித்து வருகிறது.

## ஒவ்வொரு சவாலையும் எதிர்கொள்ளுதல்

இந்த மோதலின் விளைவாக ஏற்பட்டுள்ள கடினமான, உலகளாவிய சூழ்நிலை நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். எனவே, நாம் தயாராகவும் ஒற்றுமையாகவும் இருக்க வேண்டும். ஒவ்வொரு சவாலையும் நாம் பொறுமையுடனும் நிதானத்துடனும் எதிர்கொள்ள வேண்டும். இந்தச் சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முயற்சி செய்பவர்கள் தவறான தகவல்களைப் பரப்புவார்கள். அவர்களின் முயற்சிகள் வெற்றிபெற நாம் அனுமதிக்கக் கூடாது. இதுபோன்ற காலங்களில் கள்ளச்சந்தை, பதுக்கல் போன்றவற்றில் ஈடுபடும் நபர்கள் தீவிரமாகச் செயல்பட முனைகிறார்கள் என்பதைக் குறிப்பிட்ட பிரதமர் நரேந்திர மோடி, நாடு முழுவதும் உள்ள அனைத்து மாநில அரசுகளும் கடுமையான கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். ●

# ‘டீம் இந்தியா’

## மேற்கு ஆசிய நெருக்கடியை கூட்டாக சமாளிக்கும்

**மேற்கு ஆசியாவில் நிலவும் போர்ச் சூழலால் உலகளாவிய நிச்சயமற்ற நிலை உருவாகியுள்ள வேளையில், நாடு ஒருங்கிணைந்த குழுவாக (டீம் இந்தியா) இணைந்து செயல்பட்டு வருகிறது. இந்தச் சூழலை இந்தியா வெற்றிகரமாகக் கடந்து செல்லும் என்று பிரதமர் நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்தார். மாநில முதலமைச்சர்கள், யூனியன் பிரதேச துணைநிலை ஆளுநர்கள் ஆகியோருடனான கூட்டத்தின்போது, இந்தச் சூழ்நிலையை சமாளிக்க மத்திய அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளுக்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. மத்திய அரசுடன் இணைந்து செயல்படுவதற்கான தங்களின் உறுதிப்பாட்டை முதலமைச்சர்கள் மீண்டும் உறுதிப்படுத்தினர்.**



2026 மார்ச் 27 அன்று, மேற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள சமீபத்திய நிகழ்வுகள், அவை இந்தியாவில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் ஆகியவை குறித்தும், அது தொடர்பான தயார்நிலையை ஆய்வு செய்வதற்காகவும், பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மாநில முதலமைச்சர்கள், யூனியன் பிரதேசத் துணைநிலை ஆளுநர்கள் ஆகியோருடன் முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில், மேற்கு ஆசியாவில் நிலவும் சூழ்நிலையைக் குறிப்பிட்ட பிரதமர், இதுபோன்ற உலகளாவிய இடையூறுகளைக் கையாள்வதில் இந்தியாவுக்கு முன் அனுபவம் உள்ளது என்று கூறினார். கொவிட்–19 பெருந்தொற்றின் போது, விநியோகத் தொடர்கள், வர்த்தகம், அன்றாட வாழ்வு ஆகியவற்றில் ஏற்பட்ட பாதிப்பைக் குறைப்பதற்கு மத்திய அரசும் மாநில அரசுகளும் 'டீம் இந்தியா' என, குழுவாக இணைந்து செயல்பட்ட கூட்டு முயற்சிகளை அவர் நினைவு கூர்ந்தார். தற்போதைய சூழ்நிலைகளைக் கையாள்வதில், இந்த ஒத்துழைப்பும், ஒருங்கிணைப்பு உணர்வுமே இந்தியாவின் மிகப்பெரிய பலமாக அமைகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

2026 மார்ச் 03 முதல் அமைச்சகங்களுக்கு இடையே ஒரு குழு செயல்பட்டு வருவதாகவும், அது தினசரி அடிப்படையில் நிலைமையை ஆய்வு செய்து உரிய நேரத்தில் முடிவுகளை எடுத்து வருவதாகவும் பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டார். பொருளாதார, வர்த்தக நிலைத்தன்மையைப் பேணுதல், எரிசக்திப் பாதுகாப்பை உறுதி செய்தல், மக்கள் நலன்களைப் பாதுகாத்தல், தொழில்துறைகளையும் விநியோகத் தொடரையும் வலுப்படுத்துதல் ஆகியவை அரசின் முன்னுரிமைகள் என்று பிரதமர் தெரிவித்தார். திறன் வாய்ந்த செயலாக்கம் மாநில அளவில் நடைபெறுவதால், விரைவான, சீரான பதில் நடவடிக்கையை உறுதி செய்வதற்காக, சரியான நேரத்தில் தகவல் பகிர்வு, கூட்டாக முடிவெடுத்தல் உட்பட, மத்திய – மாநில அரசுகளுக்கு இடையேயான தொடர்ச்சியான உரையாடல், ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் அவசியத்தை இக்கூட்டம் வலியுறுத்தியது.

### பதுக்கல், கொள்ளை லாபம் ஈட்டுதலுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள்

விநியோகத் தொடர்கள் சீராக இயங்குவதை உறுதி செய்யவும், பதுக்கல், கொள்ளை லாபம் ஈட்டல் ஆகியவற்றுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கவும் பிரதமர் நரேந்திர மோடி மாநிலங்களை வலியுறுத்தினார். தற்போதைய நெருக்கடியால் ஏற்படும் எந்தவொரு இடையூறையும் தடுக்க, மாநில, மாவட்ட அளவில் கட்டுப்பாட்டு அறைகளைச் செயல்படுத்துவதற்கும், நிர்வாகக் கண்காணிப்பை வலுப்படுத்துவதற்கும் கூட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

வரவிருக்கும் கரீஃப் பருவத்தில் விவசாயிகள் எந்த

சிரமங்களையும் எதிர்கொள்ளாமல் இருப்பதை உறுதி செய்ய, உர சேமிப்பையும் விநியோகத்தையும் கண்காணிப்பது உட்பட, வேளாண் துறையில் முன்கூட்டியே திட்டமிடல் தேவைப்படுவது குறித்தும் இக்கூட்டத்தில் அதிக முக்கியத்துவம் அளித்து விவாதிக்கப்பட்டது.

### வதந்திகளுக்கு செவிசாய்க்காதீர்கள்

தவறான தகவல்களும் வதந்திகளும் பரவுவதற்கு எதிராக எச்சரித்த பிரதமர் நரேந்திர மோடி, பீதி பரவுவதைத் தடுக்க, துல்லியமான, நம்பகமான தகவல்களை உரிய நேரத்தில் மக்களிடையே கொண்டு செல்வது அவசியம் என்று கூறினார். இணையவழி மோசடிகள், மோசடியில் ஈடுபடும் முகவர்கள் போன்றவற்றுக்கு எதிராக மக்கள் விழிப்புடன் இருக்குமாறு அவர் அறிவுறுத்தினார். அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு குறித்த உத்தரவாதங்களை வழங்குவது, பொதுமக்களிடையே தேவையற்ற அச்சம் பரவுவதைத் தடுக்க உதவும். மேற்கு ஆசியாவில் வசிக்கும் இந்திய மக்களை அதிகம் கொண்ட மாநிலங்கள், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவுவதற்கும், சரியான தகவல்கள் அவர்களை உரிய நேரத்தில் சென்றடைவதை உறுதி செய்வதற்கும், உதவி எண்களைச் செயல்படுத்தவும், ஒருங்கிணைப்பு அதிகாரிகளை நியமிக்கவும், மாவட்ட அளவில் ஆதரவு அமைப்புகளை நிறுவவும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

### கடந்த சில ஆண்டுகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் நன்மை பயப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது

இந்தியாவின் பொருளாதார, விநியோக அமைப்புகளை வலுப்படுத்த, கடந்த சில ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், தற்போதைய சூழ்நிலைகளில் நன்மை பயப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. தொழில்துறை, குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் கவலைகளைக் களைவதற்கும், உற்பத்தியிலும் வேலைவாய்ப்பிலும் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கும், சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்ச்சியான உரையாடலைப் பேணுமாறு வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அனைத்து நிலைகளிலும் வலுவான ஒருங்கிணைப்பு வழிமுறைகளின் தேவையும் வலியுறுத்தப்பட்டது. மாறிவரும் சூழ்நிலைகளுக்கு விரைவான, பயனுள்ள பதில் நடவடிக்கைகளை உறுதி செய்ய, தலைமைச் செயலாளர் நிலையில் வழக்கமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது குறித்தும், மாவட்ட அளவில் தொடர்ச்சியான கண்காணிப்பின் முக்கியத்துவம் குறித்தும் கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

### மாற்று எரிசக்தி மூலங்களை ஊக்குவித்தல்

உயிரி எரிபொருட்கள், சூரிய சக்தி, கோபர்தன் திட்டம், மின்சார வாகனங்கள் போன்ற மாற்று எரிசக்தி ஆதாரங்களை ஊக்குவிப்பதையும், குழாய் வழி இயற்கை எரிவாயு இணைப்புகளை விரிவுபடுத்துவதையும் துரிதப்படுத்துமாறு மாநிலங்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. மாநிலங்களின் தீவிர ஒத்துழைப்புடன், உள்நாட்டு எண்ணெய், இயற்கை எரிவாயு ஆய்வுகளை மேம்படுத்துவதன் முக்கியத்துவமும் சுட்டிக் காட்டப்பட்டது. ஒருங்கிணைந்த இந்தியா குழுவாக ("டீம் இந்தியா") செயல்படுவதன் மூலம், தேசம் இந்தச் சூழ்நிலையை வெற்றிகரமாகக் கடக்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார். ●



### கலால் வரி குறைக்கப்பட்டது...

தற்போதைய நெருக்கடியை சமாளிக்க அரசு தீவிரமாகச் செயல்பட்டு வருவதாக இந்தக் கூட்டத்தில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார். சமையல் எரிவாயு சரியான நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்தல், பெட்ரோல், டீசல் மீதான கலால் வரிகளைக் குறைத்தல் போன்ற நேர்மறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், உருவாகியுள்ள சூழ்நிலையை சமாளிக்க அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், மத்திய அரசு ஆகியவை ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தையும் பிரதமர் வலியுறுத்தினார்.




### மாநில முதலமைச்சர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்

பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு ஆகியவை போதுமான அளவு கையிருப்பில் உள்ளதாலும், அத்தியாவசியப் பொருட்களின் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்ய தொடர்ச்சியான கண்காணிப்பு வழிமுறைகள் நடைமுறையில் இருப்பதாலும், நிலைமை சீராக உள்ளது என மாநில முதலமைச்சர்கள் தெரிவித்தனர். எரிபொருள் மீதான கலால் வரியைக் குறைக்கும் முடிவை வரவேற்ற அவர்கள், உலகளாவிய நிச்சயமற்ற சூழல்களுக்கு இடையே மக்களுக்கு இது குறிப்பிடத்தக்க நிவாரணத்தை வழங்கும் என்று கூறினர். மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கான வர்த்தக சமையல் எரிவாயு ஒதுக்கீட்டை, நெருக்கடிக்கு முந்தைய அளவான 50 சதவீதத்திலிருந்து தற்போது 70 சதவீதமாக உயர்த்தும் முடிவையும் முதலமைச்சர்கள் வரவேற்றனர்.



KHELO INDIA கேலோ இந்தியாவின் பத்து ஆண்டுகள்

# விளையாட்டுப் புரட்சியை ஆதரித்தல்





இந்தியாவில், ஒரு காலத்தில் விளையாட்டு என்பது வீட்டுப்பாடம், பள்ளிப் படிப்பு ஆகியவற்றுக்கு இடையே குறுகிய இடைவெளிகளில் மேற்கொள்ளப்படும், குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு அம்சமாக மட்டுமே இருந்தது. விளையாட்டை ஒரு சிறந்த தொழில்முறைப் பாதையாக மாற்ற முடியாது என்ற கருத்து பரவலாக நிலவியது. இந்த மனநிலை, வரையறுக்கப்பட்ட விளையாட்டு உள்கட்டமைப்பு, விளையாட்டை விட கல்விக்கு முன்னுரிமை அளிக்கும் சமூகப் போக்கு ஆகியவற்றிலிருந்து உருவானது. இந்தப் பின்னணியில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு, இந்த எண்ணத்தை மாற்றி, விளையாட்டுத் துறையில் இளைஞர்களிடையே தொழில்முறைக் கனவுகளைத் தூண்டத் தொடங்கியது. இப்போது, லடாக்கின் சைக்கிள் ஓட்டும் வீரர் சேவாங் நோர்பூ, நாகாலாந்தின் மாற்றுத்திறனாளி தடகள வீரர் ஹோகாடோ ஹோடோஷே சேமா, அல்லது கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் பயிற்றுவிக்கப்பட்ட 2,900-க்கும் அதிகமான வீரர்கள் என யாராக இருந்தாலும், இத்திட்டம் அவர்களை முன்னெப்போதும் இல்லாத உயரங்களுக்குக் கொண்டு சென்றுள்ளது.

கேலோ இந்தியா திட்டம், தேசிய விளையாட்டு மேம்பாட்டுத் திட்டமாகத் தொடங்கப்பட்டது. விளையாட்டுகளில் பரவலான பொது மக்கள் பங்கேற்பையும், உயர் சிறப்புப் பயிற்சிகளையும் ஊக்குவிப்பதற்கான, அதற்கான ஒப்புதல் கடிதம் 2016 ஏப்ரல் 22 அன்று, உரிய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது. 2016 செப்டம்பர் 27 அன்று, இத்திட்டத்தில் சில மாற்றங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. இந்த முயற்சியின் கீழ், விளையாட்டு உள்கட்டமைப்பை உருவாக்குதல், மேம்படுத்துதல், விளையாட்டுப் போட்டிகளுக்கு ஏற்பாடு செய்தல், திறன் மேம்பாடு, உடல் திறன் இந்தியா இயக்கம், விளையாட்டின் மூலம் அனைவரையும் உள்ளடக்கிய தன்மையை ஊக்குவித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்திப் பணிகள் தொடங்கப்பட்டன. இதன் விளைவாக, விளையாட்டு என்பது ஒழுங்கமைக்கப்பட்ட, கட்டமைக்கப்பட்ட துறையாக உருவெடுத்துள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில், நாடு விளையாட்டுத் துறையில் எண்ணற்ற மைல்கற்களை எட்டியுள்ளது மட்டுமின்றி, இந்தத் திட்டத்தின் மூலம் விளையாட்டுத் துறையில் திறமையாளர்களைப் பெருமளவில் வெற்றிகரமாகக் கண்டறிந்து அவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது. உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு, சிறந்த பயிற்சி, நிதி உதவி ஆகியவற்றால் வலுப்பெற்றுள்ள இந்திய இளைஞர்கள், இப்போது தேசிய, சர்வதேச அளவில் தங்கள் விளையாட்டுத் திறன்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.



### திறமையை வளர்ப்பதற்கான ஒரு புதிய ஆதரவு அமைப்பு...

# கேலோ இந்தியா இயக்கம்

வேலைவாய்ப்பு, திறன் மேம்பாடு, தொழில் முறை முன்னேற்றம் ஆகியவற்றில் எண்ணற்ற வாய்ப்புகளை விளையாட்டுத் துறை வழங்குகிறது. இதனால்தான் மத்திய அரசு, 2026–27–ம் நிதியாண்டிற்கான பட்ஜெட்டில் 'கேலோ இந்தியா இயக்கம்' தொடங்கப்படுவதாக அறிவித்தது. இந்த முக்கியமான முன்முயற்சியின் கீழ், திறமையாளர்களைக் கண்டறிதல், அவர்களை மேம்படுத்துதல், சிறப்பு மையங்களாகச் செயல்படும் உள்கட்டமைப்பையும், வேலைவாய்ப்புகளையும் உருவாக்குதல் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. திறமையான விளையாட்டு வீரர்களுக்கு அவர்களின் தொடக்கக் கட்டங்களிலிருந்து தொழில்முறை நிலையை அடையும் வரை தேவையான அனைத்து விதமான ஆதரவையும் வழங்கும் வகையில் ஒரு விரிவான சூழல் அமைப்பை நிறுவுவதை கேலோ இந்தியா இயக்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. மாநில அளவிலான திட்டங்கள் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கேலோ இந்தியா பயிற்சி மையத்தை நிறுவுதல், விளையாட்டு அறிவியல், விளையாட்டு உளவியல், ஊட்டச்சத்து ஆகியவற்றை உள்ளடக்கிய முறையான நடவடிக்கைகளை செயல்படுத்துதல், உடனடிக் கண்காணிப்பிற்கான தரவுத் தளங்களை உருவாக்குதல், 2036–ம் ஆண்டிற்குள் இந்தியாவை உலகின் முன்னணி விளையாட்டு நாடுகளில் ஒன்றாக நிலைநிறுத்துதல் ஆகியவை இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

## சர்வதேச அளவில் பதக்கங்களை வெல்வதற்கான அதிக சாத்தியக்கூறுகளைக் கொண்ட 14 விளையாட்டுப் பிரிவுகளுக்கு முக்கியத்துவம்

கேலோ இந்தியா முன்முயற்சியின் கீழ், மாநிலங்களுடன் இணைந்து 'ஒரு மாநிலம், ஒரு விளையாட்டு' என்ற அணுகுமுறைக்கு அரசு வலுவான முக்கியத்துவம் அளித்துள்ளது. இதுதவிர, வரவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் சிறப்பான செயல்திறனை உறுதி செய்ய, பதக்கங்களுடன் கூடிய வெற்றிகளைப் பெற்றுத்தரும் அதிக ஆற்றலைக் கொண்ட 14 குறிப்பிட்ட விளையாட்டுப் பிரிவுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த விளையாட்டுப் பிரிவுகளுக்கு அதிகபட்ச விளையாட்டு வீரர்களை ஈர்ப்பதையும், அவர்கள் செயல்திறனில் சிறந்து விளங்குவதை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டு, 'கேலோ இந்தியா' முன்முயற்சியின் கீழ் உருவாக்கப்படும் எந்தவொரு முன்மொழிவுகள் அல்லது திட்டங்களிலும், இந்த 14 விளையாட்டுகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறு மத்திய அரசு, மாநிலங்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

## இயக்கத்தின் ஐந்து தூண்கள்

- திறமையான விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து, அவர்கள் சிறந்த தொழில்முறைத் திறன் நிலையை அடையும் வரை வழிநடத்துவதற்காக, பல்வேறு நிலைகளில் பயிற்சி மையங்கள் நிறுவப்படும்.
- பயிற்சியாளர்கள், துணைப் பணியாளர்கள் ஆகியோர் மேம்பாட்டுப் பயிற்சிகள், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் போன்றவற்றில் பங்கேற்பார்கள்.
- விளையாட்டுத் துறையில் விளையாட்டு அறிவியல், அதிநவீன தொழில்நுட்பம் ஆகியவற்றின் பயன்பாடு மேம்படுத்தப்படும்.
- விளையாட்டுக் கலாச்சாரத்தை ஊக்குவிக்கவும், அதற்கென ஒரு தளத்தை வழங்கவும், போட்டிகளுக்கும், குழுப் போட்டிகளுக்கும் ஏற்பாடு செய்யப்படும்.
- பயிற்சி நிகழ்வுகள், போட்டி நிகழ்வுகள் ஆகிய இரண்டிற்கும் வசதியை ஏற்படுத்தும் வகையில் விளையாட்டு உள்கட்டமைப்பு மேம்படுத்தப்படும்.

*வில்வித்தை, குத்துச்சண்டை, துப்பாக்கிச் சுடுதல், பூப்பந்து, மல்யுத்தம், ஹாக்கி, பளுதூக்குதல், மிதிவண்டி ஓட்டுதல், தடகளம், மேசைப்பந்து, ஜூடோ, நீச்சல், வாள்வீச்சு, படகோட்டுதல்*




சர்வதேச அரங்குகளில், இந்திய விளையாட்டு வீரர்கள் இப்போது வெற்றி மேடையில் கம்பீரமாக நிற்கும் நிலையில், எண்ணற்ற சர்வதேசப் போட்டிகளில் இந்தியாவின் தேசிய கீதம் இசைக்கப்படுவதையும் இப்போது கேட்க முடிகிறது.

கேலோ இந்தியா, ஒலிம்பிக் மேடை இலக்குத் திட்டம் (டாப்ஸ் – TOPS), கீர்த்தி எனப்படும் கேலோ இந்தியா வளர்ந்து வரும் திறமையாளர்களைக் கண்டறியும் திட்டம் போன்றவை விளையாட்டு வீரர்களின் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் ஒரு விரிவான ஆதரவு கட்டமைப்பை உருவாக்கியுள்ளன. பள்ளி, பல்கலைக்கழக நிலைகளில் விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து அவர்களின் திறன்களை வளர்ப்பது, பெண்கள், மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள், பழங்குடியின

# கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் உள்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டது

**1067**
கேலோ இந்தியா மையங்கள் 750- க்கும் அதிகமான மாவட்டங்களை உள்ளடக்கி அறிவிக்கப்பட்டன.

**322**
அகாடமிகள், பயிற்சி வீரர்களுக்கு கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டன.

**27,500+**
க்கும் அதிகமான வீரர்கள் கேலோ இந்தியா மையங்களில் தற்போது பயிற்சி பெறுகின்றனர்.

**கேலோ இந்தியா திட்டதிற்கான பட்ஜெட் 8 மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| 2016-17 | ரூ. 118 கோடி |
| 2026-27 | ரூ. 928 கோடி |



**344**
புதிய விளையாட்டு உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு 32 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**₹ 3,158**
கோடி ரூபாய் இத்திட்டங்களுக்கான மதிப்பீட்டுச் செலவு

- 17,000– க்கும் அதிகமான விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. 2,500–க்கும் அதிகமானவை ஒலிம்பிக் தரமுடையவை.
- கேலோ இந்தியா விளையாட்டுகளில் 47,012 வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.
- தற்போது 1,327 பயிற்சியாளர்களும், துணைப் பணியாளர்களும் உள்ளனர்.
- 23,000– க்கும் அதிகமான வீரர்கள் உதவி பெற்றுள்ளனர்.
- உடல் தகுதி இந்தியா இயக்கத்தில் 23.68 கோடி பேர் பங்கேற்றுள்ளனர்.
- உடல் தகுதி இந்தியா கொடி 4,50,445 பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**22 விளையாட்டுப் பிரிவுகளைச் சேர்ந்த 2,905 கேலோ இந்தியா வீரர்கள் தங்களின் பின்னணிக்கு ஏற்ப பயிற்சி, உபகரணம், மருத்துவப் பராமரிப்பு மற்றும் மாதாந்தர செலவுகளுக்காக ஆண்டுக்கு 6,28,400 ரூபாய் உதவித்தொகுப்பை பெறுகின்றனர்.**

*கேலோ இந்தியாவில் தேசிய மற்றும் பாரம்பரிய விளையாட்டுகள்: மல்லகம்பம், களரிபயட்டு, கட்கா, தங்- தா, யோகாசனம் மற்றும் சிலம்பம்.*



“

**தற்போது, கேலோ இந்தியா திட்டம், பல்கலைக்கழக விளையாட்டுகள், கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுகள், கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுகள், கேலோ இந்தியா பாரா விளையாட்டுகள் ஆகியவற்றை நாம் பெற்றுள்ளோம். பல்வேறு நிலைகளில் ஆண்டு முழுவதும் போட்டி நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெறுவதைக் குறிக்கிறது. இது நமது வீரர்களின் நம்பிக்கையை அதிகரித்து அவர்களின் திறமை உண்மையில் ஒளிர அனுமதிக்கிறது.**

**நரேந்திர மோடி,** பிரதமர்.

விளையாட்டு வீரர்கள் போன்றோரின் பங்கேற்பை அதிகரித்தல் போன்ற பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இதன் விளைவாக, கடந்த தசாப்தத்தை ஒலிம்பிக், பாராலிம்பிக், ஆசிய விளையாட்டுகள் போன்ற சர்வேசத் தளங்களில் சாதனை முறியடிப்பு செயல்பாடுகளுடன் இந்தியாவின் விளையாட்டு நடவடிக்கைகளுக்கான பொற்காலமாக காண முடிகிறது. நலத்திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகள் மூலம், அடித்தள நிலையில் திறமைகளைக் கண்டறிந்து, வளர்த்தது மட்டுமின்றி அவர்களின் பணிகளுக்கும், அதற்கு அப்பாலும் வீரர்கள் உதவி பெறுவதையும் அரசு உறுதி செய்கிறது. உள்கட்டமைப்பு, பயிற்சி மற்றும் வீரர்கள் நலனில் பெரும் முதலீடுகளுடன் விளையாட்டுகளில் உலகளாவிய தலைமைத்துவமாக இருப்பதற்கான நம்பிக்கைக்குரிய பாதையில் இந்தியா உள்ளது.

## விளையாட்டு மேம்பாட்டிற்கான தளமாக கேலோ இந்தியா உள்ளது.

கேலோ இந்தியா விளையாட்டுத் திறன்களைக் கண்டறிந்து, வளர்த்து, எடுத்துக்காட்டுவதற்கான தளமாக இருப்பதோடு, திறமைமிக்க குழந்தைகள் சிறந்து விளங்குவதற்கும் உதவுகிறது. கேலோ இந்தியா பழங்குடியின விளையாட்டுக்கள் 2026 உட்பட கேலோ இந்தியா விளையாட்டுகளின் இருபத்து மூன்று நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.
இவற்றில் கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுகளின் ஏழு நிகழ்வுகள், கேலோ இந்தியா பல்கலைக்கழக

இதர விளையாட்டுத் திட்டங்கள்

### டாப்ஸ்: ஒலிம்பிக் மேடை இலக்குத் திட்டம்.

ஒலிம்பிக் மேடை இலக்குத் திட்டம் 2014– ல் இருந்து செயல்படுத்தப்படுகிறது. ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் விளையாட்டுகளில் இந்தியா பதக்கம் பெறும் வெற்றி வாய்ப்பை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், மிகத் திறமையான வீரர்கள் அடையாளம் காணப்பட்டு அனைத்து வழிகளிலும் ஆதரவு அளிக்கப்படுகிறது. மாதாந்தர படியாக, வளரும் வீரர்களுக்கு 25,000 ரூபாயும், முக்கிய வீரர்களுக்கு 50,000 ரூபாயும் வழங்கப்படுவதுடன் பயிற்சி, விளையாட்டு அறிவியல், ஆதரவு சேவை உட்பட விரிவான அளவிலான உதவியை டாப்ஸ் வழங்குகிறது.

### டாப்ஸ் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உதவி

**51** முக்கிய வீரர்கள்

**52** முக்கிய பாரா வீரர்கள்

**130** வளரும் வீரர்கள்





### கேலோ இந்தியா பழங்குடியின விளையாட்டுகள்.

இதற்கு முன், கேலோ இந்தியா முன்முயற்சியின் மூலம், கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுகள், கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுகள், கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுகள், கேலோ இந்தியா பாரா விளையாட்டுகள், கேலோ இந்தியா கடற்கரை விளையாட்டுகள், கேலோ இந்தியா நீர் விளையாட்டுத் திருவிழா ஆகியவை வெற்றிகரமாக ஏற்பாடு செய்யப்பட்டன. இந்த ஆண்டு முதல் முறையாக சத்தீஸ்கரில் மூன்று நகரங்களில் (ராய்ப்பூர், ஜக்தல்பூர், சுர்குஜி) கேலோ இந்தியா பழங்குடியின விளையாட்டுகள் மார்ச் 25 முதல் ஏப்ரல் 6 வரை நடைபெற்றன. பதக்கத்திற்கான போட்டிகள் ஏழு பிரிவுகளில் நடைபெற்றன: தடகளம், கால்பந்து, ஹாக்கி, பளுதூக்குதல், வில்வித்தை, நீச்சல் மற்றும் மல்யுத்தம்.



"சர்வதேச அளவில் விளையாட்டுகளில் ஆதிக்கம் செலுத்துவதை மேம்படுத்தவும், பள்ளி அளவில் விளையாட்டுத் திறனைக் கண்டறிந்து அவர்களுக்குப் பயிற்சியளிக்கவும் இந்தியா பணியாற்றி வருகிறது. 'கேலோ இந்தியா' முதல் 'டாப்ஸ்' திட்டம் வரை அனைத்து சூழலும் இந்த நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது."

நரேந்திர மோடி, பிரதமர்.

விளையாட்டுகளின் ஐந்து நிகழ்வுகள், கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுகளின் ஐந்து நிகழ்வுகள், கேலோ இந்தியா பாரா விளையாட்டுகளின் இரண்டு நிகழ்வுகள், கேலோ இந்தியா கடற்கரை விளையாட்டுகளின் இரண்டு நிகழ்வுகள், கேலோ இந்தியா நீர் விளையாட்டுகள் திருவிழாவின் ஒரு நிகழ்வு உள்ளிட்டவை அடங்கும். இந்த விளையாட்டுகளில் 60,000– க்கும் அதிகமான வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

### 34 விளையாட்டுகளில் மகளிருக்கான போட்டிகள்.

விளையாட்டுகளில் மகளிரின் பங்களிப்பை ஊக்குவிக்க கேலோ இந்தியா மகளிர் போட்டிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. 2026 பிப்ரவரி வரை, மகளிர் போட்டிகள் 34 விளையாட்டுப் பிரிவுகளில் நடைபெற்றுள்ளன. 2,407 போட்டிகள் நடைபெற்றதில் 2,00,000–க்கும் அதிகமானோர் பங்கேற்றனர்.

### ஜம்மு காஷ்மீரின் ஒவ்வொரு மாவட்டத்திலும் 5 கேலோ இந்தியா மையங்கள்.

கேலோ இந்தியா திட்டத்தின் கீழ், பொது அளவுகோலுக்கேற்ப, ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் 5 கேலோ இந்தியா மையங்களை உருவாக்குவதற்கான விதிமுறை அறிவிக்கப்பட்டது. இது ஜம்மு காஷ்மீருக்கான சிறப்பு முன்முயற்சியாகும். அந்த யூனியன் பிரதேசத்தில் இதுவரை 100 கேலோ இந்தியா மையங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

### குழந்தைகளிடையே விளையாட்டுத் திறனை கண்டறிவதற்கான முன்முயற்சி.

கீர்த்தி (கேலோ இந்தியா வளரும் திறமையை கண்டறிதல்) என்பது 9 முதல் 18 வயதுடையவர்களின் விளையாட்டுத் திறன்களைக் கண்டறிந்து, வளர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட நாடு தழுவிய முன்முயற்சியாகும். நாடு முழுவதும் 174 –க்கும் அதிகமான திறன் மதிப்பீட்டு மையங்கள் மூலம் திறமையாளர்கள் கண்டறியப்படுகின்றனர். இந்த முன்முயற்சி, இளம் விளையாட்டு வீரர்களின் வலிமையான வழிவகைகளை உறுதி செய்வதன் மூலம் உலகளாவிய விளையாட்டுகளில் இந்தியா சிறந்த உச்சத்தை அடைய முடியும். நீடித்த மற்றும் சீரான வீரர்கள் குழுவைக் கட்டமைத்து விளையாட்டுகளில் 2036–க்குள் முதன்மையான 10 நாடுகளில் ஒன்றாகவும், 2047–க்குள் முதன்மையான 5 நாடுகளில் ஒன்றாகவும் இந்தியா திகழ்வதற்கு

*உலகப் பாரம்பரிய தினம்: ஏப்ரல் 18, 2026.*

# உலகப் பாரம்பரியக் கட்டடத்தில் அமைந்துள்ள தேசத்தின் சாராம்சம்

நமது பாரம்பரியக் கட்டடம் வெறும் கற்கள், ஓலைச்சுவடிகள் அல்லது இடிபாடுகளால் மட்டுமே கட்டப்படவில்லை. அது கோவில் சுவற்றின் ஒவ்வொரு மெல்லிய இசையிலும், பழமையான கோட்டைகளின் ஒவ்வொரு சிற்பத்திலும், தலைமுறைதோறும் பரவி வரும் ஒவ்வொரு நாட்டுப்புறப் பாடலிலும் வாழ்கிறது. ஆண்டுதோறும் ஏப்ரல் 18–ல் கொண்டாடப்படும் உலகப் பாரம்பரிய தினம் என்பது காலத்தால் அழியாத இந்தப் பொக்கிஷங்களைக் கொண்டாடுவதோடு, அவசியம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது...



"கலாச்சாரப் பாரம்பரியம் வெறும் வரலாறு மட்டுமல்ல; இது மனித சமூகத்தின் பகிரப்பட்ட உணர்வாகும். வரலாற்று இடங்களை ஒருவர் காணும் போதெல்லாம், நமது மனங்கள் தற்போதைய புவி அரசியல் காரணிகளைக் கடந்து நிற்கிறது."

**நரேந்திர மோடி,** பிரதமர்.



**உலகப் பாரம்பரிய தினம் ஏப்ரல் 18 அன்று கொண்டாடப்படுகிறது.**

உலகப் பாரம்பரிய தினம் ஆண்டுதோறும் ஏப்ரல் 18 அன்று கொண்டாடப்படுகிறது. இது நினைவுச் சின்னங்கள் மற்றும் இடங்களுக்கான சர்வதேசத் தினமாகவும் அறியப்படுகிறது. இந்நாள் மனிதப் பாரம்பரியத்தை கௌரவப்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இந்த நாளைக் கொண்டாடுவது ஐசிஓஎம்ஓஎஸ்–ஆல் (சர்வதேச நினைவுச் சின்னங்கள் மற்றும் இடங்கள் குழுமம்) 1982–ல் தொடங்கப்பட்டது. அதன்பின், 1983– ல் யுனெஸ்கோ அதிகாரப்பூர்வமாக இதை ஏற்றுக்கொண்டது.

**நாட்டில் 44 உலகப் பாரம்பரிய இடங்கள் உள்ளன**

**36** கலாச்சார உலகப் பாரம்பரிய இடங்கள்

**07** இயற்கையான உலகப் பாரம்பரிய இடங்கள்.

**01** கலவையான உலகப் பாரம்பரிய இடம்.





## 2014 முதல் யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய பட்டியலில் இடம் பெற்றுள்ள பாரம்பரிய இடங்கள்.

2021
தெலங்கானாவில் தியா ருத்ரேஸ்வரா (ராமப்பா) கோயில்



2014
குஜராத்தின் பத்தானில் ராணி கி வாவ் (ராணிகளின் படிக்கிணறு).




2014
இமாச்சலப் பிரதேசத்தில் மாபெரும் இமாலய தேசியப் பூங்கா.



2016
பீகாரில் நாளந்தா மகாவிகாரின் (நாளந்தாப் பல்கலைக்கழகம்) தொல்பொருள் அகழாய்வு இடம்.



2016
சண்டிகரில் லீ கார்ப்சியரின் கட்டடக்கலைப் பணி.




2025
மகாராஷ்டிராவில் இந்தியாவின் மராத்தா ராணுவ தளம்,



2016
சிக்கிமில் கஞ்சன்ஜங்கா தேசியப் பூங்கா.



2017
குஜராத்தில், வரலாற்றுச் சிறப்புமிக்க அகமதாபாத் நகரம்.



2018
மகாராஷ்டிராவில் மும்பை விக்டோரியன் மற்றும் டெகோ கலைத் தொகுப்பு.



2019
ராஜஸ்தானின், ஜெய்ப்பூர் நகரம்.



2021
குஜராத்தில்: ஹரப்பா நகரமான தோலாவிரா



2023
கர்நாடகாவில் ஹொய்சாளர்களின் புனிதத் தொகுப்பு,



2023
சாந்திநிகேதன், விஸ்வ பாரதி.



2024
அசாமில் அஹோம் வம்சத்தின் மொய்தாம்ஸ் மலை கல்லறை அமைப்பு

## 2014 முதல் யுனெஸ்கோ பிரதிநிதித்துவப் பட்டியலில் இடம்பெற்றுள்ள அழியாத கலாச்சாரப் பாரம்பரியம்.

| | |
|---|---|
| ஜந்தியாலா குரு: இந்தியாவின் தாதரசாவால் பித்தளை மற்றும் செம்பினால் உருவாக்கப்பட்ட பாரம்பரியக் கலை, பஞ்சாப் | 2014 |
| யோகா, அனைத்து மாநிலங்கள் | 2016 |
| நவ்ரூஸ், அனைத்து மாநிலங்கள் | 2016 |
| கும்பமேளா, உத்தரப்பிரதேசம், உத்தராகண்ட், மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம் | 2017 |
| மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் துர்கா பூஜை | 2021 |
| குஜராத்தின் கர்பா | 2023 |

## உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்ப்பதற்கு உலகப் பாரம்பரிய மையத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள்.



பழமையான புத்த தலம், சாரநாத் (2025-26)



ஜிங்கீங்ஜ்ரி / லியு சராய் கலாச்சார நில அமைப்பு (2026-27)



## இந்தியாவின் செயற்கை நுண்ணறிவு மற்றும் செமிகண்டக்டர் முன் முயற்சிகள் அனைத்து மனித சமூகத்திற்கும் பயன் தரும்

**தற்போது, இந்திய மேம்பாடு மற்றும் வளர்ச்சிக் கதை குறித்து உலக நாடுகள் பேசும் போது 'குஜராத் மாதிரி' பாராட்டப்படுகிறது. வளர்ச்சிக்கு உள்கட்டமைப்புத் திட்டங்களைப் போல் நலவாழ்வுத் திட்டங்கள் முக்கியம் என்பதை குஜராத் காட்டியுள்ளது. இந்த வரிசையில், பிரதமர் நரேந்திர மோடி மார்ச் 31– ல் 20,000 கோடி ரூபாய் மதிப்பிலான குஜராத் வளர்ச்சித் திட்டங்களைப் பரிசளித்தார். கூடுதலாக, தமது பயணத்தின் போது பாரம்பரியம் தொடர்புடைய நிகழ்வுகளில் அவர் பங்கேற்று, 21 –ம் நூற்றாண்டின் இந்தியா வெறும் சாட்சியாக மட்டுமின்றி, மாற்றத்தை வழிநடத்தக்கூடிய உறுதியான தீர்மானத்துடன் முன்னேறி செல்கிறது என்று குறிப்பிட்டார்...**

இந்தியத் தலைமைத்துவத்தின் தொலைநோக்குப் பார்வை பளிங்கு போன்று தெளிவாக உள்ளது: சந்தைகள், விவசாயிகளுக்கான வாய்ப்புகள், இளையோர் வேலைவாய்ப்பு ஆகியவற்றுடன் கிராமங்கள் தொடர்புடையதாக இருக்கும் போது உண்மையான வளர்ச்சி உணரப்படுகிறது. இந்தத் தொலைநோக்குப் பார்வை உள்கட்டமைப்பில் தொடர்ந்து கணிசமான நிதியை முதலீடு செய்வது மட்டுமின்றி நாட்டையும் இயக்குகிறது. ஆனால், இத்திட்டங்களை உரிய நேரத்தில் நிறைவு செய்வதை உறுதி செய்வதுடன், அதன்மூலம் பயன்களை குடிமக்களுக்கு நேரடியாக வழங்குகிறது. இந்த நோக்கத்துடன், பிரதமர் நரேந்திர மோடி மார்ச் 31– ல் குஜராத் வந்து, அங்கு மூன்று பொதுக் கூட்டங்களில் உரையாற்றினார். வாவ்–தாரட்டில், அவர் கிராமங்களை சந்தைகளுடன் இணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட பல்வேறு சாலை மற்றும் ரயில் போக்குவரத்து திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, தொடங்கி வைத்தார்; ஒரே நேரத்தில், அகமதாபாதின் சனாந்தில் வேலை வாய்ப்புகளுக்கு பெரும் ஊக்கம் அளிக்கும் செமிகண்டக்டர் தொழிற்சாலையை அவர் தொடங்கி வைத்தார். மேலும், நீர் மேலாண்மை, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் சுற்றுலா தொடர்புடைய பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணித்தார். ஒரே நேரத்தில், பிரதமர் மோடி

> “
>
> இந்தியாவின் செமிகண்டக்டர் தொழில்துறை பல்வேறு மாநிலங்களில் விரைவாக முன்னேறி, எண்ணற்ற இளையோருக்குப் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது. நாம் தற்போது இம்முயற்சிகளை மேலும் விரிவுபடுத்த ‘செமிகண்டக்டர் இயக்கம் 2.0’ –வில் பணியாற்றுகிறோம்.
>
> **நரேந்திர மோடி**, பிரதமர்.

*பிரதமரின் முழு நிகழ்ச்சியைக் காண கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.*



பிரதமரின் முழு நிகழ்ச்சியைக் காண கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

**பிரதமர் மோடி 9 தீர்மானங்களை மீண்டும் உறுதிப்படுத்தி,**
**10– வது தீர்மானத்தை சேர்த்தார்.**

***நாம் தனிப்பட்ட விருப்பங்களுக்கு அப்பால் சமூகம் மற்றும் நாட்டின் இலக்குகளுக்காக செயல்படும்போது நாட்டின் வளர்ச்சி மேலும் விரைவடைகிறது. இந்த உணர்வை நீட்டித்து, தேசத்தின் முன் வைக்கப்பட்ட ஒன்பது தீர்மானங்களுடன் 10– வது தீர்மானத்தையும் பிரதமர் மோடி சேர்த்தார்.***

1. முதல் தீர்மானம்: நீரைச் சேமித்தல்.
2. இரண்டாவது தீர்மானம்: தாயின் பெயரில் ஒரு மரக்கன்று.
3. மூன்றாவது தீர்மானம்: தூய்மை இயக்கம்.
4. நான்காவது தீர்மானம்: உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவு.
5. ஐந்தாவது தீர்மானம்: 'தாய்நாட்டை சுற்றிப்பார்த்தல்'.
6. ஆறாவது தீர்மானம்: இயற்கை வேளாண்மை.
7. ஏழாவது தீர்மானம்: ஆரோக்கியமான வாழ்க்கை முறை.
8. எட்டாவது தீர்மானம்: யோகா மற்றும் விளையாட்டுகள்.
9. ஒன்பதாவது தீர்மானம்: ஏழைகளுக்கு உதவுதல்.
10. பத்தாவது தீர்மானம்: இந்தியாவின் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல்.

காந்திநகரில் மகாவீர் ஜெயந்தியின் புனித விழாவில் சாம்ராட் சம்ப்ரதி அருங்காட்சியகத்தைத் தொடங்கி வைத்தார்.

குஜராத்தின் சனான்தில் பிரதமர் மோடி கேன்ஸ் செமிகான் வெளியிடப்பணி செமிகண்டக்டர் ஒருங்கிணைத்தல் வதியை தொடங்கி வைத்தார். இது எதிர்காலத் தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளில் உலகளாவிய தலைமைத்துவமாக திகழ இந்தியாவின் முயற்சிகளை மேலும் விரைவுபடுத்தும் முக்கிய அம்சமாகும். மைக்ரான் தொழிற்சாலையில் பிப்ரவரி 28– ல் உற்பத்தி தொடங்கிய நிலையில், மார்ச் 31– ல் கேன்ஸ் தொழில்நுட்ப செமிகண்டக்டர் தொழிற்சாலையில் உற்பத்தி தொடங்குவதாக பிரதமர் குறிப்பிட்டார். இந்தியாவின் குறிப்பிடத்தக்க சாதனையை இது பிரதிபலிப்பதை அவர் அறிவித்தார்: "இது இந்தியாவின் தொழில்நுட்ப யுகம்!" தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு மற்றும் செமிகண்டக்டர் துறைகளில் நமது முன்முயற்சிகளின் பயன்கள் அனைத்து மனித சமூகத்தினரையும், முழு உலக நாடுகளையும் அடையும். புதிய தொழிற்சாலைகள் 'இந்தியாவில் தயாரிப்போம்', 'உலகிற்காக தயாரிப்போம்' திட்டங்களுக்கு மேலும் உத்வேகம் அளிக்கும்.

இந்த 21– ம் நூற்றாண்டு வெறும் பொருளாதார ஒத்துழைப்பு காலம் மட்டுமல்ல என்று இந்தியா நம்புகிறது. இது எதிர்கால தொழில்நுட்ப அமைப்பை வடிவமைக்கும் காலமாகும். அதனால், இந்த தசாப்தத்தை இந்தியாவின் தொழில்நுட்ப தசாப்தம் என்று அழைக்கிறேன்.

இந்தியா இந்த தசாப்தத்தில் மேற்கொண்டு வரும் தொழில்நுட்பம் தொடர்பான முன்முயற்சிகள் எதிர்வரும் தசாப்தங்களில்

## சனான்தில் 'கேன்ஸ் செமிகான்' தொழிற்சாலைத் தொடக்கம்

- மேம்பட்ட அறிவுசார் மின்தொகுப்பு உற்பத்தியுடன் கேன்ஸ் செமிகான் தொழிற்சாலையில் வர்த்தக உற்பத்தி தொடங்கியது.
- இந்திய செமிகண்டக்டர் இயக்கத்தின் கீழ், அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில் மைக்ரான் தொழில்நுட்பத்தை பின்பற்றும் வணிக உற்பத்தியை தொடங்கும் இரண்டாவது செமிகண்டக்டர் வசதியுடன் கூடிய தொழிற்சாலை இதுவாகும்.
- தொழிற்சாலையின் அனைத்து கட்டங்களும் நிறைவடைந்து, இதன் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 6.33 மில்லியன் யூனிட்டாக இருக்கும்.
- இந்தியாவின் இரண்டாவது வெளியிடப்பணி செமிகண்டக்டர் ஒருங்கிணைத்தல் மற்றும் பரிசோதனை அல்லது ஒருங்கிணைத்தல், பரிசோதனை, குறியிடுதல் மற்றும் பேக்கிங் பிரிவின் உற்பத்தி கட்டத்தை அடைவதால் இத்திட்டம் சிறப்பு முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது.
- இந்த வசதி உள்நாட்டிலேயே செமிகண்டக்டர் பேக்கேஜிங் திறன்களை கட்டமைக்கப் பங்களித்து, அதன்மூலம் இந்தியாவின் சிப் தயாரிப்பு சூழலில் உள்ள முக்கிய இடைவெளிக்குத் தீர்வுகாணும்.



## 20,000 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்கள்.

வாவ் தாரட்டில் பிரதமர் மோடி 20,000 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

## தொடக்கம்.

### மேம்பட்ட சாலை மற்றும் ரயில் போக்குவரத்து.

**5,100+** கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்புடைய அகமதாபாத்– தலேரா விரைவுச் சாலை திறக்கப்பட்டது.

இந்த விரைவுச் சாலை தலேரா சிறப்பு முதலீட்டுப் பிராந்தியத்திற்குள் பிராந்தியப் போக்குவரத்தை மேம்படுத்தி, தொழில்துறை வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும்.

- காந்திநகர்– கோபா– ஏரோட்ராம் சாலையில் உள்ள பிடிபியு சந்திப்பில் மேம்பாலம் திறக்கப்பட்டது.
- கனாலஸ்– ஜாம்நகர் இரட்டைவழிச் சாலைத் திட்டம் (28 கிமீ), ராஜ்கோட்– கனாலஸ் இரட்டைவழிச் சாலைத் திட்டம் (111.20 கிமீ), காந்திதாம் – அதிப்பூர் பிரிவின் நான்கு வழிச்சாலை (10.69 கிமீ) நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.
- ஹிம்மத்நகர்– கேத்பிரம்மா பாதை மாற்றத் திட்டம் (54.83 கி.மீ) தொடங்கியதன் மூலம் பிராந்தியத்தில் ரயில் போக்குவரத்தும் பயணியர் இயங்குதலும் மேம்படும்.
- கேத்பிரம்மா– ஹிம்மத்நகர்– அசர்வா இடையே ரயில் சேவை கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்டன.

## கூடுதல் வசதிகள் தொடங்கப்பட்டது.



**₹3,650**

*கோடி ரூபாய் மதிப்பிலான கவ்டா தொகுப்பு நிலையம்-2 மற்றும் அதனுடன் தொடர்புடைய 4.5 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பரிமாற்ற வழித்திட்டம் தொடங்கப்பட்டது.*

- அகமதாபாத், அசர்வாவில் சிவில் மருத்துவமனையில் 858 படுக்கை வசதிகளுடன் கூடிய தங்குமிடம் மற்றும் காந்திநகர் அதே வசதியுடன் ஜிஎம்இஆர்எஸ் மருத்துவக் கல்லூரியில் சிவில் மருத்துவமனை, தொடங்கப்பட்டது.
- சுமார் 1,780 கோடி ரூபாய் செலவில் இரண்டு பெரிய குழாய்வழி நீர்த்திட்டங்கள் நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டன.
- அகமதாபாதின், வேஜல்பூரில் தங்குமிடம் திறக்கப்பட்டது.

*பிரதமரின் முழு நிகழ்ச்சியைக் காண கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.*

## பின்வரும் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது:

- நடைபாதையுடன் இடார்– பதோலி நான்கு வழி புறவழிச்சாலை கட்டுமானம்.
- தேசிய நெடுஞ்சாலை – 754 கே– வின் தலோவிரா– மௌவாடா– வாவா– சந்தல்பூர் பிரிவில்(தொகுப்பு–2) நடைபாதையுடன் இரண்டு வழிச்சாலையாக புதுப்பித்தல்.
- காந்திநகர்– கோபா– விமான நிலையச் சாலையில் பைஜிபூரா சந்திப்பில் மேம்பாலம் கட்டப்படுவது உள்ளிட்ட பல்வேறு முக்கியச் சாலை உள்கட்டமைப்புத் திட்டங்கள். மேம்பாலத்திற்கு கீழ் வாகன நிறுத்துமிட வசதிகள் அமைக்கப்படும்.
- பனஸ்கந்தாவின் பலராம் மஹாதேவ், விஷ்வேஷ்வர் மகாதேவில் சுற்றுலா உள்கட்டமைப்பு பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.
- அம்பாஜி மற்றும் அதைச் சுற்றியுள்ள ஊரகப் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகத் திட்டம். இந்த முன்முயற்சியின் மூலம் சுமார் 1.5 லட்சம் பேர் பயனடைவார்கள்.

*சுமார்* **₹1,000** *கோடி ரூபாய் காந்திநகர் மாவட்டத்தில் சபர்மதி ஆற்றங்கரையின் மூன்று விரிவாக்கத் திட்டங்களில் முதலீடு*

இந்தியாவின் தலைமைத்துவத்தை வலுப்படுத்தும். செயற்கை நுண்ணறிவை ஏற்கும் நிலையை நாம் காணும் போது உலகில் அனைவருக்கும் முன்னோடியாக இந்தியா உள்ளது. இந்தியர்களாகிய நாம் தொழில்நுட்பத்தை ஆராய்கிறோம். நிதிசார் தொழில்நுட்பத்தில் மகத்துவமான பணி நிகழ்வது, டிஜிட்டல் இந்தியாவின் வெற்றியாகும். தொழில்நுட்பத்தில் இந்தியர்களின் நம்பிக்கையை நாம் இதில் காண இயலும். இது அதனைக் காட்டுகிறது. மஹாவீர் ஜெயந்தி நிகழ்ச்சியில், காந்திநகர் கோபா தீர்த்தத்தில் சாம்ராட் சம்ப்ரதி அருங்காட்சியகத்தைப் பிரதமர் மோடி திறந்து வைத்தார். சமண சமயத்தை பரப்புவதிலும், முன்னெடுத்துச் சென்றதிலும் பங்காற்றி புகழ்பெற்ற அசோகரின் பேரரான பேரரசர் சம்ப்ரதியின் பெயரில் இது நிறுவப்பட்டது. நிலையற்றத் தன்மையும் அமைதியின்மையின் நெருப்பும் முழு உலகையும் எரித்த ஒரு காலகட்டத்தில் சாம்ராட் சம்ப்ரதி அருங்காட்சியகத்தின் செய்தி இந்தியாவிற்கு மட்டுமின்றி அனைத்து மனித சமூகத்திற்கும் எண்ணற்ற முக்கியத்துவத்தையும் கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். நூற்றாண்டு காலம் பழமையான பனை ஓலைகள் மற்றும் பிர்ச் மரப்பட்டைகளில் பொறிக்கப்பட்ட அரிய ஞானம், கோபா தீர்த்தத்தில் பாதுகாக்கப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளது. இம்முயற்சி நமது கடந்த காலத்தை நிகழ்காலத்துடன் இணைப்பதற்கு உதவுவதோடு நமது எதிர்காலத்திற்கும் பெரும்பயன்களை அளிக்கிறது. ●



PMO India
@PMOIndia

हमारी economy के fundamentals मज़बूत हैं।

और सरकार पल-पल बदलते हालात पर नज़र रखे हुए है।

सरकार, इसके short-term, medium-term और long-term,ऐसे हर प्रभाव के लिए एक रणनीति के साथ काम कर रही है: PM @narendramodi



रक्षा मंत्री कार्यालय/ RMO India
@DefenceMinIndia

लगभग पाँच वर्ष पहले, जब प्रधानमंत्री जी ने, सैनिक स्कूलों में बच्चियों के प्रवेश की शुरुआत का निर्णय लिया, तो वह एक ऐतिहासिक निर्णय था। वह निर्णय, हमारी नारी शक्ति के सशक्तिकरण की दिशा में, एक क्रांतिकारी कदम था। मुझे यह देखकर बड़ी प्रसन्नता होती है, कि इस विद्यालय की होनहार बालिकाओं ने, inter-school बास्केटबॉल, फुटबॉल, एथलेटिक्स तथा cultural programs में, उत्कृष्ट प्रदर्शन करके यह साबित कर दिया है, कि हमारी 'बेटियाँ', किसी भी क्षेत्र में, हमारे 'बेटों' से कम नहीं हैं: रक्षा मंत्री श्री @rajnathsingh



Office of Amit Shah
@AmitShahOffice

AI समिट में देश के युवाओं के लिए जो अवसर बनाने का काम मोदी जी कर रहे थे, उसमें कांग्रेस ने बाधा डालने का काम किया। इसे पूरे देश ने देखा है और इस पर निश्चित रूप से कठोर कार्रवाई होनी चाहिए :केन्द्रीय गृह मंत्री श्री @AmitShah जी
#AmitShahOnTimesNow



Nitin Gadkari
@nitin_gadkari

Union Cabinet, chaired by Prime Minister Shri @narendramodi Ji, has approved the Small Hydro Power (SHP) Development Scheme for FY 2026–27 to FY 2030–31. The initiative will promote projects of 1–25 MW capacity, particularly in hilly and North-Eastern regions with significant untapped potential.



Giriraj Singh
@girirajsinghbjp

माननीय प्रधानमंत्री जी के नेतृत्व में भारत स्मार्टफोन मैन्युफैक्चरिंग के क्षेत्र में एक प्रमुख वैश्विक हब के रूप में उभर रहा है।

स्मार्टफोन अब देश का सबसे बड़ा मर्चेंडाइज निर्यात बन चुका है, और अमेरिका को आपूर्ति के मामले में भारत ने चीन को पीछे छोड़ दिया है।

'मेक इन इंडिया' और PLI योजना के माध्यम से उत्पादन, निवेश, रोजगार और निर्यात में उल्लेखनीय वृद्धि दर्ज की गई है।



Dharmendra Pradhan
@dpradhanbjp

Until 2014, only 54 institutions from India were featured in the QS rankings. Today, that number has risen to 290.

This remarkable growth over the past 11-12 years stands as a global testament to our sustained efforts in strengthening and transforming the education sector.

# Focus on 'Team India': PM to CMs in meet on W Asia war

Smriti Kak Ramachandran
letters@hindustantimes.com



PM Narendra Modi observes the Surya Tilak at Ayodhya Ram Mandir on Ram Navami, in New Delhi on Friday. ANI

NEW DELHI: Prime Minister Narendra Modi on Friday chaired a meeting with chief ministers of states and Union territories to review the preparations to meet the supply of gas, fuel and other essentials that have been impacted the ongoing conflict in West Asia and emphasised the need for robust coordination at all levels for quick response, said people aware of the details.

"The Prime Minister reiterated that addressing the challenge is a shared responsibility and expressed confidence that working together as team India, the nation will successfully overcome the situation," a statement issued by his office said.

The Prime Minister said there is a need for paying special attention to states along the border areas and coastal regions to address emerging challenges related to "shipping, essential supplies and maritime operations."

As per the statement issued by his Office, the Prime Minister also cautioned against the spread of misinformation and rumours and emphasised the need for accurate and incredible information to be disseminated among the people.

"The chief ministers appreciated the steps taken by the central government under the leadership of Prime Minister to tackle the situation. They welcomed the decision to reduce excise duty on fuel amid uncertainties and increase in commercial LPG allocation to the states," the statement said.

According to people aware of the details the meeting was called to reiterate a collaborative effort by the Union government and the state governments to meet the challenges set off by the crisis.

The meeting, which came close on the heels of the PM's statement in Parliament, was called to discuss the response to the challenges that had emanated from the West Asia conflict said people aware of the details.

On the ongoing imbroglio in the West Asia region the Prime Minister is learnt to have said that India has prior experience in dealing with similar global disruption and he made a reference to the collective response made by the union and the state government during the global Covid-19 pandemic. "He said the same spirit of cooperation and coordination remains India's greatest strength in navigating the present circumstances," the statement said.

Referring to the current situation as dynamic and that requires continuous monitoring and adaptive strategies, the Prime Minister informed the CMs that an inter-ministerial group has been operational since March 3 that reviews the situation on a daily basis and takes timely decisions.

He said the government's priorities are to "maintain economic stability, ensure energy security, safeguarding the interest of citizens and strengthen industry and supply chains," the statement said.

Reflecting on the critical role that state governments have in meeting the challenges, the Prime Minister called for constant communication and coordination between the Centre and the states with timely sharing of information and joint decision-making for swift and well aligned response, the statement said.

He cautioned against black marketing and holding and urge the states to ensure smooth functioning of supply chains. "He also stressed on the need for advanced planning in the agricultural sector, particularly in monitoring fertiliser storage and distribution so that farmers do not face difficulties during the upcoming Kharif season," the statement said.

The Prime Minister called for parallel focus on immediate response and long-term preparedness and urge the states to accelerate efforts in promoting alternative energy sources such as bio fuels, solar energy, electric mobility as well as expanding piped natural gas connections.

The attendees included N Chandra Babu Naidu (Andhra Pradesh), Yogi Adityanath (Uttar Pradesh), A Revanth Reddy (Telangana), Bhagwant Mann (Punjab), Bhupendra Patel (Gujarat), Omar Abdullah (Jammu and Kashmir), Sukhvinder Singh Sukhu (Himachal Pradesh), Pema Khandu (Arunachal Pradesh) among others.

Meanwhile, the government has set up an 'informal group of ministers' led by Defence Minister Rajnath Singh to look into the issues arising due to the West Asia conflict, people aware of the development said.

# Govt working to minimise crisis impact on India: PM

## Slams Oppn For Rumours 'Causing Major Harm To Country'

▶Continued from P 1

Launching the BJP-led NDA's poll campaign at a rally in Kerala's Palakkad, Modi said many people from the state are working in regions hit by the conflict and "for us their safety remains a top priority". "Govt is working towards ensuring the crisis impact on India is minimal," he said.

However, he said, the people must remember the kind of statements Congress is making on sensitive issue of the conflict situation, terming the party "dangerous". The PM added, "Congress wants the lives of nearly one crore Indians living in Gulf countries to be put at risk, so that it can gain political advantage from it."

Slamming NDA's opponents — governing LDF and



PM Modi plays the chenda, a traditional cylindrical percussion instrument from Kerala, during a public meeting in Palakkad PTI

UDF — Modi alleged Kerala has been trapped for decades between the two fronts which have indulged in self-centered politics. "Between LDF and UDF, Congress and Communists, one is corrupt and the other is highly corrupt, communal and highly communal. The policies of LDF and UDF are for vote-bank politics," he said, noting "so many of our workers have lost their lives due to political violence here". "I pay my tributes to them," Modi said.

In his 'Mann Ki Baat' address, he slammed the opposition for spreading rumours, saying it is causing major harm to the country. He asked people to be vigilant and not be misled and said they should only trust the information being provided by govt.

Some opposition leaders have said govt may impose a lockdown to handle the crisis and will go for jacking up fuel prices after the assembly polls are over, claims which have been denied by the Centre.

"As always, I'm confident that just as we have overcome past crises with the strength of our 140 crore citizens, this time too, we will together emerge victorious from this difficult situation," he said.

# PM unveils chip facility, ₹20k-cr Guj infra projects

HT Correspondent
letters@hindustantimes.com

AHMEDABAD: Prime Minister Narendra Modi on Tuesday inaugurated Kaynes Technology's semiconductor manufacturing facility in Sanand, Gujarat and said India is strengthening its role as a reliable semiconductor supplier in the global market.

He said the inauguration of the facility strengthens India's push towards self-reliance and marks a landmark step in building a robust semiconductor ecosystem.

Modi also launched and dedicated multiple infrastructure projects across Gujarat worth over ₹20,000 crore, covering roads, railways, power, water supply and urban development. He also inaugurated the Ahmedabad-Dholera Expressway, an access-controlled highway built at a cost of over ₹5,100 crore. Addressing a public gathering at Vav-Tharad in Banaskantha district, Modi said, "The day is not far when Gujarat will emerge as a very big centre of renewable energy in the world."

Built with an investment of about ₹3,300 crore under the India Semiconductor Mission, the Sanand plant has a production capacity of 6.33 million units per day. The Prime Minister said it has already secured export orders, making it operational from day one.

Modi said India's decision to join the Pax Silica initiative, a US-led strategic coalition to secure the global silicon supply chain among trusted partner nations including Japan, South Korea, the UK and Israel, aims to strengthen the supply of critical minerals.

Calling the development a



PM Narendra Modi at a public meeting in Vav-Tharad. PTI

a sense, a new bridge has emerged today between Sanand and Silicon Valley; the plant in Sanand is now supplying Intelligent Power Modules to a company based in California. Today is a day for Make in India, Make for the World," the Prime Minister added.

Modi said India launched the Semiconductor Mission in 2021, which is not just an industrial policy but a declaration of India's confidence. "India launched Semiconductor Mission 2 in the last budget to make the country self-reliant in every sector of production," he added.

India's semiconductor market is currently estimated at around $50 billion and is projected to cross $100 billion by the end of the decade, according to industry estimates cited by PM Modi.

Meanwhile, in Gandhinagar, Modi inaugurated the Samrat Samprati Museum at Koba Teerth and criticised previous governments for neglecting India's manuscript heritage.

The museum, located at the Mahavir Jain Aradhana Kendra campus and supported by the Torrent Group, houses artefacts, manuscripts and historical collections related to Jainism. It is dedicated to Samrat

NEW FLIGHT TO UTTAR PRADESH'S GROWTH AND DEVELOPMENT: CM YOGI

# PM opens Jewar airport, flags ethanol push as shield against energy crisis



Prime Minister Narendra Modi with Uttar Pradesh Chief Minister Yogi Adityanath, Governor Anandiben Patel, Union Civil Aviation Minister K Rammohan Naidu and Deputy CM Keshav Prasad Maurya in Jewar on Saturday. PRAVEEN KHANNA

## Highlights role of farmers, especially sugarcane growers in Western UP

Neetika Jha
New Delhi, March 28

AMID THE war in West Asia, Prime Minister Narendra Modi Saturday stressed that India's ethanol push has helped the country through the global energy crisis, and acknowledged the crucial role that farmers, especially sugarcane growers in Western UP, have played in reducing the country's dependence on crude oil.

Speaking at the inauguration of Phase I of the Noida International Airport (NIA) in Jewar, Modi highlighted the significant role of ethanol produced from sugarcane and said, "If the production of ethanol had not increased, and its blending with petrol, then the country would have had to import an additional 4.5 crore barrels, which is almost 700 crore litres of crude oil, every year..."

The PM was accompanied by Uttar Pradesh Chief Minister Yogi Adityanath, UP Governor Anandiben Patel, Union

»CONTINUED ON PAGE 2


INSIDE

- IGIA VS NOIDA AIRPORT: SHORT-TERM COMPETITION BUT LONG-TERM NECESSITY
- DELHI JOINS MUMBAI IN TWO-AIRPORT CLUB: HERE'S WHAT IS DIFFERENT, THOUGH
- AIRPORT LAUNCHPAD FOR UP'S BRIGHT FUTURE: CM

PAGE 6

# India has become free from Naxals, declares Shah in LS

Saubhadra Chatterji
letters@hindustantimes.com



"The days of those who commit Maoist violence, of those who perpetrate Naxalism's violence, are over now" — AMIT SHAH, Union home minister

NEW DELHI: Union home minister Amit Shah on Monday declared India "Naxal-free" as he blamed the Congress and previous governments for the decades-long insurgency, criticised a landmark Supreme Court judgment that had banned a controversial militia, and snubbed sympathisers.

Shah's 84-minute address in the Lok Sabha came a day before the government's deadline of March 31, 2026 to eradicate left-wing extremism in the country. Shah said in the last three years, 4,839 Maoists surrendered, 706 were killed, and 2,218 arrested and jailed.

"The central committee and politburo of the Maoists had 21 ... 2024. Today, there is none. There were 37 state committee members in the Dandakaranya region. All of them have been either killed, arrested or surrendered. In Telangana, only one leader is absconding. We vowed that by March 31 we will uproot Naxalism. Now, I can say that ...

The minister defended the use of force against Maoists, saying those who fire bullets must be responded to with bullets, adding that 92% of the arms used by the rebels were taken from police stations.

"We improved policing, improved coordination between ... all-agency approach with the NIA, ED and intelligence agencies. We didn't leave any vacuum in governance," he said.

Shah also slammed former Supreme Court judge B Sudershan Reddy, who was part of an apex court bench that banned the Salwa Judum, a counterinsurgency citizens militia that was accused of human rights violations, in 2011.

"I condemn such judgement which is based on an ideology that led to killings of thousands of civilians. Ideology can't be above people's interest," Shah said.

Targeting the Congress, Shah alleged that former prime minister Indira Gandhi had accepted the support of the Maoists.

"Experts say without the support of those in power, the Red

UNION HOME MINISTER SPEAKS IN LOK SABHA DAY BEFORE MARCH 31 DEADLINE

# Maoists 'more or less wiped out' from Bastar, says Shah; task not over: Opp

## India has become 'Naxal-free', says Shah, blames Cong for 'Red Corridor'

Jatin Anand
New Delhi, March 30

DECLARING THAT the country has become "Naxal-free", Union Home Minister Amit Shah told Lok Sabha on Monday that "Na... free the country from Left Wing Extremism (LWE)', a day before his deadline for elimination of Maoist violence ends. Last year, he had announced that LWE would end in the country by March 31, 2026.



# புவியைப் பாதுகாப்பது

## ஒவ்வொருவரின் கடமை.

*உலகப் புவி தினம்: ஏப்ரல் 22.*

“माता भूमिः पुत्रोऽहं पृथिव्याः”, இந்த புவி நமது அன்னை; நாம் அவளின் குழந்தை." மனித சமூகத்திற்கும் இயற்கைக்கும் இடையேயான பிணைப்பை பிரிக்க இயலாது என்பதை இது குறிக்கிறது. இது மட்டுமின்றி, புவி வாழ்க்கையை மேம்படுத்தி, நமது வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான அத்தியாவசியச் சூழல்களை நீடிக்கச் செய்கிறது. இதனால்தான் ஆண்டுதோறும், ஏப்ரல் 22 உலகப் புவி தினமாகக் கொண்டாடப்படுகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பின் விளைவுகள் குறித்து கவனத்தை ஈர்ப்பது இந்நாள் கடைபிடிக்கப்படுவதன் நோக்கமாகும். அதே நேரத்தில், நமது புவியின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் அதிக அக்கறையையும் கருணையையும் காட்டப்பட வேண்டியது நமது கடமையாகும்.





“புவி தினத்தன்று, நமது புவியின் நலனுக்காகப் பணியாற்றும் அனைவரையும் நான் பாராட்டுகிறேன். இயற்கையுடன் நல்லிணக்கத்துடன் வாழும் நமது கலாச்சாரத்திற்கு இணங்க நீடித்த வளர்ச்சியை மேலும் முன்னெடுத்துச் செல்ல இந்தியா உறுதிபூண்டுள்ளது.

– நரேந்திர மோடி, பிரதமர்.


NEW INDIA SAMACHAR FORTNIGHTLY

**RNI NO.: DELENG/2020/78811 APRIL 16-30, 2026**

RNI Registered No DELENG/2020/78811 (Publishing Date: April 03,2026 Pages: 54)

EDITOR IN CHIEF
Dhirendra Ojha
Principal Director General
Press Information Bureau, New Delhi

PUBLISHED:
Kanchan Prasad
Director General, on behalf of
Central Bureau Of Communication

PUBLISHED FROM:
Room No–278, Central Bureau Of Communication, 2nd Floor, Soochna Bhawan, New Delhi -110003